# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**


| மலர்: IX இதழ்: 8 | பிப்ரவரி 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/- |
| --- | --- | --- | --- |
| Vol.: IX Issue: 8 | February 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20 |




**மக்கள் சேவை கடமை! காவல்துறைக்கு தேவை கண்ணியம், கட்டுப்பாடு!**

**– ஆசிரியர் கடிதம்**

**நதிகள் இணைப்பே நாட்டை வளமாக்கும்!**

**– இயற்கை வேளாண் அறிஞர் பூமி ஞானசூரியன்**

**உலகம் உள்ளவரை அன்னதானம்!**


**-பிரேமலதா விஜய்காந்த் உறுதி!**

**காற்றில் கரைந்த இசை வாணி பவதாரிணி!**

**தி.மு.க. போடும் கூட்டணி கணக்கு! கூட்டி கழிச்சு போடும் மக்கள் கணக்கு!**

**- கள ஆய்வில் மித்ரா டைம்ஸ்!**

# "AYODHYA RAM TEMPLE"



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

One of the biggest temples to be built in India after Independence, the Ayodhya Ram Temple is touted to be a combination of new-age technological conveniences and age-old Indian traditions.

Between 1528 and 1529, the Babri Masjid was built by the Mughal emperor Babur. However, members of the Hindu community also sought possession of the site, claiming it to be the birthplace of Lord Ram. The site subsequently became a disputed site and a long, legal battle ensued. Ending the title dispute on November 9, 2019, the Supreme Court accepted the 2.77 acres of disputed location as the birthplace of Lord Ram, paving the way for the construction of the Ram Mandir.

The foundation of the temple is constructed with a 14-metre- thick layer of roller-compacted concrete (RCC), giving it the appearance of artificial rock. No iron is used anywhere in the construction. For protection against ground moisture, a 21-foot-high plinth has been constructed with granite.

The core of the temple is built using pristine white Rajasthan Makrana marble. Karnataka's Charmouthi sandstone has been used to carve out the exquisite idols of the deities. On the other hand, pink sandstone from Rajasthan's Bansi Paharpur has been used in entrance gate's imposing figures. Black stone used for Lord Ram's idol originates from Karnataka. From the Himalayan foothills, Arunachal Pradesh and Tripura have offered intricately carved wooden doors and handcrafted fabrics, standing as gateways to the divine realm. Brassware hails from Uttar Pradesh, while polished teakwood has been sourced from Maharashtra.







Built using India's traditional and indigenous technology, the temple complex has a sewage treatment plant, water treatment plant, water supply for fire safety and an independent power station.

The Great epic, Ramayana is said to start and ended in this sthalam. The avathaar of Sri Ramar explains how an ordinary human should be and it explains the Sathya path which leads him to the final mukthi.

This Divyadesam is said to be one among the 7 Mukthi Kshetrams. These 7 mukthi sthalam represents different part of the body of Sriman Narayanan. Avanthi is represented as the divine feet, Thiruvadi of the perumal, Kachipuram, represents the waist, Thirudwaraka represents the Nabhi (the lower stomach), Maya represents the Thiru maarbhu (the chest) Madhura represents the neck, Kasi represents the nose and finally, this Ayodhya Kshetram represents the Head of the perumal. Thats the reason it is said to be one of the most important among the 7 Mukthi kshetram.

Sri Ramar by killing Ravanan explains to the world that all the life led and its destiny ends only through ones character. Sri Ramar led his life by thinking of only one life parter, Seetha Piratti, his wife along with his bow (vil). He followed his previous generationed member and followed their words. Thus, the Rama avathaar explains about one word, one bow and one wife and all the characters are found inside Sri Ramar. When Emperumaan took the human avathaar, as Sri Ramar, Periya piratti came as his wife as Seetha piratti, the Aadhiseshan as his brother, Lakshmanan and perumal's sangu and chakkaram took their birth as "Bharadhan and Sathrukkanan. Hanuman born as the hamsam of Sivaperumaan.

# மக்கள் சேவை கடமை! காவல்துறைக்கு தேவை கண்ணியம், கட்டுப்பாடு!

அன்புடையீர் வணக்கம்!

திரைப்படக் காட்சி ஒன்றில் வடிவேலு அரசு பேருந்து ஒன்றின் பின்பக்கம் இது உங்கள் சொத்து என்று எழுதி இருப்பதை காட்டி என்னுடைய சொத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஒருவரிடம் பேரம் பேசுவார்.

"காவல்துறை உங்கள் நண்பன் என்று ஒரு காலத்தில் குறும்படம் எடுக்கப்பட்டு காவல்துறையினருக்கும் பொது மக்களுக்கு மத்தியில் மரியாதை கலந்த பய உணர்வு ஏற்படுத்தப்பட்டது. மக்களுக்கு சேவை செய்யவே தங்களுடைய கடமையை நிறைவேற்ற காவல் துறையில் பொறுப்பேற்றுள்ள சில அதிகாரிகளின் கண்ணியம் தவறுகின்ற கட்டுப்பாடு மீறுகின்ற செயல்களால் ஒட்டுமொத்த காவல்துறைக்கு கெட்ட பெயர் வருகிறது என்பதை மறுப்பதற்கு இல்லை. இந்தத் துறை முதல்வர் நேரடி கண்காணிப்பில் இருக்கிறது என்பதற்காக அவரால் நேரடியாக இதை கண்காணிக்க முடியாது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டி உள்ளது. ஆனால் எந்த சம்பவம் காவல்துறையில் நடந்தாலும் அதற்கு பொறுப்பு ஏற்று முதல்வரை ராஜினாமா செய்ய சொல்ல வேண்டும் என்று எதிர் கட்சிகள் சொல்வதும், காவல்துறையினரின் செயல்பாடுகள் முதல்வரின் அரசியல் செல்வாக்கு சில நேரங்களில் சறுக்குவதும் நாம் கண்கூடாக காண்கிறோம்.

சென்னை நகரின் மையப் பகுதியை காட்டிலும், புறநகர் பகுதிகள் வேகமாக விரிவடைந்து செல்வதாலும், மக்கள் குடியேற்றம் அதிகரித்து வருவதினாலும் காவல்துறையின் கண்காணிப்பையும், நடவடிக்கையையும் அப்பகுதிகளில் தீவிரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

அதேவேளையில் 137 காவல் நிலையங்களோடு செயல்பட்ட சென்னை பெருநகர காவல்துறை, புறநகர் பகுதியை தனிக்கவனம் செலுத்த முடியாத நிலையில் இருந்தது. இதன் விளைவாக நகருக்குள் நடைபெறும் சட்டவிரோதச் செயல்களை காட்டிலும், புறநகர் பகுதிகளில் சட்டவிரோத செயல்கள் அதிகரித்த வண்ணம் இருந்தன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், சென்னை பெருநகர காவல்துறையை பிரித்து தாம்பரம்,ஆவடி என புதிதாக இரு காவல் ஆணையரகங்கள் அமைக்கப்பட்டது.

ஆவடி காவல் ஆணையராக திரு.கி. சங்கர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அந்தப் பகுதியில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு வருவதாக பொதுமக்கள் மத்தியிலே நல்ல பெயர் இருந்து வருகிறது. ஆனால் அந்தப்



பெயரை கெடுக்கும் விதமாக காவல் உதவி ஆணையர் திரு.ஜவஹர் அவர்கள் செயல்பாடு காவல் துறையின் கண்ணியத்தை குலைக்கிறது. அவரது கட்டுப்பாடு இல்லாத செய்தால் காவல்துறைக்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது.

ஏற்கனவே வீரப்பன் குழுவில் ஒரு காவலராக இருந்து வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு தனக்கு பதவி உயர்வு கிடைக்கவில்லை என்பதற்காக தனக்கு அளிக்கப்பட்ட சான்றிதழையும் பதக்கங்களையும் அரசு திருப்பித் தருவதாக சமூக வலைதளங்களில் பதிவிட்டதால் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். வீரப்பனை என்கவுண்டர் பண்ண நினைப்பில் இப்பொழுதும் நான் யாரை வேண்டுமானாலும் என்கவுண்டர் பண்ணுவேன் என்கின்ற மன ரீதியில் அவர் செயல்படுகிறார் என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எந்த வழக்கையும் கமிஷனர் ஆபீஸில் கம்ப்ளைன்ட் கொடுக்க சொல்லி அது தன்னிடம் வருமாறு பார்த்துக் கொண்டு அது தொடர்பான நபர்களிடம் தொடர்ந்து தொலைபேசியில் மிரட்டி உடனே வர வேண்டும். உடனே வர வேண்டும் என்று அடிக்கடி தொந்தரவு செய்து தவறான வழியில் பணம் பறிக்கும் வேலையில் ஈடுபடுகிறார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது குறித்து பலமுறை உள்துறை செயலருக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. பூந்தமல்லி பகுதியில் இவரது நிர்வாக சீர்கேட்டின் காரணமாக கஞ்சா போதை பொருட்கள் நடமாட்டம் அதிகரிக்கிறது. அது ஈடுபடுபவர்களிடம் இவர் தொடர்பில் உள்ளார். இது குறித்து உயர் அதிகாரிகள் ஏதேனும் விசாரித்தால் யாரைப் பற்றியாவது தவறாக சொல்லி அவர்களை நம்ப வைத்து விடுகிறார்





உதவி ஆணையர் திரு.ஜவஹர்

இப்படிப்பட்ட அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டு காவல்துறையின் கீழ்மட்ட காவலர்கள் சங்கடப்பட்டு பணியாற்றுகிறார்கள். தேர்தலுக்கு முன்பாக மூன்று மாதங்களில் பணி ஓய்வு பெறப்போகும் இவரை சட்டம் ஒழுங்கு பிரிவில் வைத்திருப்பது குறித்து ஆணையர் ஆலோசிக்க வேண்டும். எனவே உளவுத்துறை மூலமாக விசாரணை செய்து நடவடிக்கை எடுத்தால் காவல் துறையின் மீதான களங்கம் நீங்கும் முதல்வர் இதை செய்வார் என்று நம்புகிறோம். முதல்வருக்கு காவல் ஆணையர் கடிதம் எழுதுவார் என்று நம்புகிறோம்.

வேலியே பயிரை மேய்ந்தது என்பது போல,மோட்டார் சைக்கிளில் வந்து பெண்களிடம் நகை பறித்த ஏட்டு குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருசக்கர வாகனத்தில் சென்று செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட சபரிகிரி என்ற காவலர் கைது, கோவை செட்டிபாளையம் காவல் நிலையத்தில் பணியாற்றும் சபரிகிரி, பொள்ளாச்சி சென்று வழிப்பறி செய்தநிலையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.2003ல் காவலராக பணியில் சேர்ந்தவர் தலைமைக்காவலராக செட்டிப் பாளையத்தில் சிறப்பு புலனாய்வு பிரிவில் மாற்றப்பட்டு இருக்கிறார். அவர்தான் இப்போது செயின் பறிப்பில் ஈடுபட்டிருக்கிறார்.

மக்களை பாதுகாப்பதில் காவல்துறையில் 90% சதவிகித அதிகாரிகள், அலுவலர்கள், காவல் நிலைய ஆய்வாளர்கள் துணையாய்வாளர்கள் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள் ஒரு சில சதவீதம் செய்கின்ற அத்துமீறல்களால் எல்லோருக்கும் கெட்ட பெயரை என்பதை புரிந்து மக்கள் சேவையே தங்கள் கடமை என்பதை காவலர்கள் உணர வேண்டும் பொதுமக்களும் அவர்களுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.



பொள்ளாச்சி சபரிகிரி

– எம்.எஸ்.மூர்த்தி

# உள்ளே...




தி.மு.க. போடும் கூட்டணி கணக்கு! கூட்டி கழிச்சு போடும் மக்கள் கணக்கு! - கள ஆய்வில் மித்ரா டைம்ஸ்! 9



தன் வரலாற்றில் தானே நடித்த கூலித் தொழிலாளி! 15




உயர்ந்து வரும் விவசாய நிலங்களின் மதிப்பு! 24



பின்னல் அலங்காரம் அல்ல: வாழ்க்கைத் தத்துவம் 30



வழியோர வியாபாரிக்கு உதவலாமே! 43



நீங்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா! 51




# தொழில் முனைவோராக மாறிய கல்லூரி தோழிகள்!

திருப்பூரை சேர்ந்த சூர்ய பிரபா, சக்திபிரிய தர்ஷினி, காயத்ரி ஆகிய மூவரும் கல்லூரி தோழிகள். இவர்கள் திருமணத்திற்கு பிறகு குழந்தைகளுக்கு தூய்மையான பருத்தியில் ஆன ஆடைகளை தேடியுள்ளனர். பெரும்பாலும் செயற்கை இழைகள் கொண்ட குழந்தைகளின் மென்மையான சருமத்திற்கு தீங்கு ஏற்படுத்தும் ஆடைகளே சந்தையில் கிடைத்தன. அப்போது மூன்று பேரும் இணைந்து தங்கள் குழந்தைகளுக்காக பருத்தி துணிகளை வாங்கி தாங்களாகவே வடிவமைத்து துணிகளை தைத்து பயன்படுத்தியுள்ளனர். இது தான் அவர்களுக்கு பின்னாளில் அட்டகாசமான தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி தந்தது. மூன்று தோழிகளில் காயத்ரி பேஷன் டெக்னாலஜி பயின்றவர். அவரே துணிகளை தைக்கும் பணியை தொடங்கினார். மற்ற இருவரும் பருத்தி துணிகளை தேர்வு செய்வது, வாங்குவது, கட் செய்வது போன்ற பணிகளை மேற்கொண்டனர். முதலில் தங்கள் குழந்தைகளுக்கு என தொட்டில், ஆடைகள் ஆகியவற்றை தயாரித்தனர். பின்னர் நண்பர்களின் குழந்தைகள், உறவினர்கள், அக்கம்பக்கத்தினர் என படிப்படியாக இவர்களுக்கு ஆர்டர்கள் வரத் தொடங்கின. 2015ஆம் ஆண்டு சூர்யாவின் வீட்டில் இருந்த ஒரு சிறிய அறையில் தையல் இயந்திரத்தை கொண்டு ரூ.5,000 முதலீட்டில் பருத்தி துணிகளை வாங்கி இவர்கள் தொழிலை தொடங்கினர். தொட்டில், அன்றாடம் குழந்தைகளுக்கு பயன்படுத்தும் ஆடைகள் என தைத்து விற்பனை செய்து வந்துள்ளனர். பீ லிட்டில் வளர்ச்சிக்கு முக்கிய காரணமே அவர்களின் பொருட்கள் தரமானது என்பது தான். தரமான பொருட்களினால் திருப்தி அடையும் ஒரு வாடிக்கையாளர் மேலும் 5 வாடிக்கையாளரை அழைத்து வருவார் என்ற சொற்றொடரே இவர்களின்



# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 09 பிப்ரவரி 2024 டைம்ஸ்-8

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
**கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுகந்தினா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**
**6374285644**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


தொழில் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது. தற்போது பீ லிட்டில் நிறுவனம் வைரா பேபி பொடிக் என்ற நிறுவனத்தின் பார்ட்னர்சிப் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பீ லிட்டிலுக்கு திருப்பூர், கோவை, சென்னையில் கடைகள் உள்ளன. தற்போது இந்த நிறுவனத்தின் மதிப்பு ரூ.7.5 கோடி. பீ லிட்டிலில் குளோபல் ஆர்கானிக் டெக்ஸ்டைல் தரநிலை அளித்த பருத்தி துணிகளை மட்டுமே பயன்படுத்தி ஆடைகளை தயாரிக்கின்றனர். தொட்டில் துணிகள் தொடங்கி, போர்வைகள் உள்ளிட்ட சுமார் 100 பொருட்களை விற்பனை செய்கின்றனர். மற்ற பிராண்டுகளில் இருந்து பொம்மைகள் மற்றும், டீத்தர்கள், பெட் புரோடெக்டர்ஸ் ஆகியவற்றை இங்கிருந்து வாங்க முடியும். இது தவிர குழந்தை பெற்றெடுத்த தாய்க்கு தேவையான மேட்டர்னிட்டி பேண்ட்ஸ், நாப்கின்கள், ஃபீடிங் பில்லோஸ் ஆகியவையும் பீலிட்டிலில் கிடைக்கின்றன.

லாக்டவுனில் கிடைத்த வளர்ச்சி: 2015இல் தொழிலை தொடங்கிய இவர்கள் 2016இல் பீ லிட்டிலுக்கு என பேஸ்புக் பக்கத்தை உருவாக்கினர். அதில் பல வாடிக்கையாளர்கள் கிடைத்துள்ளனர். பின்னர் 2018இல் ஆளுக்கு ரூ.50,000 முதலீடு செய்து கோவையில் முதல் கடையை திறந்தனர். கொரோனா லாக்டவுன் காலத்தில் பீ லிட்டிலுக்கு என இணையதளத்தை உருவாக்கினர். அது தொழில் வளர்ச்சிக்கு கைகொடுத்துள்ளது. தற்போது தங்களுக்கு கிடைக்கும் ஆர்டர்களில் 60% ஆன்லைனில் கிடைப்பதாக தெரிவிக்கின்றனர்.

முதலில் 2 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான பொருட்களை விற்பனை செய்து வந்த நிலையில் தற்போது 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கான பொருட்களையும் விற்பனை செய்கின்றனர். வெறும் 3 தோழிகள் இணைந்து உருவாக்கிய பீலிட்டில் நிறுவனத்தில் தற்போது 35 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

பெண்கள் ஒன்று சேரும்போது தேவையில்லாததை பேசிக்கொண்டு இருப்பார்கள் என்கிற எண்ணத்தை மாற்றி படித்த காலத்தில் ஒன்றாக இருந்தவர்கள் இப்போது தொழிலிலும் ஒன்றாக இருந்து சாதிக்கிறார்கள் என்பதை எண்ணி மித்ரா டைம்ஸ் அவர்களை வாழ்த்துகிறது.

**- சுஜாதா மூர்த்தி**

# தி.மு.க. போடும் கூட்டணி கணக்கு! கூட்டி கழிச்சு போடும் மக்கள் கணக்கு!

## - கள ஆய்வில் மித்ரா டைம்ஸ்!



2024 ஆம் ஆண்டு மே மாதம் மத்தியில் புதிய அரசு அமையவிருக்கிறது. அதற்கான நாடாளுமன்ற தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது. அந்த நேரத்தில் தி.மு.கவின் மூன்றாண்டு காலம் ஆட்சி நிறைவு பெறுகிறது. பாஜகவுக்கு தமிழ்நாட்டில் இடம் இல்லை என்று இதுவரை போட்டியிட்ட தேர்தல்களில் திமுக சவால் விடுத்து அதற்கு ஏற்ப ஒரு நாடாளுமன்ற தொகுதி கூட தமிழகத்தில் இருந்து பெற முடியவில்லை.இதை ஒரு சாதகமாகவும், தாங்கள் அமைத்துள்ள கூட்டணி வலுவாக இருப்பதாக கொண்டுள்ள உறுதியும் தாங்கள் மூன்றாண்டுகளாக மக்களுக்கு செய்கின்ற சாதனைகள் தங்களுக்கு வாக்குகளாக மாறும் என்கிற கணக்கையும் தி.மு.க போட்டு காயை நகர்த்தி வருகிறது. ஓரளவுக்கு அது சரியாக இருக்கும் என்று தோன்றினாலும் ஒரு படத்திலேயே ராதா ரவி சொன்னதைப் போல கூட்டி கழிச்சி பாருங்க கணக்கு சரியா வரும் என்று சொன்னதைப்போல திமுக போடும் கூட்டணி கணக்கையும் மக்கள் போடும் கூட்டிக் கழித்து பார்க்கும் கணக்கையும் நம்முடைய மித்ரா டைம்ஸ் செய்தியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டார்கள். அதனுடைய தொகுப்பாக இந்த கட்டுரை அமைந்துள்ளது.

2021 சட்டமன்ற தேர்தலில் "ஸ்டாலின் தான் வராரு விடியல் தரப்போறாரு"என்ற முழக்கத்துடன் தேர்தலை சந்தித்தது அ.தி.மு.க. தொடர்ந்து இரண்டு முறை அதாவது பத்தாண்டு காலம் ஆட்சியை அ.தி.மு.க தொடர்ந்தது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின் அந்தக் கட்சியின் பிளவு, அதனால் நடுநிலையாளர்கள் தி.மு.கவுக்கு ஆதரவாக நின்றார்கள். அடுத்து வரும் தேர்தல்களில் அது பாராளுமன்றத் தேர்தல் ஆனாலும் சட்டமன்றத் தேர்தல் ஆனாலும் திமுகவின் பக்கம் நடுநிலையாளர்கள் ஒட்டுமொத்தமாக நிற்பார்கள் என்பது கேள்வியாகவே இருந்து கொண்டிருக்கிறது. கட்சிக்காரர்கள் வாக்கு நிச்சயமாக மாறுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் நடுநிலையாளர்கள் என்று சொல்லப்படுகின்ற ஆசிரியர்கள் ,அரசு ஊழியர்கள் ,தொழில் முனைவோர்கள் ஆகியோர் திமுகவின் மீது அதே அபிப்பிராயத்தை வைத்திருக்கிறார்களா என்று கேட்டால் நிலைமை சற்று யோசிக்கத் தான் வைக்கிறது.

தமிழ்நாடு அரசு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில நிர்வாகிகள் "தி.மு.க. அரசு தேர்தலின் போது

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அரசு மீது கடுமையான அதிருப்தியில் உள்ளனர். இந்த அதிருப்தி வர இருக்கும் தேர்தல்களில் நிச்சயம் எதிரொலிக்கும். ஆட்சி பொறுப்பு ஏற்று 3ஆண்டுகளை நெருங்கி கொண்டிருக்கும் நிலையிலும் பழைய ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்றுவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ராஜஸ்தான், பஞ்சாப், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களும் புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த போவதாக அறிவித்துள்ளது. ஆனால் தேர்தல் வாக்குறுதி அளித்த தி.மு.க. அரசு அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இதனால் தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தி.மு.க. அரசின் மீது கடுமையான அதிருப்தியிலும், ஏமாற்றத்திலும் உள்ளனர். "என்கிறார்கள்.

அடுத்து பத்திரப்பதிவுத்துறை. நிலமோ இடமோ வாங்கி அதை பதிவு செய்ய வேண்டும் என்று எண்ணி பத்திரப்பதிவு அலுவலகத்துக்கு செல்லும்போது அங்கு முத்திரைத்தாள் கட்டணம், நில மதிப்பீடு, வழிகாட்டி நெறிமுறைகள் என்று பல்வேறு வழிகளில் வாங்குகிற நிலம் இடத்துக்கு பாதி பத்திரப்பதிவுக்கே செலவாகி விடுமோ என்று பேசக் கூடிய அளவுக்கு பத்திரப்பதிவு துறையில் பணம் கட்ட வேண்டி உள்ளது. இது நடுநிலையாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதைப்போலவே டாஸ்மாக் துறையில் விற்பனையை இலக்கு வைத்து செயல்படுவதால் குடிகாரர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டதோ என்ற சூழல் நிலவுகிறது. பெண்களுக்கு அரசு சார்பில் வழங்குகின்ற பணம் டாஸ்மாக் வழியாக அரசுக்கு திரும்பச் செல்கிறது என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் ராமதாஸ் சொன்னதை பொதுமக்கள் பலரும் ஆமோதிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் வடக்கு மாநில இளைஞர்களின் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது அம்பத்தூரில் போலீஸ்காரர்களையே அடித்து விரட்டுகின்ற அளவுக்கு கோடிக்கணக்கான பேர் தமிழ்நாட்டில் எந்தெந்த வழியிலேயும் வட நாட்டு இளைஞர்கள் உள்ளே நுழைந்து விட்டார்கள். ரயில், பஸ், பொது இடங்கள் என்று பல்வேறு இடங்களில் பரவி கிடப்பதால் தமிழகத்தில் ஒரு விதமான பதட்டமும் அச்சமும் நிலவுகிறது. வடநாட்டு இளைஞர்கள் வருகையையும் அவர்களைப் பற்றிய விவரங்களையும் அரசு முழுமையாக கவனம் செலுத்தி சேகரிக்காத காரணத்தால் வரும் தேர்தலில் அவர்களால் என்ன நடக்குமோ என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் நிலவுகிறது.



மத்திய அரசோடு தொடர்ந்து அரசியல் ரீதியாக மோதல் போக்கை கடைபிடிப்பதால் குறிப்பாக கவர்னரை வைத்து மத்திய அரசு இங்குள்ள அதிகாரிகளை தங்களின் கண்காணிப்பாளர்களாக வைத்திருக்கிறார்கள் என்ற எண்ணம் அடிமட்ட ஊழியர்கள் மத்தியிலே எழுந்துள்ளது. முதல்வர் அதிகாரிகளை முழுமையாக நம்புவதால் தமிழ்நாட்டில் நடைபெறும் பல்வேறு விஷயங்களை குறிப்பாக அரசுக்கு எதிராக நிலவுகின்ற பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை அவரது கவனத்திற்கு கொண்டு செல்லாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

அரசியல் ரீதியாக கட்சியை பலப்படுத்தும் பணியில் உதயநிதி உள்ளிட்டவர்கள் இருக்கிறார்கள் என்று கட்சிக்காரர்கள் சந்தோஷப்பட்டு கொண்டாலும் தாங்கள் சொல்வதை அதிகாரிகள் கேட்பதே இல்லை என்கிற வெளியே சொல்ல முடியாத உள்ளுக்குள் புழுங்குகின்ற உள்ளாட்சி பிரதிநிதிகள் எம்எல்ஏக்கள் சில இளநிலை அமைச்சர்கள் இருக்கிறார்கள். இது மேம்போக்காக எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று நினைத்தால் அது தி.மு.க அரசு தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறது என்று அர்த்தம். உடனடியாக முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் பொதுமக்களின் கருத்தை அறிவதற்கான ஒரு குழுவை நியமித்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பாராளுமன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றாலும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கடுமையாக போராட வேண்டி இருக்கும். நடிகர் விஜய் புதிதாக தமிழக வெற்றி கழகம் என்ற கட்சியை ஆரம்பித்துள்ள சூழலில் சிந்திக்க வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது என்பதை அந்தக் கட்சியினரும் உணர வேண்டும்.

**– மித்ராடைம்ஸ் செய்தியாளர்கள் குழு**

# நதிகள் இணைப்பே நாட்டை வளமாக்கும்!

**- இயற்கை வேளாண் அறிஞர் பூமி ஞானசூரியன்**



உலகத்தையே இன்று மிரட்டிக் கொண்டிருக்கும் வார்த்தைகள் இரண்டு. ஒன்று தீவிரவாதம் இன்னொன்று பருவக்கால மாற்றம்.

நாம் வீடுகளில் தொட்டிச்செடிகள் வளர்ப்பதுமாதிரிதீவிரவாதத்தை சிலநாடுகள் தீனிபோட்டு வளர்க்கின்றன, அவர்கள் தீவிரவாதத்தை வளர்த்து விடுகிறார்கள், தொல்லை கொடுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளன சில நாடுகள்.

ஆயுதம் எடுத்தவன் ஆயுதத்தாலே அழிவான் என்பது அனுபவ மொழி. மனிதர்களுக்கு மட்டுமல்ல, நாடுகளுக்கும் அது பொருந்தும். உலகத்தை மிரட்டும் இரண்டாவது வார்த்தை பருவக்கால மாற்றம். இது தீவிரவாதத்தை விட தீவிரமானது, ஆபத்தானது, அழிவுதரக்கூடியது.

பருவக்கால மாற்றம் என்றால் என்ன?

காற்று , மழை, வெயில், பனி, ஈரப்பதம் , அத்தனையும் பருவநிலைகள்.

ஆடி மாதம் வீசவேண்டிய கடுங்காற்று ஆவணி மாதம் வீசினால் அது பருவக்கால மாற்றம். கார்த்திகையில் பெய்ய வேண்டிய கனமழை வைகாசியில் பெய்தால் அது பருவக்கால மாற்றம். சித்திரை வைகாசியில் அடிக்கவேண்டிய வெயில், ஐப்பசி கார்த்திகையில் அடித்தால் அது பருவக்கால மாற்றம்.

மாதம் மும்மாரிபெய்தது. நமது பாட்டன் பூட்டன் காலத்தில். அந்தக் காலத்தில் மழை சீராக பெய்தது. சிறப்பாக பெய்தது. மாதம் மூன்று மழை என்றால், பன்னிரண்டு மாதத்தில் 36 மழை. அப்போது ஓராண்டில் பெய்தமழை, இப்போது ஒரே வாரத்தில் அத்தனை மழையையும்பெய்துவிட்டு மீதமுள்ள 51 வாரங்கள் ஓய்வெடுத்துக் கொள்கிறது. ஆக 52 வாரங்களில் பெய்தமழை ஒரே வாரத்தில் பெய்வதும் பருவக்காலமாற்றம்தான்.

மனிதர்களாகியநாம்இயற்கையைமுறையாக பாதுகாக்கவில்லை, பராமரிக்கவில்லை, மேம்படுத்த வில்லை. அதற்கு பதிலாக நாம் இயற்கையை மாசுபடுத்துகிறோம்.இயற்கையை மிதமிஞ்சி பயன்படுத்துகிறோம். இயற்கையை அழிக்கவும் செய்கிறோம். இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டுமென்றால், நாம் அவற்றை புரிந்துக்கொள்ள வேண்டும். அதனால் ஏற்படும் பிரச்சனைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

இவை எல்லாம் 'கவர்மெண்ட் வேலை' என்று ஒதுக்கிவிடாமல் இந்த சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் பணிகளில் ஈடுபட வேண்டும்.

இயற்கை வளங்களை பாதுகாக்க நதிநீர் இணைப்பது ஒன்றுதான் சாத்தியம். நதிகளை இணைக்காமல் நாட்டின் வளத்துக்கு சாத்தியமே இல்லை என்பதை உணர்ந்தால் நாடு செழிப்படையும். மீண்டும் மோடி மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கப் போகிறார் என்று நம்பிக்கை உருவாக்கும் அதே நேரத்தில் நதிகளை இணைப்பார் என்ற நம்பிக்கையையும் நாம் பெற வேண்டும். வருங்கால வளர்ச்சிக்கு அது நலமாக அமையும்.

**– பூமி ஞானசூரியன்,**

பூமி இயற்கைவள பாதுகாப்பு மையம்

தெக்குப்பட்டு, திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு

# உலகம் உள்ளவரை அன்னதானம் பிரேமலதா விஜயகாந்த் உறுதி !



**தே**முதிக தலைவர் நடிகர் விஜயகாந்த் மறைந்த போது அஞ்சலி செலுத்த வந்த அனைவரும் சொன்ன ஒரு விஷயம் அவர் அலுவலகத்துக்கு வந்தால் சாப்பாடு போடாமல் அனுப்ப மாட்டார். சென்னைக்கு வாய்ப்பு தேடி வந்தவர்கள் கூட வாய்ப்பு தேடி விட்டு இங்கு வந்து சாப்பிட்டு விட்டு போவார்கள் என்று பலர் தெரிவித்தார்கள். நடிகர் லிவிங்ஸ்டன் இதை உறுதிப்படுத்தும் விதமாக தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.

நான் ஒரு முறை அவரிடம் கதை சொல்ல அவரோட ஆபிஸுக்கு போயிருந்தேன். அங்க நடந்ததை பார்த்து எனக்கு வியப்பாக இருந்தது. தினமும் ஒரு 300 பேருக்காவது சாப்பாடு போடுவார். அதனாலேயே மதியம் என்றால் அவ்வளவு ஜனம் வந்து நிக்கும். தினமும் அத்தனை பேருக்கு சாப்பாடு பரிமாறுவாங்க. நான் அதை நேரடியாக பார்த்து இருக்கிறேன். என்றார்.

சினிமாக்கு வெளில இருக்கிறவங்க 'இவரை ஏன் கேப்டன்னு கூப்பிடறாங்க'னு கேப்பாங்க. உலகிலுள்ள அனைத்து தமிழர்களுக்குமான தலைவன், உண்மையான கேப்டன். அவரோட வீட்டுக்குப் போனதும் முதல் கேள்வியாக 'சாப்டீங்களா'ன்னு கேட்பாரு. நான் உயிருக்குப் போராடிட்டு இருந்த சமயத்துல, 'தம்பி காசு வச்சுருப்பாணான்னு தெரில, அவனுக்கு நல்ல மருத்துவத்தைப் பாருங்க'னு தயாரிப்பாளர்கிட்ட சொன்னார். சினிமாவுக்கும், அரசியலுக்கும் முன்னுதாரணமாக இருந்தவர். நடிகர் சங்கம் இன்னைக்கு கடன்ல இருக்கு. ஆனா, அப்போ கடன்ல இருந்து மீட்டு எடுத்துட்டு வந்தார். என்று நடிகர் ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

"தன் அலுவலகத்தில் ஏகப்பட்ட பேருக்கு சாப்பாடு போட்டிருக்கிறார். பசிக்குதா, கையில காசு இல்லையா, கேப்டன் அலுவலகத்திற்கு சென்றால் வயிறு நிறைய சாப்பாடு போடுவார், வாங்க போகலாம் என மக்கள் நம்பிக்கையுடன் சென்றார்கள்.

விஜயகாந்த் அவர்களின் அரசியல் பயணத்தை அவரது மனைவி பிரேமலதா விஜயகாந்த் தொடர்கிறார் என்றாலும் விஜயகாந்தின் தன்னலமற்ற குணமான பிறருக்கு உணவளிக்கும் குணத்தை மற்றவர்களுக்கு முன் உதாரணமாக கொண்டு விளங்கிய அந்த நல்ல உள்ளத்தை அவரது ஆத்மா சாந்தி அடையும் வகையில் ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார்.

தேமுதிக அலுவலகத்தில், மறைந்த விஜயகாந்தின் திருவுருவப் படத்தை, விஜயகாந்தின் மனைவியும், தேமுதிக பொதுச் செயலாளருமான பிரேமலதா விஜயகாந்த் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, தொண்டர்கள் மத்தியில் பேசிய பிரேமலதா விஜயகாந்த், "தொண்டர்களை வாழ வைத்து அழகு பார்க்கும் அன்னையாகத்தான் இனி என் வாழ்வு இருக்கும். இந்த பிரபஞ்சம் இருக்கும் வரை இதுதான் நம் கோவில். இன்று போடும் அன்னதானம் இந்த பிரபஞ்சம் இருக்கும் வரை தொடரும்.

பலரும், மறைந்த விஜயகாந்தின் பெயரில் ட்ரஸ்ட் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். உங்களது விருப்பப்படி, ட்ரஸ்டை நான் அவர் மறைந்த அன்றே ஆரம்பித்துவிட்டேன். வள்ளல் விஜயகாந்த் மெமோரியல் அன்னதானம் ட்ரஸ்ட் என்ற பெயரில் அறக்கட்டளை தொடங்க வேலைகள் அன்றே ஆரம்பித்துவிட்டது" என்று தெரிவித்தார்.

பலர் வயிறார உண்பதன் மூலம் விஜயகாந்த் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் அவர்கள் தொண்டர்களிடத்திலே என்றும் நிலைத்திருக்கும்.

– கவிஞர் சுகந்தீனா

# காற்றில் கரைந்த இசை வாணி பவதாரிணி!



இசைஞானி குடும்பத்தில் பிறந்த இசை ராணி பவதாரணி.

பவதாரிணி, 'ராசய்யா' படத்தின், 'மஸ்தானா... மஸ்தானா' பாடலில் அறிமுகமான போது அந்த இளம் குரல் அப்படி வசீகரித்தது.

தேவா இசையில், 'துடிக்கின்ற காதல்' பாடலிலும் அதே வசீகரம். தேசிய விருது வென்ற, 'மயில் போல' பாடல் எளிமையானாலும் அழகானது. தங்கர் பச்சானின் 'அழகி' படத்தில் கார்த்திக்குடன் இணைந்து அவர் பாடிய 'ஒளியிலே' பாடல் காட்சிகளின் உணர்வைக் கிளர்த்தியது.

*'உயிரிலே கலந்தது நீ இல்லையா*

*இது நெசமா நெசமில்லையா அது*

*நெனவுக்கு தெரியலையா*

*கனவிலே நடக்குதா கண்களும்*

*காண்கிறதா காண்கிறதா "*

என்கிற வரிகளை பவதாரிணியின் குரல் ஒலித்தபோது இளமையைக் கடந்து கொண்டிருந்தவர்களுக்கும் அதைக் கடந்து வந்தவர்களுக்கும் நினைவுகளை மீட்டிக்கொடுத்தது. மூவரில் ராஜாவின் செல்லக் குழந்தையான பவதாரிணி, இதுபோன்ற பாடல்களின் வழியாக ரசிகர்களின் செல்லக் குரலாகவும் மாறிப்போனார்.

அதிகம் பாடவில்லை என்றாலும், பவதாரிணியின் பெரும்பாலான பாடல்கள் தனித்த ரசிகர் வட்டத்தைக் கொண்டவை. அந்த இளங்குயிலின் வாழ்க்கை இப்படி முடிவுறும் என யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

அவர் கடைசியாக இசையமைத்த திரைப்படம் தான் 'புயலில் ஒரு தோணி'. புதுமுகங்கள் விஷ்ணுபிரகாஷ், அர்ச்சனாசிங் ஆகியோர் நடித்துள்ள இந்தப்படத்தை ஈசன் இயக்கியிருக்கிறார்.

'புயலில் ஒரு தோணி' படத்தின் இயக்குனர் ஈசன் பேசியதாவது, பெண்களுக்கு ஆதரவான ஒரு குரலாக இந்தப்படம் உருவாகியிருக்கிறது. நான் கதையை தேர்வு செய்யும் முன்பாகவே பவதாரிணியை தான் இசையமைப்பாளராக வைக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டேன்.

நான் முழுபடத்தையும் முடித்த பின்பு பவதாரிணியை நேரில் சந்தித்து முழு படத்தையும் திரையிட்டு காட்டினேன். அவருக்கும் மிகவும் பிடித்து போனது. படத்தில் மொத்தம் இரண்டு பாடல்கள். இரண்டையும் கவிஞர் சினேகன் தான் எழுதியுள்ளார். இரண்டு பாடல்களையும் மிக விரைவாகவே எங்களுக்கு கொடுத்து ஆச்சர்யப்படுத்தினார்.

படம் வெளிவருவதற்கு முன்பாக இவ்வாறு நிகழும் என்று துளியளவும் நினைத்து பார்க்கவில்லை. இப்போதும் எங்களால் அவர் இல்லை என்பதை நம்பமுடியவில்லை. எங்கள் திரைப்படத்தின் மிக பெரியப் பலம் அவர், பவதாரிணி கிரீடத்தில் உள்ள வைரக்கல். எங்கள் திரைப்படத்தின் வெற்றியை அவருக்கு கூடிய விரைவில் அர்ப்பணிப்போம் என்று கூறினார்.

படத்தின் பெயர் புயலில் ஒரு தோணி. பவதாரணி என்னும் இசைத்தென்றல் காற்றில் கரைந்தது. அவர் இழப்பால் வாடும் அனைவருக்கும் மித்ரா டைம்ஸ் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தேர்தலுக்கு முந்திய மோடி அரசின் பட்ஜெட்!



2024 மே மாதம் புதிய அரசு மத்தியில் அமையவிருக்கிறது. ஏற்கனவே பத்தாண்டுகள் நிறைவு செய்த மோடி ஆட்சியின் கடைசி பட்ஜெட் புதிதாக கட்டப்பட்ட பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

நாட்டின் நிதியமைச்சராக தொடர்ந்து 6 மத்திய பட்ஜெட் தாக்கல் செய்த முதல் பெண் என்ற பெருமையையும் நிர்மலா சீதாராமன் பெறுகிறார்.

தொடர்ந்து 5 பட்ஜெட்களை தாக்கல் செய்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் நிதியமைச்சர்கள் அருண் ஜேட்லி, ப.சிதம்பரம், யஷ்வந்த் சின்ஹா ஆகியோரின் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

கடந்த 1959 முதல் 1964 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 6 மத்திய பட்ஜெட்களை தாக்கல் செய்த முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் சாதனையையும் அவர் சமன் செய்தார்.

முதன்மை சுற்றுலாத் தளமாக லட்சத்தீவுகள் மேம்படுத்தப்படும். ஆன்மீக சுற்றுலா மேம்படுத்தப்படும்.

மின்சார வாகன உற்பத்தி மற்றும் சார்ஜிங் மையங்கள் ஊக்குவிக்கப்படும். 517 நகரங்களில் சிறு விமான நிலையங்கள் அமைக்கப்படும்.1000 விமானங்கள் புதிதாக வாங்கப்படும். சீர்திருத்தம் , செயலாக்கம், மாற்றம் ஆகியவையே பிரதமர் மோடி அரசின் தாரக மந்திரம். ஆஷா மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு காப்பீடு வழங்கப்படும். ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்களை உருவாக்க 1 லட்சம் கோடி நிதி வழங்கப்படும். 5 ஒருங்கிணைந்த கடல்சார் பூங்கா அமைக்கப்படும்.



40,000 ரயில் பெட்டிகள் வந்தே பாரத் ரயிலின் தரத்திற்கு உயர்த்தப்படும். மேலும் சில நகரங்களுக்கு மெட்ரோ சேவை விரிவுபடுத்தப்படும்.

வட கிழக்கு மாநிலங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படும். சூரிய மின் திட்டத்தின் மூலம் 1 கோடி வீடுகளுக்கு மாதந்தோறும் 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும்.

மோடி பிரதமரான பின்னர் 600 பில்லியன் டாலர் அளவுக்கு நேரடி அந்நிய முதலீடு வந்துள்ளது.

இடைக்கால பட்ஜெட்டின் மொத்த வருவாய் 30.8 லட்சம் கோடியாக இருக்கும் என எதிர்பார்ப்பு. அதில் நிதிப் பற்றாக்குறை 5.8%. நாட்டின் மொத்த கடன் 14லட்சம் கோடியாக உள்ளது.

நேரடி வரி வருவாய் வசூல் கடந்த 5 ஆண்டுகளில் 3மடங்காக அதிகரித்துள்ளது.

பாஜக ஆட்சிக்கு வந்த பின்னர் வருமான வரி தாக்கல் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ள

வருமான வரி விதிக்கும் முறையில் எந்த மாற்றமும் இல்லை. நிறுவனங்களுக்கான வரி 22%ஆக குறைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக செலுத்திய வரியை திரும்ப பெறுவதற்கான கால அளவு 2013ல் 94 நாட்களாக இருந்தது. தற்போது 10 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

– ஆனைமலை ராஜ்

# தேசத்தந்தையும் தியாகக் குடும்பமும்

மகாத்மா காந்தி பம்பாய் சிவாஜி பூங்காவில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதாக திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு முதல் நாள், 1942 ஆகஸ்ட் ஒன்பதாம் தேதியன்று அவர் பம்பாய் பிர்லா ஹவுஸில் இருந்தபோது கைது செய்யப்பட்டார். காந்தி கைது செய்யப்பட்ட பிறகு, அடுத்த நாள் நடைபெறவிருந்த முக்கியமான கூட்டத்திற்கு யார் தலைமையேற்பது என்ற கேள்வி சவாலாக உருவெடுத்தது. காந்தியைப் போன்ற உயர் தலைவர்கள் யாரும் அப்போது பம்பாயில் இல்லை. அந்த இக்கட்டான சூழ்நிலையில் 'கவலைப்படாதீர்கள், நான் கூட்டத்தில் பேசுகிறேன்' என்று கஸ்தூர்பா காந்தி கைகொடுத்தார்.

கூட்டம் தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் பேசவிருப்பதை சுஷீலா நய்யாரிடம் 'டிக்டேட்' செய்த கஸ்தூர்பா, சிவாஜி பூங்காவிற்கு செல்வதற்காக காரில் ஏறி அமர்ந்துவிட்டார். ஒன்றரை லட்சம் பேர் கூடியிருந்த சபையில் உரையாற்றினார் கஸ்தூர்பா. உரையைக் கேட்ட மக்கள் உணர்ச்சி வசப்பட, பலரின் கண்கள் ஈரமாகின.



கஸ்தூர்பாவின் உரை முடிந்ததும், அங்கிருந்த போலீசார் அவரையும், சுஷீலா நய்யாரையும் கைது செய்தனர். 30 மணி நேரம் வரை சாதாரண குற்றவாளிகளை அடைத்து வைக்கும் அறையில் வைக்கப்பட்ட அவர்கள் இருவரும், பிறகு புனேயில் உள்ள ஆஹா கான் அரண்மனை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு தான் காந்தியும் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

கஸ்தூர்பாவை காப்பாற்றும் இறுதி முயற்சியாக அவரது மகன் தேவ்தாஸ் காந்தி, கல்கத்தாவில் இருந்து பென்சிலின் ஊசி மருந்தை வரவழைத்தார். ஆனால் மனைவிக்கு பென்சிலின் ஊசி போட கணவர் காந்தி அனுமதிக்கவில்லை. அந்தக் காலத்தில் பென்சிலின் மருந்து செலுத்துவது மிகவும் அரிது. கஸ்தூர்பா பிழைக்க முடியாது என்று பிப்ரவரி 22ஆம் தேதியன்று தெரிந்து போனதும், மதியம் மூன்று மணி சுமாருக்கு மகன் தேவ்தாஸ் புனிதமானதாகக் கருதப்படும் கங்கை நீரை தாய்க்கு இறுதியாக வாயில் விட்டார்.



மாலை ஏழரை மணிக்கு கஸ்தூர்பாவின் தனது மூச்சை நிறுத்திக்கொண்டார். சுஷீலா நய்யார் மற்றும் மீரா பென்னின் உதவியுடன் மனைவியைக் குளிப்பாட்டினார் காந்தி. சிறையில் ஏற்கனவே சந்தனக் கட்டைகள் இருப்பதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தார்கள். அது எதற்காகக் கொண்டு வரப்பட்டது தெரியுமா? 1943 பிப்ரவரியில் காந்தி 21 நாட்கள் வரை உண்ணா நோன்பு இருந்தாரே, அப்போது பயன்படும் என்று அவர்கள் அதை சேகரித்து வைத்தார்களாம்!

இந்த சந்தனக்கட்டைகளை பயன்படுத்த காந்தி சம்மதித்தார். அதற்கு அவர் சொன்ன காரணம், 'என்னுடைய சிதைக்காக வாங்கப்பட்ட கட்டைகளைக் கொண்டே என்னுள் பாதியான என் மனைவியைத் தகனம் செய்யலாம், பரவாயில்லை என்றாராம். காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட போது அவரது கடைசி மகன் தேவதாஸ் காந்தி மட்டுமே டெல்லியில் இருந்தார். செய்தி கேட்டதும் ஓடோடி வந்து தந்தையின் உடல் அருகிலேயே நிலை குலைந்து நின்றார் இரண்டாவது மகன் மணி லால் தென்னாப்பிரிக்காவில் வசித்து வந்ததால் உடனே வர முடியவில்லை.

மூன்றாவது மகன் ராமதாஸ் அன்றைய தினம் நாக்பூரில் இருந்தார்.அவர் மறு நாள் வந்து சேர்ந்தார்.தந்தையின் சிதைக்கு அவர் தான் தீ மூட்டினார். மூத்த மகன் ஹரி லால் எப்போதும் குடி போதையில் மிதப்பவர். யாராவது ஒரு பெண் வீட்டில் கிடப்பார். எங்கே இருக்கிறார்.எந்த கோலத்தில் கிடக்கிறார்.எப்படிச் சொல்வது என்று யாருக்குமே தெரியவில்லை. தீ மூட்டப்பட்ட காந்தியின் சிதை விடிய விடிய எரிந்தது.இரவு முழுவதும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து இறுதி மரியாதை செலுத்தியவண்ணம் இருந்தனர்.

# தொடக்கக் கல்வியிலிருந்தே மாணவர்களுக்குத் தமிழ்ப்பற்றை ஆசிரியர்கள் ஊட்ட வேண்டும் !

## அகரமுதலி இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அறிவுறுத்தல்!

தமிழ்நாடு அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில், மயிலாப்பூர், பேராசிரியர் சஞ்சீவி தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி, மற்றும் நொச்சிக் குப்பம் மழலையர் தொடக்கப்பள்ளி ஆகிய இரு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 01.02.2024ஆம் நாள் “நற்றமிழ் அறிவோம் என்னும் தூயதமிழ் அகராதி“ வழங்கப்பட்டது.

பள்ளி மாணவர்களுக்கு “நற்றமிழ் அறிவோம்“ நூல்களை வழங்கிப் பேசிய அகரமுதலி இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள், “ஆங்கிலவழிக் கல்வி கற்றாலும் நம்மைப் பெற்ற அம்மாவை அம்மா என்றும் அப்பாவை அப்பா என்றுதான் அழைக்க வேண்டும்.... டாடி..மம்மி என்று அழைக்கச்சொல்லி ஆசிரியர்கள் சொன்னாலும் நீங்கள் கேட்கக் கூடாது.... ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் நாம் அடிமைப்பட்டோம். நம் நாடு நமதென்று மறந்து போனோம்.காரணம், ஆங்கிலேயர் அவர்களின் மொழியை நம்மிடம் திணித்தார்கள். ஆங்கிலம் தெரிந்தால்தான் வேலை என்றார்கள். வயிற்றுப் பிழைப்புக்காக நம்முடைய தாய்மொழி தமிழை மறந்து போனோம். ஆங்கிலம் கலந்து பேசினோம்.... அதனால் நம் தாய்த்தமிழின் தனித்தன்மையை இழந்துபோய் நிற்கிறோம்... இந்நிலையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களை.. நம்முடைய சுற்றுச்சூழலில் உள்ள பெயர்களை.... செயற்பாடுகளைத் தமிழில் அழைப்பதற்கான சொற்கள் அடங்கிய அகராதிதான் இந்த நற்றமிழ் அகராதி.

இந்த நூலில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு அவர்களின் வகுப்பு நிலைக்கேற்ப,





அன்றாடம் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தூயதமிழ்ச் சொற்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் தமிழில் சொற்கள் உண்டு என்பதை உங்களுக்கு எல்லாவற்றிற்கும் தமிழில் சொற்கள் உண்டு என்பதை உங்களுக்கு அறிமுகம் செய்யும் நற்றமிழ் அகராதியை நீங்கள் நன்கு படித்து, வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். பள்ளிப் பருவத்திலிருந்தே பைந்தமிழ் மீதான பற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வருங்காலத்தில் மொழிக்கலப்பில்லாமல் பேசவும் எழுதவும் முடியும். தாய்மொழியின் மேம்பாடுதான் உண்மையான வளர்ச்சி. அதற்கு இளைய மாணவத் தலைமுறை உறுதுணை நிற்க வேண்டும். விதைகளைப் பழுதின்றிப் பாதுகாத்தால்தான் நாளை நல்ல கனிகள் விளையும். மழலைக் கல்வி முதலே தாய்மொழிப் பற்றை மாணவர்களிடம் விதைத்தால்தான் வருங்காலத்தில் பிறமொழிச் சொற்கள் கலப்பில்லாத நிலையை அடைய முடியும். அதற்கு ஆசிரியர்கள் துணைநிற்க வேண்டும். வணக்கத்தில் தொடங்கி நன்றியில் நிறைவடையும் வகையில் நம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் Good morning - Thanks நம் மொழியிலிருந்து விலகும் “ என்றும் தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்ட பள்ளி ஆசிரியர்களுக்கு அகரமுதலி இயக்ககம் வெளியிட்டுள்ள “2023 ஆம் ஆண்டுக்கான அகராதி ஆய்வு மலர்“ வழங்கப்பட்டது. நிகழ்வின்போது அகரமுதலி இயக்ககப் பதிப்பாசிரியர் கி. தமிழ்மணி உடனிருந்தார்

# தன் வரலாற்றில் தானே நடித்த கூலித் தொழிலாளி!

திரைப்படங்களில் பிரபலங்களைப் போல நடிகர், நடிகைகள் நடித்திருக்கிறார்கள். ஆனால் மகாராஷ்டிராவைச் சேர்ந்த வயலில் தினக்கூலிக்குச் சென்றுவரும் லதா பகவான் கரே என்ற சாமானிய மனுஷியின் உண்மையான வாழ்க்கைக் கதை இப்போது படமாக எடுக்கப்பட்டு, வெளியாகி இருக்கிறது.ஒரு வித்தியாசம் என்னவென்றால் அந்தப் படத்தில் அவரே நடித்து இருக்கிறார்!



லதா பகவான் கரே மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த புல்தானா மாவட்டத்திலுள்ள பிம்பிலி கிராமத்தில் வசிப்பவர். கணவரை மருத்துவ சிகிட்சை செய்து காப்பாற்ற வேண்டி, முதியோருக்கான ஓட்டத்தில், சேலை அணிந்து, முதலாவதாக ஓடி வெற்றி பெற்றார் 2014ஆம் ஆண்டு. இது எல்லா செய்தித்தாள்களிலும் அப்போது பரபரப்பான செய்தியாக வெளியானது. இதைப் படித்த இயக்குனர் நவீன், இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு, இப்போது திரைப்படமாக எடுத்து வெளியிட்டு இருக்கிறார்...



ஆறு ஆண்டுகளுக்கு முன்பு திடீரென ஒருநாள் இவரது கணவர் பகவான் கரே உடல் நலம் பாதிக்கப்பட்டார். புல்தானா மருத்துவமனையில் காண்பித்தபோது, அவரை பாரமதியிலுள்ள டெர்மினல் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்படி, டாக்டர்கள் அறிவுறுத்தினர்.




லதாவும், கணவரை பாரமதிக்கு அழைத்துச் சென்றார். மருத்துவர்கள் நோய் இன்னதென்று அறிய எம்ஆர்ஐ பரிசோதனை செய்யச் சொன்னார்கள். கையில் பணம் இல்லாத நிலைமையில் தான் தினக் கூலிகளான லதாவும், அவரது கணவரும் மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள். எம்ஆர்ஐக்கு ஆகும் செலவறிந்து, செய்வதறியாமல் திகைத்தார் லதா.. கண்கலங்கினார்.மருத்துவமனை டாக்டர்களிடம் மீண்டும் வந்து, உதவி செய்யும்படி கெஞ்சினார்.

"எங்களால் எதுவும் செய்ய முடியாது எம்ஆர்ஐ எடுத்து வந்தால் மேற்கொண்டு வைத்தியம் செய்யலாம்" என்று கறாராகச் சொன்னார்கள் மருத்துவர்கள்.

லதா கலங்கிய கண்களுடன் தவி தவித்தார். மதியம் ஆனது. இரங்குவாரில்லை. பசி வயிற்றைப் பாடாய்ப் படுத்த, மருத்துவமனை வெளிப்புறம் இருந்த சமோசா கடைக்காரரிடம் வந்து, தனக்கும் தன் கணவருக்குமாக இரண்டு சமோசாக்களை வாங்கினார். சமோசாக்களை கடைக்காரர் ஒரு தினப் பத்திரிக்கைத்தாளில் சுற்றிக் கொடுத்தார்.

சாப்பிடுவதற்காக சமோசாவைப் பிரித்த போது அந்தச் செய்தித் தாளில் வெளியாகி இருந்த ஒரு விளம்பரம், லதாவின் கண்களில் பட்டது. 'பாரமதி நகரில் மறுநாள் முதியோர் ஓட்டப்பந்தயம் நடக்கிறது... பரிசுத் தொகை ஐந்தாயிரம் ரூபாய்' என்று சொன்னது அந்தச் செய்தி.

மருத்துவப் பரிசோதனைக்குப் பணம் வேண்டுமே என்பதற்காக மாரத்தான் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ள தீர்மானித்தார் லதா. முன்பின் ஓடிப் பழக்கமில்லை. இருந்தும் ஏதோ ஒரு அசட்டு தைரியத்தில் போட்டி நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார் லதா.

மன வைராக்கியம் தன்னைவிட வயதில் குறைந்த மற்றும் உடல் பலம் மிக்க பலரையும் பின்னுக்குத் தள்ளி முதலாவதாக வர வைத்தது லதாவை. மூச்சிரைக்க ஓடிவந்து வெற்றிக் கோட்டைத் தொட்டவருக்குக் கிடைத்தது, ரூபாய் 5000 பரிசுத் தொகை. அந்தத் தொகையை வைத்து கணவரின் மருத்துவ சிகிட்சைக்கான சோதனைகள் செய்து முடித்து, கணவரும் நலமடைந்து விட, வீடு திரும்பினர் இருவரும்.

இந்தச் சம்பவம் பற்றி அப்போது அனைத்து மொழி ஊடகங்களும் பரபரப்பாய் எழுதின. அதனை வாசித்த இயக்குநர் நவீன், லதாவை நேரில் சந்தித்துப் பாராட்டினார். பின்னர் அதை ஆவணப்படமாக எடுத்தார். மனதில் என்ன எண்ணினாரோ.. பின்னர் மராத்திய மொழியில் முழுநீள திரைப்படமாகவே அதை எடுத்து வெளியிட்டுவிட்டார். படத்தில் லதாவையும், அவரது கணவரையும், கிராமத்து மக்களையும் நடிக்க வைத்தார்.

2020, சனவரி 17இல் மஹாராஷ்ட்ராவில் வெளி வந்தது இந்தப்படம். இந்தப் படம் பற்றியே பேச்சாக எங்கும் இருந்தது அப்போது.

**– அம்ரா பாண்டியன்**



# திரைப்பட விருதுக்கு பெருமை சேர்த்த தாதா சாகேப் பால்கே!

தாதா சாகேப் பால்கே என்று அழைக்கப்படும் துண்டி ராஜ் கோவிந்த் பால்கே 1870ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள் நாசிக் அருகில் உள்ள திரும்பகேஸ்வரில் பிறந்தார். மும்பையில் பள்ளிப் படிப்பும் வடோதராவில் கல்லூரிப் படிப்பையும் முடித்தவர் ஓவியம், சிற்பம், அகழ்வாராய்ச்சி என பல விஷயம் கற்றவர், ராஜா ரவிவர்மாவிடம் லித்தோகிராப் வரையும் பணியில் ஈடுபட்டார்.பம்பாய் சர்.ஜே.ஜே. கலைக்கல்லூரியில் புகைப்படம் எடுக்கும் முறையையும், இயற்கைக் காட்சிகளைக் கொண்டு சித்திரம் தீட்டும் முறையையும் படிப்படியாகக் கற்றார்.

திரைப்படம் எடுக்க வேண்டும் என்ற தீராத ஆர்வத்தால் பல்வேறு சோதனைகளை வாழ்க்கையில் அனுபவித்த தாதா சாகேப் பால்கே

லண்டனில் பயாஸ்கோப் பத்திரிகை ஆசிரியரைச் சந்திக்கிறார். தன் திரைப்பட ஆர்வத்தை அவரிடம் சொல்லி உதவி கேட்கிறார்.

அவர் இவருக்கு ஒரு முக்கியமான திரைப்பட இயக்குநரை அறிமுகப்படுத்துகிறார். அங்கே படம் எடுப்பது, பிலிம் ரசாயனப்படுத்துவது, எடிட்டிங் செய்து ரீல்களாக்குவது, திரையிடுவது உள்ளிட்ட அனைத்துத் தொழில்நுட்பங்களையும் தெரிந்துகொள்கிறார்; அதோடு நில்லாமல் வில்லியம்சன் கேமரா ஒன்றை வாங்கிக் கொண்டு வந்தார்.

ஒரே ஆளாக எடிட்டிங், ஒளிப்பதிவு, இயக்கம், காஸ்ட்யூம், விநியோகம் எல்லாமே இவர் தான். நடிகர்களை அந்த கதாபாத்திரமாகவே ஆக்க ரொம்ப பிரயத்தனப்பட்டார்.

1913ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி மும்பையில் ஒலிம்பியா தியேட்டரில் இந்தியாவின் முதல் திரைப்படமான 'ராஜா ஹரிச்சந்திரா' பிரபலங்கள் பார்ப்பதற்காகத் திரையிடப்பட்டது. பின்பு அதே வருடம் மே மாதம் மூன்றாம் தேதி மும்பையில் உள்ள காரனேசன் திரையரங்கில் இப்படம் பொதுமக்களுக்குத் திரையிட்டுக் காட்டப்பட்டது. இதன் மூலம் இந்திய சினிமாவின் தந்தை என்ற புகழுக்குச் சொந்தக்காரர் ஆனார் தாதாசாகேப் பால்கே.

தனது ஹிந்துஸ்தான் பிலிம் கம்பெனி மூலம் பால்கே 95 முழுநீள படங்களையும் 27 குறும்படங்களையும் தயாரித்து இயக்கி வெளியிட்டார்.

அவரின் பெயரால் 1969ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் மிக உயரிய திரை விருது வழங்கப்படுகிறது. முதல் விருது பெற்றவர் நடிகை தேவிகா ராணி.

'தாதா சாகேப் பால்கே' என்ற பெயரில் இவ்விருது வழங்கப்படுகிறது. சிவாஜி கணேசன் மற்றும் கே. பாலசந்தர் இவ்விருதை தமிழகத்தில் இருந்து பெற்றிருக்கிறார்கள்.

சினிமா வெளிச்சத்தை மக்கள் பார்க்க தன் வாழ்வை இருட்டில் தோய்த்து கொண்ட இந்திய திரைப்படத்தின் தந்தைதான் மாமேதை தாதாசாகேப் பால்கே!

– மன்னை பாண்டியன்

# இரயில் வண்டி ஓட்டுநராகி "லோகோ பைலட்" ஆக வேண்டுமா?

தெற்கு ரயில்வேக்கான இணையதள முகவரிகள் www.rrbchennai.gov.in, www.rrbthiruvananthapuram.gov.inல் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்வித்தகுதி: இரண்டு வருட ஐ.டி.ஐ படிப்பு,எலெக்ட்ரிகல், எலெக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல், ஆட்டோமொபைல் துறையில் மூன்று வருட டிப்ளமோ படிப்புஅல்லது அதே துறைகளில் பொறியியல் (BE)

வயது: பொது (UR) : 18–30, இ.பி.வ (OBC) : 18 –33, ப.வ/ப.ப.(SC/ST) : 18–35

உடற்தகுதி: கண்ணாடி இல்லாமல் கண்பார்வை 6/6 விகிதத்தில் இருக்கணும். விண்ணப்பிக்கும் போதே கண் மருத்துவரிடம் சான்றிதழ் பெற்று சேர்த்து அனுப்பனும்.

மேலும், இரத்த அழுத்தம், சர்க்கரை, இ.சி.ஜி எல்லாம் சரியாக இருக்கனும். மொத்தத்தில் A-1 fit ஆக இருக்கனும்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்.சி/எஸ்.டி, பெண்கள், மூன்றாம் பாலினத்தோர் ஆகியோருக்கு ரூ. 250ம், மற்றோருக்கு ரூ 500ம் விண்ணப்பிக்கும் போதே ஆன்லைனில் செலுத்த வேண்டும்.விண்ணப்பத்துடன்,

1. கல்வித்தகுதிச் சான்றிதழ்கள், 2. பிறந்தநாள் சான்றிதழ், 3. சாதிச் சான்றிதழ், 4. கண்பார்வைக்கான மருத்துவச் சான்றிதழ், 5. மார்பளவு புகைப்படம், 6. மாதிரிக் கையெழுத்து (ஆங்கிலத்தில்) இணைக்கவேண்டும்.

ஐந்து விதமாக தேர்வு இருக்கும்.

1. கணினி வழித் தேர்வு 1 (CBT 1), 2. கணினி வழித் தேர்வு 2 (CBT 2), 3. கணினி வழி உளவியல் தேர்வு (CBAT), 4. சான்றிதழ் சரிபார்ப்பு, 5. மருத்துவ பரிசோதனை

இந்த ஐந்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று வருகிறவர்களுக்கே பணிநியமனம் வழங்கப்படும்.

தேர்வுக்கான பாடத்திட்டங்கள் எப்படி?

CBT -1 (75 marks)

கணிதம், மன உளவியல், பொது அறிவு

CBT - 2

CBT - 1ல் தகுதியானவர்களை 1:15 என்கிற விகிதத்தில் CBT 2 தேர்வுக்கு எடுக்குறாங்க.

CBT -2 தேர்வு PART - A; PART - B என இருவிதமா நடத்துறாங்க.

Part - A ,யில் கணிதம், உளவியல், காரணமறிதல், அடிப்படை அறிவியல், பொறியியல் பகுதிகளில் இருந்து 100 கேள்விகள் கேட்கப்படும்.

Part -B யில் விண்ணப்பதாரரின் துறை தொடர்பான பாடங்களில் இருந்து 75 கேள்விகள் கேட்கப்படும்.

தவறாக விடையளித்தால் ஏதேனும் எதிர்மறை மதிப்பெண்கள் (negative marks) உண்டா?



ஆமாம். CBT - 1 & CBT - 2 ல் தவறான விடைகளுக்கு 1/3 என்ற விகிதத்தில் எதிர்மறை மதிப்பெண் (negative mark) களும் உண்டு.

எனவே விடை தெரிந்த கேள்விகளை மட்டும் எழுதுதல் நலம்.

CBT - 2 முடிஞ்சதுக்கு அப்புறம்? அதுல தேர்ச்சி பெற்றவர்களை மூன்றாவது கட்ட தேர்வாகிய APTITUDE TEST எனும் உளவியல் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

மற்ற தேர்வுகளை விட இது வித்தியாசமானது. படங்களாகவும் எண்களாகவும் கொடுத்து கேள்வி கேட்பாங்க. அதுல brick test, memory test, yes or no, numerical test அப்படி இப்படினு உண்டு. ஒவ்வொரு testலயும் குறைஞ்சது 42 மார்க்காவது எடுக்கனும். அதற்கான மாதிரி வினாக்களை rdso.indianrailways.gov.com எனும் இணைய முகவரியில் சென்று பார்க்கலாம்.

CBT-2 மற்றும் APTITUDE TEST தேர்ச்சி அடைஞ்சவங்களை (70% – 30%) சராசரி மதிப்பெண்கள் போட்டு மதிப்பெண் வாரியாக தேர்வுப்பட்டியல் வெளியாகும். அப்புறமா இவுங்க எல்லாம் சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படுவார்கள். எல்லாம் சரியாக இருக்கும் பட்சத்தில் தேர்வு செய்யப்பட்டு பெயர் பட்டியல் இரயில்வேயின் அந்தந்த மண்டல தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இப்போ நம்ம தெற்கு ரயில்வேனா சென்னையில் உள்ள தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.இரயில்வே மண்டல அலுவலகத்தில் இருந்து அந்த மண்டலங்களில் உள்ள கோட்டங்களுக்கு கோட்ட வாரியான காலி இடங்களைப் பொறுத்து கோப்புகள் அனுப்பி வைக்கப்படும். தெற்கு ரயில்வேயில் சென்னை, திருச்சி, மதுரை, சேலம், பாலக்காடு, திருவனந்தபுரம் என ஆறு கோட்டங்கள் உள்ளன.

இரயில் எஞ்சின் ( Loco ) சம்மந்தமாக ஆவடியிலும், சிக்னல், தண்டவாளம், விதிமுறைகள் சம்மந்தமாக திருச்சியிலும் மொத்தமாக ரெண்டு மூணு மாசம் பயிற்சி பெற வேண்டி இருக்கும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்து வருபவருக்கு Assistant Loco Pilot பணி நியமன ஆணை வழங்கப்படும். அன்றிலிருந்து இரயில் இஞ்சினில் பணி செய்யலாம். 19.02.2024 வரைக்கும் விண்ணப்பிக்கலாம்.

**தகவல்: அருள்மொழி தண்டபாணி**

# இட்டேரி இப்போது இருக்கிறதா?

இட்டேரி என்பது கொங்கு நாட்டு சொல்.

இருபுறமும் அடர்ந்த வேலி, நடுவில் ஒற்றையடிப் பாதை அல்லது மாட்டுவண்டித் தடம். இதுவே இட்டேரி என்று இங்கே அழைக்கப்படும். மற்ற ஊர்களில் என்ன பெயர் என்று தெரியவில்லை.

கோவையில் நடந்த விவசாய விழிப்புணர்வு கூட்டத்தில்... ஒரு பெண்மணி கேட்டார் !

மயில்கள் பெருகி பயிரை அழித்து வருகின்றனவே? வனத்துறை என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? என்று?

அதற்குப் பதிலளித்தார் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த அனுபவமுள்ள ஒரு அதிகாரி. முப்பது வருடங்கள் முன்பு, கிராமங்கள் இட்டேரிகளால் இணைக்கப்பட்டு இருந்தன. இந்த இட்டேரி என்பது “ஒரு தனி உலகம்”. இதை நான் “Itteri eco-system” என்று அழைப்பேன்.



கள்ளி வகைகள், முள்ளுச்செடிகளுக்கு இடையே, வேம்பு, மஞ்ச கடம்பு, நுணா, புரசு போன்ற மரங்கள், நொச்சி, ஆடாதொடை, ஆவாரம் போன்ற செடிவகைகள், பிரண்டை, கோவை போன்ற கொடிவகைகள், மற்றும் பெயர் தெரியாத எண்ணற்ற புற்பூண்டுகள் நிறைந்திருக்கும்.

இவை உயிர்வேலியாய் விவசாய நிலங்களை காத்து வந்தன. இங்கு எண்ணற்ற உயிர்கள் வாழ்ந்து வந்தன.

கறையான் புற்றுகள், எலி வங்குகள் நிறைய காணப்படும். நிழலும் ஈரமும், இலைக்குப்பைகளும் எப்போதும் காணப்படுவதால் எண்ணற்ற பூச்சியினங்கள் காணப்படும்.

இவற்றை உணவாக கொள்ள வண்டுகள், நண்டுகள், பாம்புகள், பாப்பிராண்டிகள், உடும்புகள், ஓணான்கள், கோழிகள், குருவிகள், அலுங்குகள், ஆமைகள் இப்படி பல உயிர்களும்இவற்றை உணவாக கொள்ள பாம்புகள், பருந்துகள், நரிகள் போன்றவையும் இருந்தன.

மனிதர்களுக்கு கோவப்பழம், கள்ளிப்பழம், சூரிப்பழம், பிரண்டைப்பழம், போன்ற சுவையான கனிவகைகளும், கோவைக்காய், களாக்காய், பிரண்டை கொழுந்து, சீகைக்கொழுந்து என்று சமையலுக்கு உதவும் பொருட்களும், மூலிகைகளும் கிடைத்தன.

(ஏன் இன்று பணமழை பொழியும் கண்வலிப்பூக்கள் காய்கள் வேலியில்தான் ஆங்காங்கு படர்ந்திருக்கும்)

இங்கே பலருக்கும் பள்ளிப் பருவத்தில் விடுமுறை நாட்களில் ஓனானைக்கண்டால் ஓட ஓட விரட்டு பாப்பிராண்டி கண்டால் பாவம்ன்னு விடு என்று ஓனான் வேட்டைக்குப் போன அனுபவம் கண்டிப்பாக இருக்கும்.

இந்த வேலியில் வாழ்ந்த எண்ணற்ற குருவிகள், ஓனான்கள், தவளைகள் பயிர்களை சேதப்படுத்தும் பூச்சிகளை அழித்தொழித்தன. பாம்புகள், ஆந்தைகள் எலிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தின. பறவைகளின் எண்ணிக்கையை பாம்புகளும், வல்லூறுகளும் கட்டுப்படுத்தின.

பாம்புகளின் எண்ணிக்கையை மயில்கள் கட்டுப்படுத்தின. மயில்களின் எண்ணிக்கையை நரிகளும், காட்டுப்பூனைகளும் கட்டுப்படுத்தின”.

ஆனால், இன்று?

விவசாய நிலங்கள் வீட்டுமனை ஆனபோது இந்த வேலிகளும் அழிந்தன. வண்டித்தடங்கள் தார் சாலைகள் ஆனபோது இட்டேரிகள் மறைந்தன. கொஞ்சம் நஞ்சம் மிஞ்சியிருக்கும் விவசாய நிலங்களுக்கு உயிர் வேலியை அழித்து காக்கா, குருவி கூட கூடு கட்டாத கம்பிவேலிகள் அமைக்கப்பட்டன. இதனால் எண்ணற்ற உயிரினங்கள் வாழ இடமின்றி போனது. அதில் முக்கியமானது குள்ளநரிகள்.

இவை மயில்களுக்கு முக்கியமான எதிரிகள். இவை மயில்களின் முட்டைகளையும், குஞ்சுகளையும் தந்திரமாக கவர்ந்து உணவாக்கிக்கொள்ளும்.

இவற்றை நாம் எங்கும் காண முடியவில்லை. காடுகளில் மட்டும் ஓரிரு இணைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்படுகின்றன. விளைவு?

மயில்களின் எண்ணிக்கை பன்மடங்குப் பெருகி விட்டன. “நாம் விதைத்தது நாம் அறுவடை செய்கிறோம்”.

## அமெரிக்கக் கல்யாணங்கள்!!

# அறுசுவை உணவும் அகலாத பாரம்பரியமும்!!

அமெரிக்காவில் நம் பிள்ளைகளின் திருமணங்கள் நடக்கத் தொடங்கிவிட்டன. ஊரில் நம் வீட்டில் நம் சொந்தம் சூழ நடப்பது ஒரு வகையான மகிழ்ச்சி என்றால், இங்கே நம் பிள்ளைகளின் நட்பு சூழ நடப்பது இன்னொரு வகையான மகிழ்ச்சி தான். அப்படிச் சமீபத்தில் நாங்கள் சென்ற ஒரு திருமணத்தில் நான் கண்டு வியந்த நிகழ்வு இது. திருமணம் என்றாலே சாப்பாடு தானே! அந்தத் திருமணப் பந்தி இதோ உங்கள் கண்களுக்கு விருந்தாக!

மாப்பிள்ளையின் பெற்றோர் திருமணத்திற்கு வந்திருந்தவர்களை எல்லாம் ஒருவர் விடாமல் வாங்க! வாங்க! என்று வாஞ்சையாய் வரவேற்றதில் நட்புக் கல்யாணம் கூட நம்ம வீட்டுக் கல்யாணமானது. சாப்பீட்டீர்களா? என்று கேட்டுக் கேட்டு மண்டபத்திற்குப் பின்னால் இருந்த சாப்பாட்டுக் கூடத்திற்கு அனுப்பி வைத்தனர். நாங்களும் சாப்பிடச் சென்றோம். சாப்பாட்டுக் கூடத்தில் நீள நீளமாக நாலைந்து வரிசைகளில் மேசை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பல உறவினர்களும், நண்பர்களும் இருந்து எல்லோரையும் வரவேற்று காலியான இடங்களைக் காட்டி உட்கார வைத்து, இலை போட்டு, தண்ணீர் வைத்துப் பரிமாறினர். இட்லி, வடை, பனியாரம், பொங்கல், கேசரி, இடியாப்பம், சாம்பார், தேங்காய், புதினா, மிளகாய் என வித விதமான சட்னிகள் எனக் காலை உணவே களை கட்டியது. காலையில் வேலைக்குப் போகும் அவசரத்தில் ஓட்ஸும், ரொட்டியும் தின்று தின்று சலித்த நாக்கும், வயிறும் உச்! கொட்டி உண்டன இந்த ராஜ விருந்தை.

சில பெரியவர்கள் வழி நடத்த, நிறைய உறவுக்கார/நட்பு இளைஞர்கள் (18 முதல் 25 வயது) பட்டு வேட்டி, சட்டையுடன் கொஞ்சும் அமெரிக்கத் தமிழில் கேட்டுக் கேட்டுப் பரிமாறியதில் ருசி கூடியது. 'ஏ!



அந்தப் பையன் அழகா இடியாப்பம்னு சொல்றான். அவனக் கூப்பிட்டு இன்னொரு முறை இடியாப்பம் வைக்கச் சொல்லப் போறேன்' என்று அவனை வரச் சொல்லி இடியாப்பம் வாங்கிக் கொண்டு இனிமையாய்ப்பாராட்டியும் அனுப்பினோம். ஆஜானுபாகுவான இளைஞனையும் ஐந்து வயதுக் குழந்தையாக்கும் பக்குவம் அன்னைத் தமிழுக்கே உண்டு.

"சாம்பார் ஊத்தின பையன் எவ்வளவு பணிவா கேட்டுக் கேட்டுச் சிந்தாம ஊத்தினான்ல, நீ என்ன தான் சொல்லு! இடியாப்பம் வச்ச பையனை மட்டும் மறக்கவே முடியாது. என்னை இவ்வளவு அழகாக்கூப்பிட முடியுமான்னு இடியாப்பமே கிறங்கிருச்சு போல. அதான் அவ்வளவு சிக்கல்! "என்று உண்ட மயக்கத்தோடு கண்ட காட்சிகளைப் பற்றிப் பேசிச் சிரித்துக் கொண்டே மண்டபத்திற்கு வந்தோம்.

குதிரை மீது மாப்பிள்ளை அழைப்பு, பெண் காட்டுதல் தொடங்கி அத்தனை சடங்குகளும் அற்புதமாகச் செய்யப்பட்டுத் தாலி கட்டி முடித்ததும், மண்டபத்துக்கு மேல்த் தளத்தில் இருந்த கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கினோம். காலைப் பலகாரம் செரிக்கும் முன், மதிய உணவு சாப்பிடக் கூப்பிட்டார்கள். பசிக்கும் வரை வந்தவர்களைக் காக்க வைத்துவிடக் கூடாது என்பது தானே திருமண வீடுகளின் சிறப்பு. சாப்பாட்டுக் கூடத்தில் ஒரு பந்தி நடந்து கொண்டிருந்தது. இப்போதும், மிகக் கவனமாக சாப்பிட்டு இலை எடுத்தாகிவிட்டதா என்று பார்த்து, பொறுமையாக, அன்பாக, பொறுப்பாக ஒவ்வொருவராக உள்ளே அனுப்பினார்கள் வாசலில் நின்று வழி நடத்திக் கொண்டிருந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்.

பேசிக்கொண்டே சென்று அவர்கள் உட்காரச் சொன்ன இடத்தில் உட்கார்ந்தோம். காலையில் இடியாப்பம் வைத்த பையன் இப்போது "கெட்டிக் குழம்பு வேணுமா?" என்று அமெரிக்கத் தமிழில் அழகாய்க் கேட்டுக்கொண்டு வந்தான். ஏய்! இன்னிக்குச் சோறும் கெட்டிக்குழம்பும் மட்டும் தான்டி சாப்பிடப் போறேன்! என்று அவனைப் போலவே சொல்லிக்காட்டிக் குதூகலித்தாள் தோழி!

தலை வாழை இலை போட்டு, ஊறுகாய், இனிப்பு, இரண்டு வகைப் பொரியல், பச்சடி, கூட்டு, பிரியாணி, சோறு, பருப்பு, நெய், சாம்பார், கெட்டிக்குழம்பு, ரசம், தயிர், பாயாசம், ஐஸ் கிரீம் வரை அப்படியே உமிழ் நீரை ஊற வைக்கும் (கிட்டத்தட்ட நம் சமையல்க்காரப் பாண்டி அண்ணன் சமைத்தது போல) கல்யாணச் சாப்பாடு பரிமாறப்பட்டது. எப்படித் திடீரென்று அமெரிக்க இந்திய உணவகங்கள் இவ்வளவு சுவையாகச் சமைக்கத் தொடங்கினார்கள் என்ற ஆர்வம் கலந்த வியப்போடு விசாரித்ததில் பல தித்திக்கும் தகவல்கள் தெரிய வந்தன. உறவினர்களில் மூன்று நான்கு பேர் பல உணவகங்களுக்குச் சென்று பல்வேறு உணவுகளைச் சுவைத்துப் பார்த்து, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்தார்களாம். பிறகு மொத்தமாக ஐந்தாறு உணவகங்களில் இருந்து மதிய உணவை வரவழைத்திருந்தார்கள். திருமணங்களில் இருக்க வேண்டிய மாங்காய்ப் பச்சடி, கூட்டு வகைகள் ஒன்றிரண்டுக்கான செய்முறையைக் கூட உணவகச் சமையல்காரருக்குச் சொல்லித் தந்து சமைக்கச் சொல்லி இருந்தது முத்தாய்ப்பான முன்னெடுப்பு. விருந்து தான் விழாவின் சிறப்பு! என்ற தமிழர் பண்பாடு ஏட்டில் மட்டுமல்லாமல் வீட்டிலும் இருந்தது. அது மட்டுமல்ல. பெண்கள் யாருமே பரிமாறும் இடத்தில் இல்லை. முழுக்க முழுக்கத் தமிழ் அமெரிக்க ஆண்களால் அத்தனை திருத்தமாக உணவு பரிமாறப்பட்ட புரட்சியை எண்ணி வியந்தோம். பெரியவர்கள் வழி நடத்த இளைஞர்களே பெரும்பாலும் பரிமாறியது அமெரிக்காவின் சாரணர் (Scout) இயக்கத்தை நினைவூட்டியது. பிள்ளைகள் எல்லோரும் சாரணர் இயக்கத்தில் கற்றுக் கொண்ட பழக்கத்தை வீட்டு நிகழ்வுகளிலும் நடைமுறைப்படுத்தியது, அட! போட வைத்தது.

*- ஜெயா மாறன்*
*அட்லாண்டா, ஜார்ஜியா*

# நடிகர் திலகத்தின் திரை வீச்சு!



நடிகர் திலகம் அவர்கள் கடைசிவரை எந்த பதவி மற்றும் பலனை எதிர்பார்த்தது கிடையாது.பெருந்தலைவரிடம் நடிகர் திலகம் அவர்கள்.தன் ரசிகர்களையும் அவருக்காக பாடுபட வைத்தார்.அதனால் தான் இன்று வரை அவர்கள் இருவரையுமே மறக்க முடியவில்லை.

ஸ்ரீதர் இயக்கிய 'சிவந்த மண்' திரைப்படத்தின் இந்திப் பதிப்பான 'தர்த்தி' 1970ல் வெளியானது. ராஜேந்திர குமார், வஹீதா ரஹ்மான் நடித்த அந்தப் படத்தில் புரட்சி வீரனாக, கவுரவ வேடத்தில் சிவாஜி தோன்றினார். இந்தப் படம்குறித்து சுவாரசியமான தகவல் ஒன்று உண்டு. படம் வெளியான அன்று பம்பாயில் லேசான நில அதிர்வு ஏற்பட்டதாம். அதைக் குறிப்பிட்டு சிவாஜியிடம் ராஜேந்திர குமார் சொன்னாராம், "உங்கள் நடிப்பைப் பார்த்து பம்பாயே நடுங்கிவிட்டது!"

சிறிய வேடம் என்றாலும் சிவாஜியின் 'திரை வீச்சு' (ஸ்கிரீன் பிரெசன்ஸ்) அத்தனை கம்பீரமானது. அதனால்தான், இன்றும் கம்பீரமான பாத்திரங்களில் நடிக்கும் நடிகர்கள் சிவாஜியுடன் ஒப்பிடப்பட்டே மதிப்பிடப்படுகிறார்கள்.

சிவாஜியின் நடிப்பு நிச்சயம் விமர்சனத்துக்கு அப்பாற் பட்டதல்ல. மற்றவர்கள் இயல்பாக வசனம் பேசும் காட்சிகளில், அதீத உணர்வுடனும் அழுத்தமான உச்சரிப்புடனும் திரையில் தனிக் கவனம் பெறும் அவர் மீது காத்திரமான விமர்சனங்கள் பல உண்டு. அவற்றையெல்லாம் மீறி, அற்புதமான தன் நடிப்புத் திறனால், பல படங்களின் வெற்றியை உறுதி செய்தார் சிவாஜி. தன்னை விட அதிக வயதுள்ள நாயகர்கள் இளைஞர்கள் வேடத்தில் நடித்துக்கொண்டிருந்த கால கட்டத்தில், 'மோட்டார் சுந்தரம் பிள்ளை' படத்தில் 13 குழந்தைகளுக்குத் தந்தையாக நடிக்கும் துணிச்சலை வேறு எவரிடமும் எதிர்பார்க்க முடியாது. 'திருவருட்செல்வர்' தொடங்கி எத்தனையோ வயோதிகப் பாத்திரங்களில் நடிக்கத் தயங்கியதில்லை.

உண்மையில், நடுத்தர மற்றும் சற்றே வயதான வேடங் களில் நடித்தபோது சிவாஜியிடம் கம்பீரமும் மிடுக்கும் கூடியிருந்ததைப் பார்க்க முடியும். 'தெய்வமகன்' படத்தின் புகழ்பெற்ற அந்த கோரமுக மகன் பாத்திரத்தைவிடத் தந்தை பாத்திரத்தில் வரும் சிவாஜிதான் சிறப்பாக நடித்திருப்

பார். மகனைப் புறக்கணிக்க நேர்ந்ததால் எழும் குற்றவுணர்ச்சி யும், சமூகத்தின் முன் அவனைத் தன் மகனாக அறிவிக்கத் தயங்கும் போலி கவுரமும் தன்னை அலைக்கழிப்பதை நுட்பமாக வெளிப்படுத்தியிருப்பார். ஒரு காட்சியில், கேமராவுக்கு முதுகைக் காட்டியபடி சிவாஜி விசும்பிக் கொண்டிருப்பார். அப்போது எதிரில் மேஜர் சுந்தர்ராஜன் அசைவற்று அவரையே பார்த்துக்கொண்டு நிற்பார். அதை ஒரு விமர்சனத்தில் இப்படி எழுதியிருந்தார்களாம்: 'சிவாஜியின் முதுகுகூட நடித்துக்கொண்டிருந்தது. மேஜர் சுந்தர்ராஜன் தேமேயென்று நின்றுகொண்டிருந்தார்' என்று. பின்னாட்களில் அதைக் குறிப்பிட்டு மேஜர் சுந்தர்ராஜன் சொன்னார், "சிவாஜி நடித்துக்கொண்டிருக்கும்போது அதைப் பார்த்துக்கொண்டு நிற்காமல் வேறென்ன செய்ய முடியும்!"

சிவாஜி வந்து நிற்கும் தோரணையைக் கண்டு, அதற்கு முன் ஆர்ப்பாட்டமாகப் பேசிக்கொண்டிருப்பவர்கள், பேச மறந்து உறைந்து நிற்கும் காட்சிகளைப் பல படங்களில் பார்க்கலாம். 'முதல் மரியாதை' படத்தில் மரணப் படுக்கையில் படுத்திருக்கும் சிவாஜியை, சில சிறுவர்கள் வேடிக்கை பார்க்க வந்து நிற்பார்கள். அந்த நிலையிலும் தன் கோபத்தைக் காட்ட ஒரு உறுமு உறுமுவார். அடுத்த கணத்தில் சிறுவர் குழாம் சிதறி ஓடும். படத்தின் தொடக்கத்தில் இடம்பெறும் இந்தக் காட்சியே, சிவாஜியின் கதாபாத்திரம் எத்தனை மரியாதைக்குரியது என்பதை உணர்த்திவிடும். 'பாசமலர்' படத்தில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஜெமினி கணேசன் எழுப்பும் கேள்விகளைக் கேட்டுக் கொதிப்படைந்து சிவாஜி பேசும் வசனங்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. "யாருடைய துணையுமின்றித் தனியாகவே நான் உழைப்பேன்" என்று கர்ஜித்துவிட்டு, முத்தாய்ப்பாக "கெட் அவுட்" என்று மெல்லிய குரலில் சொல்ல சிவாஜியால்தான் முடியும்.

மிகை நடிப்பு என்று அவரை விமர்சிப்பவர்கள்கூட பின்னாட்களில் 'முதல் மரியாதை', 'தேவர் மகன்' ஆகிய படங்களில் அவர் ஏற்று நடித்த பாத்திரங்களை வியக்கின்றனர். குறிப்பாக, தேவர் மகன் படத்தில், முகத்தில் படர்ந்த வீர மீசையும், தோளைச் சுற்றிய சால்வையுமாக அவர் வந்து நிற்கும் கம்பீரம் அலாதியானது. சிவாஜியைப் புகைப்படம் எடுக்கும் கவுதமி, அவர் சற்று திரும்பி முறைத்ததும் தடுமாறும் காட்சியே சொல்லும் சிவாஜியின் கம்பீரத்தை. திரைக்கு வெளியிலும் தன் கம்பீரத்தைக் கடைப்பிடித்தார் சிவாஜி. ஒருமுறை அவரது மகன் ராம்குமார் குறிப்பிட்டார்: "வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அப்பா மிக நேர்த்தியாக உடையணிந்துகொள்வார். விமான நிலையங்களில் எங்களையெல்லாம் சோதனை செய்வார்கள். அப்பா நடந்துவரும் தோரணையைப் பார்க்கும் விமான நிலையக் காவலர்கள் அவரை ஒருபோதும் சோதித்துப் பார்க்கத் துணிந்ததில்லை." அதுதான் சிவாஜியின் ஆளுமை!

# கானல் நீர்!

எதையோ வெறித்துப் பார்த்த வண்ணம், விருப்பும் வெறுப்பும் அற்றவனாய் உட்கார்ந்திருந்தான் சின்னச்சாமி. மனத்தில் நிரம்பிய குழப்பங்களுக்கு எங்கே விடை தேடுவது என்பதே அவன் எண்ணமாயிருந்தது. எதையுமே எளிதாய் எடுத்துக்கொள்ளப் பக்குவப் பட்டிருந்த அவன் மனம் இன்று பரிதவிக்கிறது. பணம் காசு தேவை என்பதை அவன் ஒருபோதும் கவலைப் பட்டதில்லை. வெள்ளாமை விளைகிறதோ இல்லையோ, அதனை விடக்கூடாது என்பதில் அவன் தெளிவாக இருந்தான்.

சின்னச்சாமியைப் பொருத்த வரை, வெள்ளாமை செய்வது ஓர் அறம் எனக் கருதுபவன். அவன் எப்போதும் சொல்வது, என்ன கோடிகோடியா சம்பாதிச்சு, கார் பங்களான்னு வாழ்ந்தாலும், எல்லோருக்கும் தேவை மூனு வேளை சோறு மட்டுமே! அதனால் அவனை முழுக்க முழுக்க இடதுசாரி சிந்தனையாளன் என்றோ இல்லை என்றோ கூறமுடியாது. அவன் ஒன்றும் படிக்காதவனோ, தெளிவில்லாதவனோ இல்லை.

கணக்கிலே புலி எனப் பெயரெடுத்தவன், முதுகலை வரை படித்தான். ஐ.ஏ.எஸ் பாஸ் செய்ய வேண்டும் எனும் அவா மட்டும் அவனுக்கு உண்டு. அவன் செயல்படுத்த முனைந்தபோது, அப்போதைய அரசு செய்த மாற்றங்களால் அது ஈடேறாமல் போனது. அவன் படித்த கல்லூரியிலேயே பேராசிரியர் வேலை தேடினான். அதுவும் தள்ளிப் போனதும், வெள்ளாமையே போதும் என்ற முடிவுக்கு வந்தான் சின்னச் சாமி. அவனது அப்பாவும் அந்த காலத்தில், இண்டர்மீடியட் வரை படித்தவர். வேலை தேடும் விவேகம் அவருக்கு இருக்க வில்லை. அவரது தந்தையார் வைத்துவிட்டுப் போன இரண்டு வேலி நிலம் அவருக்கு போதுமானதாய் இருந்தது. கொஞ்சம் தோப்பு துறவு என இருந்தது. சின்னச்சாமிக்கு ஓர் அக்காள், ஒரு தங்கை இருவருக்கும் நல்ல விதமாக மணம் செய்து கொடுத்துவிட்டார் சின்னச் சாமியின் தந்தை.

ஆனால், சின்னசாமிக்கு அவ்வப்போது தேர்வு எழுதும் வழக்கம் இருந்ததால், வங்கி, அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலை கிடைத்தது. குடவாசலுக்கு அருகே இருந்த அவனது, கிராமத்திலிருந்து, புலம் பெயர்ந்து வாழ்வதும், வெள்ளாமையைக் கவனித்து கொள்வதிலும் எந்த சிரமமும் இருக்காது, எனினும், கல்லூரி பேராசிரியர், அல்லது ஐ.ஏ.எஸ் ஏதாவது ஒன்றுதான் சமூகத்துக்கு சேவை செய்ய முடியும் என்பது சின்னச் சாமியின் சிந்தாந்தம். பேராசிரியர் ஆனால், நல்லதொரு சிந்தனையை விதைத்து மாணவர்களை நெறிப் படுத்தி வெளிப்படுத்தலாம். ஐ.ஏ.எஸ் எனில், அரசாங்க சலுகைகளை அவற்றின் பயனை மனித சமுதாயம் முற்றிலும் அடையச் செய்யலாம் என்பது அவனது கருத்து. இதனை மற்றவர் ஏற்பாரோ இல்லையோ என்பதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப் படமாட்டான்.

சின்னச் சாமியின் அப்பாவும், அவனது கருத்தை புறந்தள்ள வில்லை. வாழ்வியல் மீது அவரது பார்வை மாறு பட்டது. பிறப்பொக்கும் எனும் வள்ளுவர் கூற்றை போற்றி பின்பற்றி வாழ்ந்தவர் அவர். உயிர்கள் யாவுக்கும் உலகம் பொதுவானது, உரிமையானது என்பார். மனிதனே தன்னை உயர்வாகக் கருதிக்கொண்டுள்ளான் என்பார்.

சின்னச் சாமி எதைகேட்டாலும் அதற்கு உரிய விளக்கம் தருவான். கும்ப கோணத்துக்கு தோரண வாயில் போல் அமைந்ததால் தான், அவ்வூர் குடவாயில் ஆனது. காலப் போக்கில் குடவாசல், கொடவாசல் ஆனது என்பான். சிந்தனை வயப்பட்டிருந்த, வீட்டு சாய் மானத்தில் சாய்ந்து அமர்ந்திருந்த சின்னச்சாமியை ஒரு குரல் எழுப்பியது, அது அவனது பால்ய நண்பன் ஜெயசங்கரன். அரசு பணியிலிருந்தவன், பணி நிறைவுக்குப் பின் சொந்த கிராமத்துக்கு வந்து விட்டான். உத்தியோகம் புருஷ லஷ்ணம் எனும் சிந்தையோடு வேலைக்குச் சென்றான் ஜெயசங்கரன். படிப்படியாக பதவி உயர்வு கொண்டு, பணி நிறைவு கண்டவன். அவனுக்குள்ளும் சில சித்தாங்கள் உண்டு. நாம் வாங்கும் ஊதியம் மக்களின் பணம். நாம் பாது காக்க வேண்டிய வரிப்பணம், அது மக்களுக்கானது. ஏழைத் தொழிலாளி உடல் வலி போக்க அருந்தும், மதுபானத்தின் மீதான வரியிலிருந்து





தான் நாங்கள் சம்பளம் பெறுகிறோம் அதனை நினைவு கொள்ள வேண்டும் என்பது ஜெயசங்கரனின் சித்தாந்தம். இதனால் இவ்விருவரது நட்பு தொடர்ந்து நிலைத்ததில் ஆச்சரியமில்லை.

“என்னப்பா ஆயிற்று சின்னச் சாமி ஆழ்ந்த யோசனை? எதையுமே பெரிது படுத்த மாட்டாயே! என்ன பிரச்சினை?” ‘ஒன்றுமில்லையப்பா, என் மூத்த மகன் கடனா செல்லப் போவதாக கூறுகிறான், அங்கேயே நிலையாக தங்கிவிட முடிவு செய்வானோ என ஐயப்படுகிறேன்’.

“முதலில் செல்லட்டும் அப்புறம் பார்க்கலாம்”

‘இல்லையப்பா, அந்த நாட்டு கலாச்சாரம் கடன் அட்டையில் மிதப்பது. தேவையோ தேவையில்லையோ கடன் வாங்குவாங்க’ “சின்சு நீ சொல்றது, அமெரிக்கா”

‘அமெரிக்கா என்ன கனடா என்ன? நம்ம ஊரு போலாகுமா? வேண்டாம்னு சொன்னா கேக்கலே. என் மூத்த மருமகள் சொல்றா, மாமா மேலே மேலே போகனும் நாமன்னு. எனக்கு ஒன்னுமே புரியலே!. அது என்ன மேலே மேலே போறதுன்னு. சாப்பிடப் பொறது, ஒரு பிடி சோறு. எல்லோருக்கும் தேவை அதுதானே!’

“எல்லாத்தையும் காலம் மாற்றும்” னு ஜெயசங்கரன் சொல்ல, ‘அவுங்க முடிவு செஞ்ச பின்னால, நமக்கு அவுங்க சொல்ல நினைக்கிறது. இன்பர்மேஷன் போலத்தான்.’ என்றான் சின்னச்சாமி.

அதான்பா, அரசாங்கத்துல, பார் இன்பர்மேஷன் னு போட்டு வெச்சு கீழே இருக்கிற ஆபீஸர் தப்பிக்க பாக்குற மாதிரி என்ற ஜெயசங்கரனின் கருத்து, சின்னச்சாமிக்கு சிரிப்பை மூட்டியது.

ஏம்பா, சின்சு, உன் சின்ன மகன் பக்கத்துலேயே இருக்கான், பெண்ணும் அடிக்கடி வந்து போறா, அப்புறம் என்ன கவலை. நீயும் பாஸ்போர்ட் வாங்கிடு, அண்ணியும் நீயுமா சேர்ந்து, கனடா போயிட்டு வாங்க.

சும்மா கிண்டல் பண்ணாதே ஜெய். என் கவலையே, அப்புறம் இங்க இருக்குறதெல்லாம் என்ன செய்யிறதுன்னு?. இதைப் பார்த்து சின்ன மகனும் மருகமளும் ஆஸ்திரேலியா கிளம்பலாம். அப்புறம் டாக்டர் ஆன என் மருமகனுக்கும் வெளிநாட்டு மோகம் வந்திடும்.

உன் கவலையெல்லாம் சரிதான். வெளிநாட்டு வாழ்க்கைதான் சொர்கம்னு நினைக்குற பிள்ளைகளை எப்படி திருத்தறது? சமீபத்துல, கொரோனாவுக்கு இறந்த, பெத்தவங்களுக்கு, சாஸ்திரிகளுக்கு பணத்தை அனுப்பி, வீடியோ கால்லேயே, காரியம் பண்ணினாங்களாம் அமெரிக்காவுல இருந்து. அவ்வளவுதான் வாழ்க்கை.

எதுக்காக இப்படி ஓடுறாங்கன்னு தெரியலை. எழுத்தாளர் சுஜாதா, தான் காலமாகும் சில வருஷம் முன்பு ஒரு பதிவுல கூறி இருந்தாரு, “இரண்டு மகன்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, இரண்டுமுறை பைபாஸ் சர்ஜரி செஞ்சுகிட்ட வருத்தத்தோட சொல்றேன். இந்த வெளிநாட்டு மோகம் எதுக்கு? அந்த வலியும் வேதனையுமே இப்ப பல பெற்றோர்களுக்கு இருக்கு”ன்னு.

“உனக்கொன்னு தெரியுமா, நானும் ஒரு பதிவுல பார்த்தேன். அப்பாவும் அம்மாவும் ஸ்கூல் டீச்சர்ஸ். பெண்ணும் பிள்ளையும் அமெரிக்காவுல, ஆட்டோவுல கூட போகாம, கால் வலிக்க நடந்துதான் எங்கேயும் போவாங்களாம். அவுங்க இறந்த பின்னான வந்த பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஏதோ, சட்டபடி இயலாதுன்னு சொல்லி, சொத்த வித்து, சேமிப்புல இருந்த மொத்த பணத்தையும் சேர்த்து, திருப்பதி உண்டியல்ல போட்டுட்டு அமெரிக்கா பொயிட்டாங்களாம். சரி சரி மனசை தளர விடாம வேலையைப் பாரு. சின்சு இப்ப இந்த சூழ்நிலையை நம்பித்தான், சென்னை கோயம்புத்தூர் ஆகிய ஊர்கள்ல ரிடையர்மெண்ட் ஹோம் நிறைய வந்தாச்சு. ஓல்ட் ஏஜ் ஹோமை விட இதுவெல்லாம் நிறைய வசதியோட இருக்கு. டாக்டர் வசதி அது இதுன்னு எல்லாத்தோட”.

‘இல்ல ஜெய், எங்க அப்பன் பாட்டன் செஞ்சு வெச்சிருக்கிற, கோயில் குளத்துக்கான தரும காரியங்கள் இருக்கு. உனக்கே தெரியுமில்ல, எங்க குடும்பம் இந்த ஊருல பத்து தலைமுறைக்கு மேல வாழுது. எங்கு பங்கு பங்காளி தலைகட்டு, அக்கம் பக்கம் எல்லாம் இருக்கு. போகட்டும் காலம் தான் பதில் தரவேண்டும். இவர்களது அறியாமைக்கும் மோகத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம், நின்றால் இரண்டடி, இருந்தால் நான்கடி, படுத்தால் ஆறடி, அவ்வளவுதான் தேவை மனிதனுக்கு!’

‘இது புரிந்தால், ஏது கஷ்டம்?’ என்றவாறு ஜெயசங்கரன் நகர, சின்னச்சாமியும் ஒரு பெரு மூச்சை உதிர்த்தவாறு விட்டினுள் சென்றான்.

**- கவிஞர் கவிவளவன்.**

# உயர்ந்து வரும் விவசாய நிலங்களின் மதிப்பு!

தங்கத்துக்கு அடுத்து மக்கள் அதிகம் முதலீடு செய்வதில் விவசாய நிலங்கள் முன்னணியில் இருக்கின்றன. காரணம் வருடம்தோறும் விவசாய நிலங்களின் மதிப்பு உயர்ந்துகொண்டே இருக்கும். அதேபோல வருங்காலத்தில் விவசாயம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலும் நிலத்தை வாங்குகின்றனர்.

இந்தியாவில் ஒருவர் எவ்வளவு விவசாய நிலம் வைத்திருக்கலாம் என்பது பெரும்பான்மையோருக்குத் தெரியாது. ஒருபுறம் சிலர் அளவுக்கு மீறிய நிலங்களை வைத்திருக்கும் நிலையில், மற்றொருபுறம் நிலமில்லாமல் பலர் தவிக்கும் அவலமும் இருக்கிறது.

இந்தியாவில் உள்ள மாநிலம்தோறும் ஒருவர் எவ்வளவு விவசாய நிலம் வரை வாங்க முடியும் என்பது குறித்த தகவல்களைப் பார்ப்போம்...



கேரளா: கேரளாவில் நில சீர்த்திருத்த சட்டம் 1963 ன் படி, திருமணம் ஆகாத ஒருவர் 7.5 ஏக்கர் நிலம் வைத்திருக்கலாம். கூட்டுக் குடும்பமாக வாழும் 5 பேர் கொண்ட ஒரு குடும்பம் 20 ஏக்கர் நிலம் வரை வாங்கலாம். 2 முதல் 3 பேர் உள்ள குடும்பத்தினர் 15 ஏக்கர் விவசாய நிலம் வரை வாங்க முடியும்.

மகாராஷ்டிரா: மகாராஷ்டிராவை பொறுத்தவரையில் ஏற்கெனவே விவசாயத்தில் இருப்பவர்கள் மட்டுமே நிலத்தை வாங்க முடியும். அதிகபட்சமாக 54 ஏக்கர் நிலம் வரை வாங்கலாம்.

மேற்கு வங்கம்: மேற்கு வங்க மாநில நில சீர்திருத்தச் சட்டத்தின்படி, தனிநபர் 24.5 ஏக்கர் நிலம் வரை வாங்கலாம்.

இமாசலப் பிரதேசம்: இமாசல் பிரதேசத்தில் ஒருவர் அதிகபட்சமாக 160 பிகாஸ் (Bighas) அல்லது 32 ஏக்கர் நிலம் வரை வாங்கலாம்.

கர்நாடகா: கர்நாடகாவில் 54 ஏக்கர் நிலம் வாங்க முடியும். மகாராஷ்டிராவைப் போல இங்கும் விவசாயம் செய்பவர்கள் அல்லது ஆண்டுக்கு 25 லட்சத்துக்கும் குறைவான வருமானம் ஈட்டுபவர் மட்டுமே நிலம் வாங்க முடியும்.

பீகார்: பீகார் நில ஆவணங்களின்படி, ஒருவர் விவசாயம் அல்லது விவசாயம் அல்லாத நிலம் உட்பட 15 ஏக்கர் நிலம் வரை வைத்திருக்கலாம்.

குஜராத்: விவசாயிகள் மட்டுமே குஜராத்தில் விவசாய நிலம் வாங்க முடியும். இந்தியாவில் உள்ள எந்த விவசாயியும் இங்கு விவசாய நிலம் வாங்க முடியும்.

தமிழ்நாட்டில் ஒருவர் எத்தனை ஏக்கர் வைத்திருக்கலாம் என்று, சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் என்.ரமேஷ் கூறுகையில்,

``தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு சட்டம் 1961 ல் இயற்றப்பட்டது. பெரிய நிலக்கிழார் குடும்பங்கள், ஜமீன்கள், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சொத்துகள் வைத்து இருக்கக் கூடாது. நிலத்தை வரம்புபடுத்தி மிகை மற்றும் உபரி நிலங்களைக் கையகப்படுத்தி நிலமற்ற ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1970ம் ஆண்டு இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்த பிறகு, 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு அதிகபட்சம் 15 ஏக்கர் நிலமும், அதற்கு மேல் இருக்கும் ஒவ்வொரு குடும்ப நபருக்கும் தலா 5 ஏக்கரும், சீதனச் சொத்தாக மருமகளுக்கு 10 ஏக்கரும் வைத்து இருக்கலாம்.

இவையெல்லாம் உள்ளடக்கி ஒரு குடும்பத்துக்கு 30 ஏக்கர் வரை இருக்கலாம். இதை ஸ்டாண்டர்டு ஏக்கர் (STANDRAD ACRE) என்ற அளவு மூலம் பிரிக்கப்படுகிறது. ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது சாதாரண ஏக்கரை விடக் கூடுதலாக இருக்கும்.

அவை நிலத்தின் தீர்வை அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது புன்செய் நிலமாக இருப்பின் 40 ஏக்கரும் நன்செய் நிலமாக இருந்தால் 25 ஏக்கர் ஆகும். மடம், ஆதீனம் போன்ற சமய பொறுப்பு அமைப்புகளுக்கு நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது'' என்றார்.

– பி.முத்துராஜ்

# மனவலிமை அவசியம் வேண்டும் !

இன்றைய சமூக சூழலில் உடல் ரீதியாக ஒவ்வொருவருக்கும் பாதிப்பு இருந்தாலும் அதை எதிர்கொள்கின்ற மனவலிமை இல்லாத காரணத்தால் அந்த உடல் பாதிப்பு மனதையும் பாதித்து விடுகிறது. எனவே மனவலிமை மிக முக்கியம்.

மனிதனுக்கு மன வலிமை மிகவும் முக்கியம். வாழ்க்கை எப்போதும் ஏற்றத்தாழ்வுகளும் இன்ப துன்ப துன்பங்களும் நிறைந்தது. மன வலிமை உள்ள ஒருவரால் மட்டுமே வாழ்க்கையை பேலன்ஸ்டாக நடத்த முடியும். மன வலிமையை அதிகரிக்கும் நான்கு விஷயங்கள் என்ன என்பதை பற்றி பார்ப்போம்.

ஒருவர் சுய விழிப்புணர்வோடு இருந்தால் தன்னுடைய எண்ணங்கள் உணர்வுகள் நடத்தைகள் இவற்றை நன்றாக அறிந்து கொள்ளவும் முறைப்படுத்தவும் முடியும். கடுமையான சூழலின் போது நம்மால் அதை சமாளிக்க முடியுமா? என்கிற தெளிவான அறிவை அது தரும். பரபரப்பான வாழ்க்கை முறையில் தினமும் அரை மணி நேரமாவது ஒதுக்கி தியானம் செய்து நமது சுய விழிப்புணர்வை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

சுய விழிப்புணர்வு அதிகரிக்கும்போது ஒருவரால் நிகழ்காலத்தில் நடக்கும் விஷயங்களை சிறப்பாக எதிர்கொள்ள முடியும். லட்சியங்களை செயலாற்றும் போது தேவையில்லாத கவனச் சிதறல்களை குறைக்க முடியும். வேலையில் நன்றாக கவனம் செலுத்த முடியும்.


எஸ்.ஜானகி

எதிர்மறை எண்ணங்கள் ஒருவரின் ஆற்றலை குலைத்து விடும். தோல்விகள் ஏற்பட்டு விடுமோ, துயரங்கள் நிகழ்ந்துவிடுமோ என்று அஞ்சிக் கொண்டே இருப்பது தேவையில்லாத விளைவுகளை ஏற்படுத்தும். தனக்குத்தானே ஊக்கமூட்டிக் கொண்டு சவால்களை எதிர்கொள்ளத் தேவையான நேர்மறை எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு நேர்மறையான வாக்கியங்களை தனக்குள்ளே சொல்லிக்கொண்டு இருப்பதன் மூலம் ஒருவர் சிறப்பாக வெற்றி காண முடியும்.

கம்ஃபோர்ட் சோன் எனப்படும் தனக்கு மிகவும் பழக்கமான சூழலிலேயே உழன்று கொண்டு இருப்பது எப்போதும் பெரிய வெற்றிகளையோ மாற்றங்களையோ வாழ்வில் தராது. புதிய சூழ்நிலை புதிய வேலை போன்றவற்றில் ஈடுபடும் போது அது தன்னம்பிக்கையின் அளவை உயர்த்தும். வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். பொது மேடைகளில் பேசுதல், தனியாக பயணம் செய்தல், புதிய மொழியை கற்றுக் கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபடலாம். இதுபோல புதிய விஷயங்களை சற்று சிரமப்பட்டு கற்றுக் கொள்வதன் மூலம் மனவலிமை நன்றாக அதிகரிக்கும். சிரமமான காலகட்டங்களில் எளிதாக மீண்டு வர அவை உதவும்.

உடல் மற்றும் மன நலனில் அக்கறை காட்டி அதற்கான பயிற்சிகளில் ஈடுபடுவது ஒருவரின் மன வலிமையை அதிகரிக்கும். சத்தான உணவு, போதுமான அளவு தூக்கம், உடற்பயிற்சி, மன அழுத்த மேலாண்மை முதலியவை மனவலிமையின் தூண்கள். இயற்கை சூழலில் காலாற நடப்பது, நல்ல நண்பர்களிடம் பேசுவது தேவைப்படும் நேரத்தில் தனிமையில் இருப்பது போன்றவையும் மனதிற்கு உற்சாகம் தரும். தன்னை எப்படி முன்னேற்றிக் கொள்ளலாம் என்று சற்றே யோசித்து அதற்கான செயல்பாடுகளில் ஈடுபட்டால் மனவலிமை அதிகரிப்பதோடு வாழ்வும் வளமாகும்.



## மித்ரா டாக்கீஸ்



நடிகர் விஷால் அவர்கள் வெளிநாட்டில் (USA) இருந்து வந்தவுடனே மறைந்த கேப்டன் விஜயகாந்த் அவர்களின் நினைவு இடத்தில் மரியாதை செலுத்தியும் அதன்பிறகு அவரின் இல்லத்திற்கு சென்று அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி இருந்தார்.

அதன் பின் அன்று மாலையே இயக்குனர் ஹரி அவர்களின் இயக்கத்தில் 'ரத்னம்' படப்பிடிப்பிற்காக திருப்பதி சென்று தயாரிப்பு தரப்பினர் மூன்று நாட்களுக்கு திட்டமிட்டு இருந்த படப்பிடிப்பை நடிகர் விஷால் அவர்களின் ஒத்துழைப்பில் இரண்டே நாட்களில் முடித்து கொடுத்துள்ளார். விஷால் அவர்களின் இந்த செயல்பாடு அனைவரின் பாராட்டுக்களையும் பெற்று தயாரிப்பாளருக்கு ஒரு நாள் படப்பிடிப்பிற்கு ஆகும் 30லட்சம் செலவை சேமித்து கொடுத்துள்ளார்.

'ரத்னம்' திரைப்படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்பு முழுவிச்சில் நடைபெற்று இன்னும் சில நாட்களில் படப்பிடிப்பு நிறைவு பெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வேதிகா நடிக்கும் சஸ்பென்ஸ் த்ரில்லர் படம் ‘பியர்’

தமிழில் காளை, பரதேசி, முனி உள்ளிட்ட படங்களில் நடித்தவர் நடிகை வேதிகா. தற்போது தெலுங்கில் முதல் முதலாக பியர் என்னும் சஸ்பென்ஸ் த்ரில்லர் படத்தில் நடித்து வருகிறார். இதுகுறித்து அவர் கூறும்போது, இது மிகவும் அருமையான கதை. எந்த மாதிரியான படமாக இருந்தாலும் அந்த கதாபாத்திரம் குறித்து நிறைய தயாரிப்புகள் இருக்க வேண்டும். இந்த கதாபாத்திரம் குறித்து நிறைய கற்றுக் கொண்டேன். எனது மற்ற படங்களுடன் ஒப்பிடும்போது போது பியர் முழுக்க முழுக்க சஸ்பென்ஸ் த்ரில்லர். இப்படத்தில் என்னை சுற்றித்தான் அனைத்து விஷயங்களும் நிகழும். பர்ஃபாம் செய்ய நிறைய வாய்ப்புகள் உள்ளது. தற்போது தான் படப்பிடிப்பு தொடங்கி உள்ளது. தனக்கு என்ன வேண்டும் என்பதில் இயக்குனர் மிகவும் தெளிவாக உள்ளார். இப்படத்தில் நடிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் இப்படத்திற்கு அனுப் ரூபென்ஸ் இசை அமைக்கிறார். ஆன்ட்ரூ ஒளிப்பதிவு, நடிகர்கள் ஜெயபிரகாஷ், அனீஷ் குருவில்லா, சாயாஜி ஷின்டே என படக்குழுவினர் அனைவரும் மிகவும் அனுபவமிக்கவர்கள் என்பதால் மிகவும் எதிர்பார்ப்பு ஏற்படுத்தியுள்ளது என்கிறார்.



## இசையமைப்பாளர் ஆகிறார் மிஷ்கின்!



2018ஆம் ஆண்டு வெளியான சவரக்கத்தி படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் இயக்குநர் மிஷ்கினின் தம்பி ஆதித்யா. இவர் டெவில் என்ற படத்தை தற்போது இயக்கியுள்ளார் இந்த படத்தில் விதார்த், பூர்ணா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார் இயக்குனர் மிஷ்கின்.



**சிக்லெட்ஸ்:** இயக்குநர் எம். முத்து இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'சிக்லெட்ஸ்'. இந்த படத்தில் சாத்விக் வர்மா, ஜாக் ராபின்சன், ரஹீம், நயன் கரிஷ்மா, அமிர்தா ஹல்தார், மஞ்சீரா மற்றும் பலர் நடித்துள்ளனர். 2கீ கிட்ஸிற்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் இடையேயான தலைமுறை இடைவெளியை மையப்படுத்தி தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை எஸ் எஸ் பி பிலிம்ஸ் பட நிறுவனம் சார்பில் ஏ. சீனிவாசன் குரு தயாரித்திருக்கிறார். இப்படம் பிப்ரவரி 2ஆம் தேதி வெளியாக உள்ளது.



**லவ்வர்:** இயக்குனர் பிரபுராம் வியாஸ் எழுதி இயக்கியுள்ள 'லவ்வர்' (lover) திரைப்படத்தில் கதாநாயகனாக நடிகர் மணிகண்டன் நடித்துள்ளார். இதில் ஸ்ரீகௌரி பிரியா, கண்ணன் ரவி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இந்த படத்துக்கு ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்துள்ளார். இத்திரைப்படம் பிப்ரவரி 8 ஆம் தேதி வெளியாக உள்ளது.



**லால் சலாம்:** லைகா தயாரிப்பில் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கியுள்ள திரைப்படம் 'லால் சலாம்' திரைப்படம். இந்த படத்தில் நடிகர் ரஜினிகாந்த் கேமியோ ரோலில் நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த படத்தில் விஷ்ணு விஷால், விக்ராந்த், செந்தில், தம்பி ராமையா உள்ளிட்ட முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். இந்த திரைப்படத்திற்கு ஏஆர் ரகுமான் இசையமைத்துள்ளார். திரையரங்குகளில் வெளியாகும் இந்த படம் கிரிக்கெட்டை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது.



# வடக்குப் பட்டி ராமசாமி விமர்சனம்!

வடக்குப்பட்டி என்ற கிராமத்தில் தன்னுடைய குடும்ப வறுமையால் சிறுவயதில் கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறார் பானை தொழில் செய்யும் ராமசாமி (சந்தானம்). ஊரே காட்டேரி என்று பயந்து கொண்டிருக்கும் ஒருவர் எதிர்பாராத தருணத்தில் தற்செயலாக சந்தானத்தில் பானையால் வீழ்த்தப்படுவதால், கிராம மக்கள் அந்த பானையையே அம்மனாக வழிபட தொடங்குகின்றனர். மக்களின் நம்பிக்கையை மூலதனமாக்கி, அந்த பானையை வைத்து ஒரு சிறிய கோயிலை கட்டி அதன் மூலம் வருமானம் ஈட்டி வருகிறார் ராமசாமி. ஒரு கட்டத்தில் சந்தானத்தின் கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை அபகரிப்பதில் சந்தானத்துக்கும் அந்த ஊர் தாசில்தாருக்கும் (தமிழ்) இடையே நடக்கும் மோதலில் கோயில் சீல் வைக்கப்படுகிறது. கோயில் மீண்டும் திறக்கப்பட்டதா? இதன்பிறகு என்னவானது? என்பதை கலகலப்புடன் சொல்லியிருக்கிறது ‘வடக்குப்பட்டி ராமசாமி’.

படம் முழுக்கவே நகைச்சுவை கொடிகட்டி பறக்கிறது.குறிப்பாக சந்தானம்,சேஷு,மாறன் கூட்டணி தங்கள் கிராமத்துக்கு ‘மெட்ராஸ் ஐ’ நோயை பரப்புவதற்காக ராணுவ மேஜரான நிழல்கள் ரவியின் வீட்டுக்குள் நுழையும் காட்சிகள் சற்றே நீண்ட காட்சியாக இருந்தாலும், கலகலப்புக்கு பஞ்சமில்லை. படம் தொடங்கியது முதல் இடைவேளை வரை, எந்த இடத்திலும் தொய்வின்றி சுவாரஸ்யமாகவே படம் செல்கிறது. சந்தானம், மாறன், சேஷு , ரவிமரியா, ஜான் விஜய், கூல் சுரேஷ், நிழல்கள் ரவி உட்பட அனைவரின் நடிப்பும் சிரிப்புக்கு பஞ்சம் இல்லாமல் பார்த்துக் கொள்கின்றனர். மற்ற நடிகர்களோடு இணைந்து நடித்து வந்த சந்தானம் தனி டிராக்கில் தன்னை ஒரு கதாநாயகனாக எடுத்து வந்த அனைத்து படங்களிலும் கிடைத்த வெற்றியை விட இந்த படம் வெற்றியை கொடுக்கும் என்று அவரது ரசிகர்களை போலவே நாமும் நம்புகிறோம்

# நாடு சுதந்திரம் பெற்றும் சாலையை பார்க்காத கிராம மக்கள்!

தமிழக அரசே.. நமது தேசம் சுதந்திரமடைந்து 76 ஆண்டு காலத்திற்கு மேலாகியும் சாலை வசதியின்றித் தவிக்கும் மலை கிராம மக்களின் துயர் துடைக்க நடவடிக்கை எடுக்க ஏன் இந்த தயக்கம்..?

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட நெக்னாமலை கிராமத்தில் 700க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். மேற்படி மலை கிராமத்திற்கு தேசம் சுதந்திரமடைந்து 76 ஆண்டு காலத்திற்கு மேலாகியும் சாலை வசதி ஏதும் செய்து தரப்படாததால் மக்களுக்கு திடீர் உடல் உபாதைகள் ஏற்பட்டாலும் பாம்பு மற்றும் ஏதேனும் விஷப்பூச்சிகள் கடித்தாலும் எவரேனும் இறந்துவிட்டால் அவர்களின் சடலங்களையும் கர்ப்பிணி பெண்கள் பிரசவத்திற்கு மருந்துவமனை செல்ல வேண்டுமென்றாலும் டோலி கட்டி சுமந்து செல்லும் அவலநிலை தான் தற்போது வரை தொடர்ந்து நிலவி வருகிறது.



மேலும் விவசாயிகள் விவசாய இடுபொருட்களை மலை கிராமத்திற்கு கொண்டு செல்வதற்கும் விளைபொருட்களை சந்தைக்கு கொண்டு செல்வதற்கும் ரேஷன் பொருட்களை தங்களது இல்லத்திற்கு கொண்டு செல்வதற்கும் எவ்வித வசதிகளும் இன்றி தலை மீது தான் சுமந்து சென்றாக வேண்டும். மேலும் வயதானவர்கள் ரேஷன் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டுமானால் எவரிடமாவது உதவி கோரும் நிலை தான் உள்ளது. இதனால் மேற்படி சாலை வசதியில்லாத நெக்னாமலை கிராம மக்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர்.

கடந்த 2020ஆம் ஆண்டில் அப்போதைய மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் KC.வீரமணி BA., அவர்களின் சீரிய முயற்சியின் பயனாக அமைக்கப்பட்ட மண்சாலையும் மழையால் சேதமடைந்ததால் மேற்படி மலை கிராம மக்கள் போக்குவரத்து சிரமமான நிலையிலேயே தொடர்கிறது. ஆகவே தமிழக அரசு மேற்படி நெக்னாமலை கிராமத்திற்கு இயற்கை சூழல் கெடாதவண்ணம் இயற்கை சீற்றம் ஏற்படும் காலங்களிலும் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாத வகையில் உரிய பாதுகாப்புடன் கூடிய தரமான தார் சாலை அமைக்கும் பணியை முன்னெடுக்க வேண்டும் என்று நெக்னாமலை கிராம பொதுமக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.





என்றும் மக்கள் பணியில்..

Dr.K.அரிகிருஷ்ணன் M.Com., B.Ed., LLB., D.T.Ed., D.Co-op.,
நிறுவனர் – தலைவர், அம்மா பவுன்டேஷன், கிரிசமுத்திரம் கிராமம் – அஞ்சல், வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம்.

# பின்னல் அலங்காரம் அல்ல:

## வாழ்க்கைத் தத்துவம்



**பி**ன்னல் உறவைக் குறிக்கிறது. முடியை விரித்துவிடுவது(free hair) அமங்கலமானது... எவ்வுறவும் வேண்டாம் என்பதை குறிக்கிறது. ஆகையினால் தான் இறந்தவர் வீட்டிலும் பிணத்தின் பின்னும் தலைவிறி கோலமாக செல்வர். அதன் பொருள் "என்னவரே சென்ற பின் எனக்கேது உறவு. இனி எந்த உறவும் எனக்கில்லை" என்பதாகும்... மேலும் தலை முடியின் நுனி வழியாக ஆத்ம சக்தி வெளியேறுகிறது. நல்ல / தீய உணர்வுகள் (அ) அதிர்வுகள் வந்து செல்வதற்கான ஊடகம் (medium) போன்றது முடியின் நுனி... மேலும் ஸந்யாஸிகள் மொட்டை அடித்துக் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணம்... ஏனெனில் வெளியிலிருந்து பெறுவதற்கும் ஒன்றுமில்லை...








நம்மிடமிருந்து போவதற்கும் ஒன்றுமில்லை... என்பதை உணர்த்துவதற்காக... ஆகையினால் தான் முற்காலத்தில் நுனி முடி வெளியில் தெரியாமல் இருக்க நார் அல்லது குஞ்ஜலம் கட்டிக் கொள்வர்... ஆகையால் தலைவிரி கோலத்தை தவிர்ப்போம்.இது உறவின் மீதான பிடிப்பை அறுக்க கூடியது. பின்னல் இதன் அமைப்பு த்ரிவேணி சங்கமத்தை குறிப்பதாகும். மூன்று நதிகள் சேரும் போது இரண்டு நதிகள்(கங்கை,யமுனை) கண்களுக்கு புலப்படுகின்றன. ஒரு நதி (சரஸ்வதி) புலப்படுவதில்லை. இதே போலவே பின்னலின் மூன்று பகுதிகளில் இரண்டு பகுதிகளே புலப்படுகின்றன. பின்னலின் வலது பிறந்த வீடு இடதுபுகுந்த வீடு நடுப்பகுதிபெண் தன்னை மறைத்து இரு வீட்டாரையும் இணைத்து அழகுற தோற்றமளிக்கச் செய்வதே இதன் பொருளாகும். தன்னை முன்னிறுத்தும் பெண்ணை காட்டிலும் தன் குலத்தை முன்னிறுத்துபவளே உயர்ந்தவள் ஆவாள். ஆகையினால் பின்னல் வெறும் அலங்காரம் அல்ல வாழ்வின் தத்துவமாகும்.

**தகவல்:மதுரை விஜயபிரபு**

# பித்தப்பையை பாதுகாக்க வேண்டியது அவசியம்!



நமது முன்னோர்கள் குறைந்தபட்சம் 80 ஆண்டு காலம் வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய சூழலில் அறிவியல் வளர்ந்த காலத்தில் வாழ்க்கை வசதி வாய்ப்புகள் வளர்ந்த அளவுக்கு எத்தனை நாள் உயிர் வாழ்வோம் என்பது நிச்சயமில்லாத சூழலாக இருக்கிறது. அன்றைய தினங்களில் உணவை ஆரோக்கியமாக உட்கொண்டது மட்டுமல்ல சரியான நேரத்துக்கு உட்கொண்டார்கள். எங்களுக்கு ஏது நேரம் ஓடிக்கொண்டே இருக்கிறோம் என்று சில பேர் தாங்கள் பிஸியாக இருப்பதாக சொல்லுகிறார்கள் ஆனால் அவர்களுடைய உடல் நிலை பாதிக்கப்படும்போதுதான் தன்னுடைய உடலை தானே சரியாக கவனிக்காமல் விட்டோம் என்கிற உணர்வு ஏற்படும். ஒரு சூழலுக்குப் பிறகு சரியான உணவை உட்கொள்ளாத காரணத்தால் நம்முடைய உடலை மருத்துவர் இடத்தில் ஒப்படைத்து விடுகிறோம் அவர் சொல்லும் நேரத்தில் மாத்திரைகளை போட்டுக்கொண்டு எதையாவது சாப்பிட்டுக் கொண்டு உடலை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளாமல் நம் மனம் போல போக்கில் வைத்திருக்கிறோம். என்னதான் உடல்நிலை குறித்து விழிப்புணர்வு கட்டுரைகள் காணொளிகள் வந்தாலும் கூட அவற்றையெல்லாம் கேட்கும் நேரம் பார்க்கும் நேரம் படிக்கும் நேரம் இனி நாம் நம் உடலை பாதுகாப்போம் என்கிற எண்ணம் வருகிறதே தவிர அடுத்த நொடியே அதை மறந்து விடுகிறோம். நம் உடலை நாம் தான் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வரும் வரை உயிர் வாழ உத்தரவாதம் இல்லை.

கல்லீரலுக்கு அடியில் 7 - 10cm நீளமும் 5cm பருமனும் அமைந்துள்ள பேரிக்காய் வடிவ பை பித்தப்பை ஆகும்.

நமது கல்லீரலின் செல்கள் ஒவ்வொரு நாளும் 800 முதல் 1,000 மில்லிலிட்டர்கள் பித்த திரவத்தை உற்பத்தி செய்து அதை நேரடியாக சிறுகுடலில் (டியோடினம்) வெளியிட்டு உணவின் கொழுப்பை கரைத்து உடைத்து நமது குடல் உறிஞ்ச உதவுகிறது.

இப்படி நேரிடையாகவே கல்லீரல் இந்த வேலையினை செய்தாலும் உணவில் ஜீரணிக்க வேண்டிய கொழுப்பு இல்லாதபோது ஒரு சிறிய குழாய் ஆனது பிரிந்து பித்தப்பையில் எப்பொழுதுமே 30 முதல் 80ml பித்த திரவத்தினை டெபாசிட் செய்து வைக்கின்றது.

நாம் எப்பொழுதெல்லாம் கொழுப்பு நிறைந்த உணவு எடுக்கிறோமோ அப்போது இந்தபித்தபை வேலைசெய்து அடிசனல் பித்த நீரை குடலுக்கு வழங்குகிறது.

அதேசமயம் தற்போதைய நமது உணவுபழக்கத்தில் கிட்டத்தட்ட கொழுப்பு நிறைந்த உணவை தவிர்த்து வரும்போது நமது வாழ்நாளில் இந்த பித்தபைக்கான வேலையே இல்லாமல் போய்விடுகிறது.

இதன் காரணமாக அடிக்கடி நீண்ட நேரமாக சேகரித்து வைக்கப்படும் பித்தநீர் ஆனது தனது மூலக்கூறு தன்மையில் உருமாறி பித்தப்பை கற்கள் தோன்றுகின்றன.

இன்னொருபக்கம் சிலசமயம் எந்தவித அறிகுறிகளும் இல்லாமல் இது புற்றுநோயாக உருவெடுக்கத்தொடங்குகிறது.

உணவு கட்டுப்பாடு அடிப்படையில் கொழுப்புகளை அறவே தவிர்க்கும் ஒருவரின் உடலில் இந்த பித்தப்பை புற்றுநோய் ஆனது எந்தவித அறிகுறிகளையும் தராமல் புற்று செல்களை கல்லீரலுக்கு கடத்தி விடுகின்றன.

பித்தப்பையினை வெட்டி எறிந்தாலும் நாம் உயிர் வாழலாம் எனும் போது தொடக்கத்திலேயே நோய் அறிகுறியை வெளிப்படுத்த நாம் வாய்ப்பே தராமல் நம் உணவு முறைகளை மாற்றி கொண்டதன் விளைவே இளம் வயதினரின் மரணங்கள் ஏற்படக்கூடும் என்பதை உணர்ந்து கொழுப்பு உணவை அறவே தவிர்க்க கூடியவர்கள் தங்கள் பித்தப்பை மீது கவனம் கொள்ள வேண்டிய தருணமிது.



**கா**லையில் அலுவலகம் திறக்கும் போதே வாசலில் நின்றிருந்தார் கபாலி கான்.

அவரை அமர வைத்து சூடாக காப்பி கொடுத்தோம் குடித்துவிட்டு பரபரப்பாக இருக்கும் சூழலில் நாமும் சற்று பரபரப்பாக இருக்க வேண்டியது அவசியம் என்றார். நாம் அமைதியாக இருந்த போது அவரே தொடர்ந்து தேர்தலுக்கான வேலையில் எல்லா கட்சியும் ஈடுபட்ட சூழலில் தமிழகமே பரபரப்பாக இருக்கிறது என்றார். அப்படியா?

ஆமாம்.தேர்தல்நிலவரம்நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே களம் சூடாக இருந்த சூழலில் நடிகர் விஜய் பரபரப்பு காட்டி இருக்கிறார்.

**எந்த படம்?**

படம் அல்ல. கட்சி ஆரம்பித்திருக்கிறார். தமிழக வெற்றி கழகம் என்பது கட்சியின் பெயர்.

**ஒஹோ!அப்ப பாராளுமன்றத் தேர்தல் பரபரப்பு கூடிவிட்டதா?**

பாராளுமன்ற தேர்தலுக்கு தாங்கள் போட்டியிடவில்லை என்று தங்கள் இலக்கு 2026 என்று சொல்லிவிட்டார்!

**அப்ப பாராளுமன்ற தேர்தல் களம் எப்படி அமையுமுன்னு நெனைக்கிறீங்க?**


சொல்றேன்.

தி.மு.க.காங்கிரஸ் ஒரு அணியாக களம் காண உள்ள நிலையில், இந்த கூட்டணிக்கு எதிராக அ.தி.மு.க. பலம் வாய்ந்த கூட்டணியை உருவாக்க காய் நகர்த்தி வருகிறது. இது தொடர்பாக பா.ம.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளுடன் அந்த கட்சி ரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது.

அதே நேரத்தில் பா.ஜனதா கூட்டணியில் இருந்து வெளியேறி உள்ள அ.தி.மு.க.வை தனிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் பா.ஜனதா கட்சி கூட்டணி பேச்சுவார்த்தையை ரகசியமாக நடத்தி முடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் பா.ஜனதா கூட்டணியில் இடம் பெற்றிருந்த பா.ம.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் அந்த கட்சிகளுக்கு எத்தனை தொகுதிகள் ஒதுக்கப்பட உள்ளது என்பது பற்றிய பரபரப்பான தகவலும் வெளியாகி இருக்கின்றன.

**அதையும் சொல்லுங்க?**



பா.ஜனதா கூட்டணியில் பா.ம.க.வுக்கு ஸ்ரீபெரும்புதூர், ஆரணி, மயிலாடுதுறை, தர்மபுரி, விழுப்புரம், கடலூர், அரக்கோணம் ஆகிய 7 தொகுதிகள் ஒதுக்குவதற்கு முடிவு செய்யப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த தொகுதிகள் பா.ம.க. வலுவாக உள்ள தொகுதிகளாகும்.

இது தொடர்பாக இறுதி முடிவு விரைவில் எடுக்கப்பட்டு அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒஹோ!**

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜனதா அரசே மத்தியில் மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் பா.ஜனதா கூட்டணியில் இடம் பெற்று வெற்றி பெறும் பட்சத்தில் மத்திய மந்திரி பதவியையும் கேட்டு பெற்று விடலாம் என்று பா.ம.க. கணக்கு போட்டுள்ளது.

**அடடே!**

இதே போன்று தே.மு.தி.க.வுடனும் தொகுதி பங்கீடு தொடர்பான ரகசிய பேச்சுவார்த்தையை பா.ஜனதா கட்சி நடத்தி முடித்திருப்பதாகவும், கூட்டணியில் 2 தொகுதிகளை தே.மு.தி.க.வுக்கு ஒதுக்க முடிவு செய்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தே.மு.தி.க.வுக்கு கள்ளக்குறிச்சி தொகுதியை ஒதுக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இன்னொரு தொகுதி எது என்பது இன்னும் முடிவாகவில்லை. பாராளுமன்ற தேர்தலில் மேல்சபை எம்.பி. பதவி ஒன்றை கேட்டு பெற வேண்டும் என்பதில் தே.மு.தி.க. நிர்வாகிகள் உறுதியாக உள்ளனர். இதுவும்





ரகசிய கூட்டணி பேச்சுவார்த்தையில் உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

**கேட்டது கிடைக்குமா ?**

டி.டி.வி.தினகரனின் அ.ம.மு.க.வும் பாரதிய ஜனதா கூட்டணியில் இடம் பெறுவது உறுதியாகி உள்ளது. திருச்சி, சிவகங்கை ஆகிய 2 தொகுதிகள் இந்த கட்சிக்கு ஒதுக்கப்பட உள்ளன.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓ.பன்னீர் செல்வத்துக்கு தேனி தொகுதி ஒதுக்கப்பட உள்ளது. இந்த தொகுதியில் ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் போட்டியிடுவார் என்று தெரிகிறது.

**இது வேறயா?**

**இது மட்டுமா?**

ஜி.கே.வாசனின் த.மா.கா., பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சி, ஏ.சி.சண்முகத்தின் புதிய நீதிக்கட்சி ஆகியவற்றுக்கும் தலா ஒரு இடங்களை ஒதுக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக பாரிவேந்தருக்கு பெரம்பலூர் தொகுதியும், ஏ.சி. சண்முகத்துக்கு வேலூர் தொகுதியும், ஜி.கே.வாசனுக்கு தஞ்சை தொகுதியும் ஒதுக்கப்பட வாய்ப்பு உள்ளது.

**மெகா திட்டமா இருக்கே?**

அதுபோன்ற ஒருநிலை எட்டப்பட்டு விட்டால் அடுத்த மாதம் பிரதமர் மோடி திருப்பூர் மாவட்டம் பல்லடத்துக்கு தேர்தல் பிரசாரத்துக்காக வரும் போது கூட்டணி கட்சி தலைவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் ஏற்றி பிரமாண்ட பிரசாரத்தை தொடங்கவும் பாரதிய ஜனதா கட்சி வியூகம் வகுத்துள்ளது.

அடுத்த மாதத்துக்கு இன்னும் அதிகமான செய்திகளோடு வருகிறேன். வரட்டுமா என்று வெளியேறினார் கபாலிகான்.



# STUDENT EMPOWEMENT

RURAL DEVELOPMENT IS THE FOCUS !

"One who changes after the change, Survives;

One who changes with the change, Succeeds;

One who causes the change, LEADS."

Today's students are the future LEADERS!

India lives in the villages - this is a common saying. In a vast country like ours, metros, cities, and towns and urban accommodate only about 28 percent of population, whereas over seventy percent live in nearly 6 lakhs villages spread out in various states. It stands to simple logic that unless villages are developed, India cannot be termed as a developed nation. Planners and visionaries have often touched upon village development as cardinal to national development. PURA conceived by our illustrious former President Dr. APJ Kalam is a case in point. Providing Urban Amenities in Rural Areas - PURA is an excellent and studied approach for developing rural areas in India. Modern civilization has not penetrated into remote villages even now, though some villages have developed through five-year plans.

Education has not fully penetrated into the villages so far. There are many hazards



**R. RAJAMMAL**, M.A.M.Ed, PGDGC, D.Let.
National Awardee Educationist,
Woman Achiever & Social Ambassador

in implementing education system in a scientific manner, but ways will have to be found to change the pattern to develop the people and also their infrastructure. Proper understanding of people and their issues in a sympathetic manner can bring better changes. A change in understanding the village people and their Teac needs are primary attempts to make improvement faster and visible. Quality education for the village children is the need of the hour. Such educated groups of village youngsters are bound to create a silent revolution among the village population. A spirit of change and innovation pervades the field of educational activities.

Village development as per planned process can change the face of India in a remarkable way and the enthusiasm of the villagers in every human activity need to be tapped to maximum national advantage. All Schools should strive for giving quality education for the underprivileged children of rural areas. . It may not take much time to change the face of villages if we act in a concerted way and in cohesion.

The role of Schools is not only to pursue academic excellence but also to motivate and empower its students to be lifelong learners, critical thinkers and productive members of an ever- changing global society. Schools provide students with a platform to think, express and exhibit their skills and help children to nurture his/her talents and overcome shortcomings by providing appropriate, all-inclusive education.

Every great man had shown us a new path, thrown a new light and had showed a new idea. The light of Edison or the flight of Wright Brothers, the fight of Chatrapathi Shivaji or the might of C Napoleon, the sea routes of Vasco-de- Gama or of Magellan... something new was there in them and in the things, they gave us. The students have to search for such new things and not for known things. This urge



to purge the boredom would offer them all a new kingdom. Students from Single Teacher Schools can emerge as great men one fine day.

It is true that world today is riddled with racial, political, religious, communal and ideological differences. To solve these problems, people must exercise the spirit of benevolence and tolerance towards each other. The noble method inculcates ethical and moral co-operation for the universal good. Humanity must realize that development of values is more important than material development for of man happiness. Truth, service, charity and love must be practised if the world is to be turned into a better place for us to live. Schools by training the students, would certainly make the society a better place to live.

In learning there can be only a beginning and never an end. A life full of learning of a great man becomes a little dot for yet another man for his learning. Learning becomes a continuous process with positive progress through Single Teacher Schools.



# மன அழுத்தம் தருகிறதா இரத்த அழுத்தம்!

இன்றைய அவசர உலகத்தில் மனிதர்கள் உணவு உண்பதை முறையாக வைத்துக் கொள்ளாத காரணத்தால் உடலில் ரத்த ஓட்டம் சீராக இருப்பதில்லை. குறிப்பாக இரத்த அழுத்தம் என்கிற நோய் எல்லோரையும் படாத பாடுபடுத்துகிறது.

மாத்திரை மருந்து வகைகளில் இது குறைந்தாலும் உணவு கட்டுப்பாட்டிலும் இதை சீர் செய்யலாம் என்கிறார்கள் நம்முடைய முன்னோர்கள்.

நம் முன்னோர்கள் சொன்ன வைத்தியம் இதுதான்!

உப்பு சேர்க்காமல் எலுமிச்சம் பழம் சாற்றை 1டம்ளர் தண்ணீரில் கலந்து குடிக்கவும். 10 பூண்டை பாலில் கலந்து கொதிக்க வைத்து பூண்டை மட்டும் சாப்பிடவும்.

முதல் நாள் ஊற வைத்த வெந்திய தண்ணீரை மறுநாள் ஒரு டம்ளர் அளவில் வெறும் வயிற்றில் குடிக்கவும்.

5 சின்ன வெங்காயம் பச்சையாக காலையில் சாப்பிடவும். பெரிய நெல்லிக்காய் தினமும் ஒன்று சாப்பிடவும்.

வாரம் மூன்று நாட்கள் பீட்ரூட் ஜூஸ் குடிக்கவும். கமலா ஆரஞ்சு, சாத்துக்குடி பழங்களை தினமும் ஒன்று சாப்பிடவும்.

வாழைப்பழம் தினமும் ஒன்று சாப்பிடவும். நார்ச்சத்து உள்ள காய்கறிகள், பழங்கள் கீரை வகைகளை சாப்பிடவும்.

வாரம் இரண்டு நாட்கள் முருங்கைக்கீரை, சின்ன வெங்காயம் சூப் செய்து சாப்பிடவும்.

தினமும் 45 நிமிடம் நடைப்பயிற்சி செய்யவும். செம்பருத்தி பூவை தினமும் மூன்று சாப்பிடவும். மாதுளம் பழம் சாப்பிடவும்.

மஞ்சள் தூளை பாலில் கலந்து குடிக்கவும். கருவேப்பிலையை தினமும் இரண்டு கொத்து சாப்பிடவும். கொதிக்க வைத்த சீரக தண்ணீரை தினமும் இரண்டு டம்ளர் பருகவும். இஞ்சி , இலவங்கம், 2 டம்ளர் தண்ணீர், 2 பூண்டை கொதிக்க வைத்து அவற்றுடன் அரை ஸ்பூன் தேன் மற்றும் அரை எலுமிச்சம்பழத்தை கலந்து வாரம் ஒரு நாள் குடிக்கவும்.அதே சமயத்தில்இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டியது.

உப்பை தவிர்க்க வேண்டும். ஊறுகாய், அப்பளம், பீசா பர்கர், ஐஸ்கிரீம், நூடுல்ஸ், சாஸ் சாக்லேட், உப்பு சேர்த்த பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்க்கவும்.

கருவாடு, துரித உணவுகள், கிரீம் மிகுந்த கேக் வகைகள், எண்ணெய்யில் வறுத்த உணவுகள், சிகரெட் மது கொழுப்பு அதிகம் உள்ள மாமிசம், சோடா உப்பில் தயாரிக்கப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண்டும்.

# அரிக்கமேடு அகழாய்வில் தமிழனின் அதிசயம்



**ம**னிதனின் கண்டுபிடிப்புகளில் மிகவும் சுவாரஸ்யமான, அத்தியாவசியமான பொருள் கண்ணாடியாகும். இக்கண்ணாடியின் கண்டுபிடிப்பு கி.மு. 5000வது ஆண்டு சிரியா தேசத்து கடற்கரையில் மிகவும் தற்செயலாக நிகழ்ந்தது.

கட்டிடங்களைக் கட்டுவதற்குரிய பாறைக் கற்களை விற்பதற்காக வந்த வணிகர்கள் சமைப்பதற்காக இரண்டு கற்களை அடுப்பு போல மணலில் வைத்து அதற்கு மேல் பாத்திரத்தை வைத்து தீ மூட்டினர். பின் நீண்ட நேரம் அதைக் கவனிக்காமல் விட்டதால் கற்கள் மிகவும் சூடாகி மணலில் வழிந்து, கலந்து ஒளி ஊடுருவாத ஒரு பளபளப்பான பொருள் உண்டானது. ரோம் தேசத்தின் வரலாற்றாசிரியர் HLQ (கி.பி.2379) இந்த நிகழ்வினைத்தான் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டதற்கான ஆரம்பமாக குறிப்பிடுகின்றா

அதன் தொடர்ச்சியாக இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில்புதுச்சேரி மாநிலத்தில் அமைந்துள்ள அரிகமேட்டின் தொல்பொருள் தளம், பல நூற்றாண்டுகளாக குறிப்பிடத்தக்க கண்ணாடி மணிகள் , வைரம் பட்டைத்தீட்டல் மற்றும் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் மையமாக இருந்தது.வந்தது அகழாய்வில் தெரிய வருகிறது மணிகள் கார்னெட் உட்பட கண்ணாடி மற்றும் கல் இரண்டாலும் செய்யப்பட்டன, ஆனால் கார்னெட் மூலப் பொருளின் ஆதாரம் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த ஐயத்தை கண்டறிய ஆய்வுகள் அரிகமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட கார்னெட் மணிகள் இந்தியாவின் ஹைதராபாத் நகருக்கு கிழக்கே தெலுங்கானா மாநிலத்தில் சுமார் 640 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள கரிப்பேட் வைப்பிலிருந்து பெறப்பட்ட கரடுமுரடான பொருட்களுடன் மூலப் பொருள்களுடன் ஒப்பிடப்பட்டன. இரண்டு இடங்களிலிருந்தும் மாதிரிகள் ஒப்பிடப்பட்டு சராசரி கலவை, சுவடுஉறுப்பு உள்ளடக்கங்கள், பெரிய மற்றும் சிறிய கூறுகளின் இரசாயன மண்டலங்கள், சேர்க்கை கூட்டங்கள் மற்றும் படிகங்களின் விளிம்புகள் மற்றும் மையங்களுக்கு இடையிலான சேர்ப்புகளின் மண்டலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கணிசமான தொடர்பை வெளிப்படுத்தின.

வரலாற்று ரீதியாக அரிக்கமேடு பகுதியில் கார்னெட் மணிகளை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்பட்ட கரடுமுரடான பொருள் கரிப்பேட் பகுதி இருப்பில் இருந்து உருவானது என்பதை நிறுவியது. இதை ஆக அரிக்கமேட்டிற்கு மணி செய்ய மூலப்பொருள்கள் பண்டைய வேங்கிநாட்டுப் பகுதியில் இருந்து வந்து, அவைகள் இங்கு மதிப்புக்கூட்டப்பட்டு அங்கிருந்து ஏற்றுமதி ஆனது தெரிகிறது. இவைகளை வாங்க ரோமானியர்கள் தங்கள் மது குப்பிகளுடன் வந்து தங்கி வாங்கி சென்றிருக்கிறார்கள்.

பண்டைய உலகில் கருவிகளாக வைரங்களின் தொழில்நுட்ப வரலாறு ரத்தினக் கற்களாக பயன்படுத்தப்படுவதை விட மிகவும் தெளிவற்றதாக உள்ளது. அரிகமேட்டில் வைரங்களைப் பயன்படுத்துவதற்கான சோதனைச் சான்றுகள் தென்கிழக்கு இந்தியா, கி. மு. 250 B.C.-A.D. 300, இதுவரை அறிவிக்கப்பட்ட முதல் முறையாகும்.

வீலர் அரிகமேட்டில் ஒரு மணிகள் செய்யும் கூடம் ஒன்றையும் ரோம் உடனான வர்த்தகத்திற்கான வலுவான ஆதாரங்களையும் கண்டுபிடித்தார். ரோமானியர்கள் அரிகமேட்டில் வைர பட்டைத்தீட்டும் பயிற்சிகளை பயன்படுத்தக் கற்றுக்கொண்டிருக்கலாம். வைர பிளவுகள் "ரத்தினங்களை ரோமானியர் மிகவும் விரும்பப்படுகின்றன" என்று HOQ கூறுகிறார். (HN 37.15.61). மேலும் இலக்கிய சான்றுகள், தமிழ் மற்றும் ரோமன் ஆகிய இரண்டும் இத்தகைய கண்டுபிடிப்புக்கு வலு சேர்க்கின்றன.

– பி.முத்துராஜ்

# பலன் தராத நட்பு இருந்தென்ன? இழந்தாலென்ன?



நமது புலன உறவுகளுக்கு அன்பான வணக்கம்.

வான்புகழ் வள்ளுவம், பால் – பொருட்பால், இயல்– நட்பியல், அதிகாரம் – 82 தீ நட்பு, குறள் – 812.

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

விளக்கம் ; பயன் உள்ள காலத்து நட்பு கொண்டு பயன் இல்லாதபோது நீங்கிவிடும் ஒவ்வாதவரின் நட்பைப் பெற்றால்தான் என்ன? இழந்தால்தான் என்ன? தமக்கு ஏதாவது பயன் உள்ளபோது மட்டும் அன்பொழுகப் பழகி , பயன் இல்லாதபோது நீங்கிச் செல்லும் இயல்புடையவர்களின் தீய நட்பைப் பெற்றால் வரும் நன்மையும் இல்லை.இழந்தால் வரும் கெடுதியும் இல்லை. இத்தகு நட்பு விரும்பத்தக்கதன்று.

இக்குறளுக்கு ஏற்புடைய சில இலக்கியப் பதிவுகள்:

1. சேரிடமறிந்து சேர், 2 .இணக்கமறிந் திணங்கு, 3. பாம்பொடு பழகேல், 4. மூர்க்கரோ டிணங்கேல்

**–ஆத்திசூடி ஔவையார்.**

1. சேரத் தக்க நல்லவர்களை ஆராய்ந்து நட்பு செய்.2. நட்பு செய்தற்குரிய நற்செய்கைகள் உடையவரோடு நட்பு செய். 3. பால் தருகிறவருக்கும் நஞ்சுதனைக் கொடுக்கின்ற பாம்பினைப் போன்றவர்களோடு பழகாதே. 4. மூர்க்கத்தன்மை உடையவர்களோடு நட்பு செய்யாதே. நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும். கொன்றை வேந்தன் **–ஔவையார்,**

கொள்ளத் தகாத தீய நட்பு துன்பத்தையே கொடுக்கும்.

நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்.
சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்.

**–உலகநீதி உலகநாதர்.**

கொள்ளத் தகாத தீயோர் நட்பின் தீமைகளைப் பற்றித்தான் உலகநீதியும் உணர்த்துகின்றது.

நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

**நறுந்தொகை அதிவீரராம பாண்டியர்.**

எவ்வளவு காலங்கள்தான் பழகினாலும் கீழ் மக்களின் தொடர்பு நீர்க்குள் பாசிபோல் நிலைத்து நிற்காது.

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே

**–நன்னெறி சிவப்பிரகாசர்.**

நல்லவர்களின் நட்பு நாள்தோறும் நன்றாக வளரும். தீயோர் செய்யும் நட்பு ஒரு நன்மையும் பயக்காது தேய்ந்து அழியும்.

ஊழா யினாரைக் களைந்திட்டு உதவாத
கீழா யி னாரைப் பெருக்குதல் யாம்போலும்
தீஞ்சொல் மழலையாய்! தேனார் பலாக் குறைத்துக்
காஞ்சிரை நட்டு விடல்.

**–பழமொழி நானூறு முன்றுறையரையனார்**

யாழினின்று எழும் இன்னிசை போன்ற மழலைச்சொற்களை உடையவளே! முறைப்பட தமக்கு உறவாய் அமைந்தவர்களின் தொடர்பைக் கைவிட்டு விட்டு, ஒன்றுக்கும் உதவாத கீழ் மக்களின் நட்பைப் பெருக்கிக் கொள்ளுதல் கேடு தருவதாகும். இனிமை நிரம்பிய பலாவினை வெட்டி விட்டு, எட்டி மரத்தை நட்டு வைத்து வளர்ப்பது போன்றதாகும். தீயோர் நட்பினால் ஒரு பயனும் இல்லை.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவுந் தீது .

**–மூதுரை ஔவையார்,**

தீயவர்களைக் காண்பதும், அவர்களுடைய பயனற்ற சொற்களைக் கேட்பதும், அவர்களுடைய தீய குணங்களைப் பற்றிப் பேசுவதும், அவரோடு கூடியிருத்தலும் தீமையே பயக்கும். அதனால் தீயறிவும், தீயொழுக்கமுமே ஏற்படும்.

பயன் கருதிப் பழகுவாரிடத்தில் உள்ளன்பு ஒரு சிறிதும் இருக்காது. உதட்டில் தேனொழுகப் பேசி பயனுள்ள காலத்து நட்பு கொண்டு, பயன் முடிந்ததும் கைவிடுவாரின் நட்பினைக் கொள்வதால் ஒரு பயனும் இல்லை. அத்தகையோர் தீய நட்பைக் கொள்வதை விட, இழத்தலே சாலச் சிறந்தது.

தீ நட்பு.
பக்கத்தில் இருக்கின்ற பகையாளி
பதமாய்ப் பிளந்திடும் கோடாலி
ஒப்புக்கு உறவாடி மகிழ்ந்திடுவார்
உதட்டில் புன்னகை புரிந்திடுவார்
உள்ளத்தில் வன்மந்தனை மறைத்து
உண்மைப் போலவே பழகிடுவார்!
அன்பு உள்ளத்தில் சிறிதுமின்றி
பயன்கருதிப் பழகுவார் தீநட்பை
தூக்கத்தில் வந்த கனவெனவே
தூக்கி எறிதல் நலம்பயக்கும்!

நன்றிகளுடன்,
**சு.அமுதமணி கல்யாணசுந்தரம்**
**திருவள்ளுவர் மன்றம்.**

மித்ரா
கிட்சன்

# கொரியன் சீஸ் கார்ன்
# Korean cheese corn





தேவையான பொருட்கள்: ஸ்வீட் கார்ன் -1 கப், மொசரில்லா சீஸ் -வெண்ணெய்- 50 கிராம், Mayonnaise- சில்லி ப்ளேக்ஸ் - சிறிதளவு, சர்க்கரை- 1 ஸ்பூன், உப்பு - சிறிதளவு, பூண்டு - 10 பல், வெங்காயம் - 2, சிகப்பு குடைமிளகாய்- 1, பச்சை குடைமிளகாய்-1.

செய்முறை : முதலில் 1 கப் ஸ்வீட் கார்ன் எடுத்து குக்கரில் 1 விசில் வைத்து வேக வைத்துக் கொள்ளவும். பிறகு வெங்காயம், பூண்டு, குடைமிளகாய் இவைகளை சிறிது சிறிதாக வெட்டி வைத்து கொள்ளுங்கள். பிறகு அடுப்பில் ஒரு நிணீஸீ வைத்து சிறிதளவு வெண்ணெய் சேர்த்து . அதில் வேக வைத்த ஸ்வீட் கார்ன் சேர்த்து இரண்டு நிமிடம் வதக்கி தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.பிறகு அதில் சிறிதளவு வெண்ணெய் சேர்த்து வெட்டி வைத்துள்ள பூண்டு பற்களை சேர்த்து வதக்கவும்.அதன் பிறகு வெங்காயம், சேர்த்து வதக்கவும். வெங்காயம் வதங்கயதும் குடைமிளகாய்களை அதில் சேர்க்கவும். ஐந்து நிமிடம் வதக்கி விடவும். அதன்பிறகு அதனுடன் வேகவைத்த ஸ்வீட் கார்ன் சேர்த்து இரண்டு நிமிடம் வதக்கி விடவும். பிறகு அதில் சிறிதளவு உப்பு, 1 ஸ்பூன் சர்க்கரை சேர்க்கவும். அதன் பிறகு அதில் Mayonnaise சேர்த்து கலக்கி பரப்பி விடவும். பிறகு அதன் மேல் மொசரில்லா சீஸ் எல்லா இடத்திலும் பரவும் படி நன்றாக அதிகமாக சேர்க்கவும். பிறகு கடைசியாகஅதன் மேல் சில்லி ப்ளேக்ஸ் சேர்க்கவும். பிறகு இரண்டு நிமிடம் மூடி வைக்கவும். இரண்டு நிமிடம் கழித்து பாருங்கள். ஆஹா கலர்புல்லான , அட்டகாசமான மிகவும் டேஸ்டான அசத்தும் சுவையில் கொரியன் சீஸ் கார்ன் ரெடி.

**ஸ்வீட் கார்ன்னில் அடங்கியுள்ள சத்துக்கள் :** ஸ்வீட் கார்ன் சாப்பிடுவதால் ஆரோக்கியத்திற்கும் சுவைக்கும் ஒரு சிறந்த சிற்றுண்டியாக விளங்குகிறது. இனிப்பு சோளத்தில் கொழுப்புகள் சோடியம் கொலஸ்ட்ரால் மற்றும் நிறைவற்ற கொழுப்புகள் குறைவாக உள்ளது. அதே நேரத்தில் வைட்டமின் சி மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளது.

குடைமிளகாயின் நன்மைகள் குடைமிளகாயில் கொழுப்புச்சத்து கொலஸ்ட்ரால் சோடியம் ஆகியன குறைவாகவே உள்ளது. இது உடல் எடையை குறைக்க உதவும்.வயது முதிர்வை தடுக்கும். தோளில் ஏற்படும் கருமை சுருக்கம் வறட்சியை போக்கி தோளுக்கு ஆரோக்கியம் தருகிறது. மூட்டு வலிக்கு மருந்தாக விளங்குகிறது.



**S.கவிதா**
**சிட்லபாக்கம்**

தொடர் 24



# மக்களின் வாழ்நாள் உரிமை

இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடு என்பதால் நல்ல தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் மிகப் பெரிய பொறுப்பு பொது மக்கள் கைகளில் தானிருக்கிறது!

இன்று பொது மக்களே வாக்குக்கு காசு வாங்கிக் கொண்டு தகுதியற்றவர்களை தலைவர்களாக கொண்டு வரும் நிலைக்கு நாடு போய் கொண்டிருக்கிறது!

வாழ்நாள் உரிமையை, எதிர்கால நல்வாழ்க்கையை பணத்திற்காக பொது மக்கள் விட்டுக் கொடுப்பது மாபெரும் தவறு என்பதை அவர்கள் முதலில் உணர வேண்டும்.



பொது மக்கள் அதைப் புரிந்து கொண்டு வாக்குரிமையை கிராம சபையிலிருந்து பாராளுமன்றத் தேர்தல் வரை செலுத்தினால் தான் இனி இந்த நாடு நலம் பெறும்!

விரைவில் பாராளுமன்றத் தேர்தல் வர இருக்கிறது! இந்திய துணைக் கண்டத்தின் எதிர் காலத்தை தீர்மானிப்பது இனி பொது மக்கள் கைகளில் தான் இருக்கிறது! நாம் வாக்குப் போடும் முன்பு இந்தியா என்ற நாடு எப்படி உருவானது, அதற்காக ஒரு மதத்தினர், ஒரு மொழியினர் மட்டும் தான் போராடினார்களா என்றும், இந்திய சுதந்திரம் பெற்ற பின், இந்திய ஒருமைப் பாட்டை அச்சாணியாக வைத்து இந்திய அரசியல் சட்டம் எப்படி உருவானது என்றும் நம் வாக்காளர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்!

இந்து, இஸ்லாமியர், கிருஸ்துவ, சீக்கிய மதத்தினர், மற்றும் இந்தி தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம் வங்காளம் மாராட்டியம் என்று பல மொழி பேசுபவர்கள் அனைவரும் சமம் என்று நம்பித் தான் எல்லோரும் இந்திய ஒன்றிய அரசில் இணைந்தார்கள். சமீப காலமாக இந்திய துணைக் கண்டத்தில் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு ஒரு மதத்தைச் சேர்ந்த, ஒரு மொழியைச் சேர்ந்த இன்றைய அரசியல் தலைவர்கள் மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களை மற்ற மொழியினரை தங்களுக்கு சமமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்ற போக்கில் நடந்து கொண்டு வருகிறார்கள்!



துடுப்பதி ரகுநாதன்

இது இந்திய அரசியல் சாசனத்தின் கூட்டாச்சி தத்துவத்திற்கு விரோதமானது. அரசியல் சாசனத்தில் சொல்லப் பட்டிருக்கும் மாநில அரசுக்கு உரிய அதிகாரங்களை, நிதிகளைக் கூட தர மறுக்கும் போக்கும் இன்று நீடித்து வருகிறது! மாநில சுய ஆட்சி, கூட்டாச்சி என்று தமிழ் நாடு அரசு போன்ற ஒன்றிரண்டு மாநிலங்கள் சொல்லிக் கொண்டிருப்பதால் ஒரு பயனும் இல்லை! இன்று வட இந்திய தலைவர்கள் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று சொல்கிறார்கள்! அவர்கள் போகிற போக்கைப் பார்த்தால் ஒரே மதம், ஒரே மொழி என்று சொல்லுவார்களோ என்ற பயம் வருகிறது!

இது நீடித்துக் கொண்டே போனால் இந்திய ஒருமைப்பாட்டிற்கு பங்கம் வருவது மட்டுமல்ல, உலகில் சில இஸ்லாமிய நாடுகளில் நடை பெறும் மதக் கலவரங்கள் எல்லாம் நம் நாட்டிலும் வந்து விடுமோ என்ற பயம் வருகிறது! அதை எல்லாம் சிந்தித்துப் பார்த்து பொது மக்கள் தான் தங்கள் தலைவர்களை வரப் போகும் தேர்தல்களில் தேர்ந்தெடுக்க வேண்டும்!

இன்றைய ஆட்சியாளர்கள், நேற்று ஆட்சி நடத்தியவர்கள் மற்றும் பல அரசியல் கட்சிகள், பல கூட்டணிகள், என்று தேர்தல் வரும் பொழுது பலரும் மக்களைத் தேடி வருவார்கள்! அரசியல்வாதிகளின் பெரும்பான்மையானவர்கள் உண்மையாக நாட்டின் நலனுக்காக அரசியலுக்கு வந்தவர்கள் அல்ல என்று தமிழ் நாட்டு வாக்காளர்களுக்கு நன்றாகத் தெரியும்! இந்த ஜனநாயகத்தில் வாக்கு கேட்டு வரும் வேட்பாளர்களில் யார் யார் மதத் திணிப்பு, மொழித் திணிப்பு போன்ற வேலைகளில் ஈடுபட்டு இந்திய ஒருமைப்பாட்டிற்கு தீங்கு ஏற்படுத்த மாட்டார்களோ அவர்களைத் தான் ஒன்றிய அரசுக்கு தமிழ் நாட்டு மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்!

பொதுவாக தமிழ் நாட்டு மக்கள் பகுத்தறிவு மிக்கவர்கள்! அதனால் அவர்கள் சிந்தித்துத் தான் தங்கள் வாக்குரிமையை செலுத்துவார்கள்!

அவர்கள் யாருக்கு தங்கள் வாக்குகளைச் செலுத்துகிறார்களோ அவர்களின் குறையும் அவர்களுக்குத் தெரியும்! இந்த ஜன நாயக முறையில் இருப்பதற்குள் நல்லதைத் தான் அவர்களால் தேர்ந்தெடுக்க முடியும்!

நீதிக்கதை

# புறா சொல்லும் பாடம்

சில புறாக்கள் ஒரு கோயில் மாடத்துல தங்கியிருந்தன வயது முதிர்ந்த ஒரு புறாதான் தலைவர். தினமும் காலையில் தலைவர் வழி காட்டி அழைச்சிகிட்டு போகுற இடத்துக்கு போய் இரை சாப்பிட்டுட்டு மாலையில தங்களோட இடத்துக்குத் திரும்பிடும்.

இதைக் கவனித்த வேடன் ஒருநாள் இரவு கோயில் அருகிலேயே தரையில் நிறைய தானியங்களைத் தூவி, அதன் மேலே ஒரு வலையை அமைத்து நான்கு மூலையிலும் குச்சி அடித்து வைத்துவிட்டு போனான்.

அதிகாலையில் எல்லா புறாவும் இரைதேடி கிளம்பும் போது கீழே கொட்டிக்கிடக்கும் அந்த தானியங்களைப் பார்த்தன. " இங்கேயே நம் தேவைக்கும் அதிகமான தானியங்கள் சிதறிக் கிடக்கின்றன; அதனால் நெடுந்தூரம் பறந்து போய் இரை தேட வேண்டாம்" என்று சில இளம் புறாக்கள் கூறின. அதற்கு தலைமைப் புறா,

"இத்தனை நாளில்லாமல் இன்றைக்கு இவ்வளவு தானியமா; எனக்கு இது சந்தேகமாக உள்ளது. மேலும் நம் முயற்சி இல்லாமல் தானே எதுவும் கிடைத்தால் அதில் ஆபத்து இருக்கலாம்; நான் போய் இரைக்கான இடத்தை தேர்வு செய்து வருகிறேன் " என்றது. அதற்குள் இளம் வயது புறாக்கள் ஒன்றுகூடி, "சுலபமாக கிடைப்பதை தலைவர் தடுக்கப் பார்க்கிறார்; வாருங்கள் இந்த தானியங்களை சாப்பிடுவோம் " என்று கூறி எல்லா புறாக்களையும் தானியங்கள் மீது இறங்கச் செய்தன.

அவ்வளவுதான், அடுத்த நொடி புறாக்களின் கால்கள் வலையில் சிக்கிக் கொண்டன. ஆபத்தை உணர்ந்த புறாக்கள் பொறுமையிழந்து சிறகுகளை அடித்தபடி " ஆபத்து, காப்பாற்றுங்கள்" என்று கதறத் தொடங்கின. அப்போது தலைவர் எல்லோரையும் அமைதிப்படுத்தியது. மேலும் "நான் சொல்வதை இப்போதாவது கவனமாகக் கேளுங்கள், நாம் வேடன் கையில் சிக்காமல் தப்பிக்கலாம். எல்லாரும் இறந்தது போல நடியுங்கள். வேடன் வலையின் நான்கு மூலைகளிலும் அடித்து வைத்திருக்கும் குச்சியை எடுத்ததும் நான் வேகமாகப் பறந்துவந்து வேடன் தலையில் கொத்துவேன்;அவன் வலிதாங்காது கத்துவான். அதை உங்களுக்கான எச்சரிக்கையாக கருதி எல்லாரும் ஒற்றுமையாக சிறகடித்து வலையுடன் வானத்தில் பறக்க வேண்டும்" என்று திட்டம் கூறியது. சிறிது நேரத்தில் வந்து பார்த்த வேடன் தண்ணீரில்லாமல் புறாக்கள் இறந்துவிட்டதாக எண்ணினான். " அடடா, இவை உயிருடன் இருந்தால் நல்ல விலைக்கு விற்பதால் நிறைய பணம் கிடைத்திருக்கும். பரவாயிலலை இதாவது கிடைத்ததே என்று வலையின் நான்கு மூலைகளின் முளைக்குச்சிகளை அகற்றினான். தாமதமில்லாமல் தலைமைப்புறா பறந்து வந்து வேடன் தலையில் கொத்தியது. வேடன் வலியில் " ஆ..அம்மா" என்று கத்தினான். இந்த ஒலியைக்கேட்ட மற்ற புறாக்கள் படபடவென சிறகடித்து வலையுடன் வானில் பறந்தன. அதன் கீழே வேடன் சிறிது தூரம்"ஐயோ..என் வலை." என்று கத்திக் கொண்டே ஓடினான்.



பறந்த புறாக்கள் ஒரு மலையைக் கடந்து சென்றபோது தலைமைப்புறா கீழிறங்க ஆணையிட்டது. அந்த இடத்தில் ஒரு எலி வலை இருந்தது. வலையுடன் புறாக்கள் இறங்கிதைப் பார்த்த எலி உள்ளே ஓடி பதுங்கியது.

தலைமைப்புறா, "எலி நண்பா,நான்தான் உன் புறா நண்பன் வந்திருக்கிறேன். ஆபத்திலிருக்கும் எங்களைக் காப்பாற்று" என்று கூறியது. வெளிவந்த எலி , " நண்பனான உனக்கு ஆபத்தென்றால் காப்பாற்றலாம்; என் சிறிய பற்களால் கடித்து எல்லாரையும் விடுவிக்க முடியாது" என்றது. "நம் நட்புக்காக இவர்களை நீ காப்பாற்றியே ஆகவேண்டும் " என்றது புறா.

நண்பனின் வேண்டுதலை மறுக்க முடியாத எலி வலையைக்கடித்து எல்லாரையும் விடுவித்தது.

விடுதலையடைந்த புறாக்கள் எலிக்கு நன்றி கூறிவிட்டு பறந்தன. இக்கதை மூலம் நாம் பெறும் படிப்பினை: உழைப்பில்லாமல் வருபவை ஆபத்து உள்ளவை.

அனுபவமிக்க வீட்டில் உள்ள பெரியவர் அறிவுரையைக் கேட்கவேண்டும்ஒற்றுமையே பலமாகும்; அதுவே வெற்றி தரும்.துன்பநேரத்தில் நண்பனைக் காக்க வேண்டும்.

சிறியவர்களும் சில நேரங்களில் பெரிய உதவியைச் செய்வார்கள்.

**பகிர்வு : புதுமை கந்தசாமி**

# உணவும் ஆரோக்கிய முறைகளும்!



**உ**ண்ணும் உணவில் ஆரோக்கியம் உள்ளது .திட்டமிட்டபடி உணவு வகைகளை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை இணைக்கும். சாப்பிட்ட மதிய உணவு ஜீரணமாகவில்லை என்றால்.. இரவு உணவை உட்கொள்வது விஷம் உட்கொண்டதற்கு சமம். பசி என்பது முந்தைய உணவு ஜீரணமாகிவிட்டது என்பதற்கான அறிகுறியாகும்.

சரியான தூக்கம் பாதி நோய்களை குணப்படுத்தும்..

அனைத்து பருப்பு வகைகளிலும், பச்சை கிராம் தான் சிறந்தது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. மற்ற பருப்பு வகைகள் அனைத்தும் ஒன்று அல்லது வேறு பக்க விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. உடைந்த எலும்பைக்கூட இணைக்கும் பூண்டு..

எந்த ஒரு பொருளையும் அதிகமாக உட்கொண்டால், அது சுவையாக இருப்பதால், அது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. மிதமாக இருங்கள். உடலுக்கு எந்த மருத்துவ குணமும் இல்லாத காய்கறிகள் இல்லை.. எந்த மருத்துவரும் நீண்ட ஆயுளைக் கொடுக்க முடியாது. கவலை ஆரோக்கியத்தை மோசமாக்கும்.எந்த உடற்பயிற்சியையும் மெதுவாக செய்யுங்கள்.

(வேகமான உடற்பயிற்சி நல்லதல்ல.)

உங்கள் உணவை மெல்லுங்கள்.

(உணவை அவசரப்பட்டு விழுங்க வேண்டாம். உமிழ்நீர் முதலில் செரிமானத்திற்கு உதவுகிறது.) குளியல் மன அழுத்தத்தை நீக்குகிறது. கெட்ட கனவுகளை விரட்டுகிறது. உணவு உட்கொண்ட பிறகு உடனடியாக குளிக்க வேண்டாம். (செரிமானம் பாதிக்கப்படுகிறது).

தூய்மையில் எந்த தண்ணீரும் மழைநீருக்கு நிகரில்லை. அஜீரணம் இருக்கும் போது வெற்று நீர் அருந்துவது மருந்தாக பயன்படுகிறது. எப்பொழுதும் புதியவற்றையே விரும்புங்கள்.. ஆறு சுவைகளும் உள்ள உணவை எடுத்துக் கொள்ளுங்கள். (அதாவது: உப்பு, இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு மற்றும் காரமானது).

உங்கள் வயிற்றில் பாதியை திடப்பொருட்களால் நிரப்பவும். (கால்பங்கு தண்ணீர் மற்றும் ஓய்வு காலியாக விடவும்.) உணவு உட்கொண்ட பிறகு சும்மா உட்காராதீர்கள்.

குறைந்தது அரை மணி நேரமாவது நடக்கவும். பசி உணவின் சுவையை அதிகரிக்கும்.. இன்னும் சொல்லப்போனால், பசிக்கும் போது மட்டும் சாப்பிடுங்கள். கவலை முதுமையை துரிதப்படுத்தும்.. சாப்பாட்டுக்கு நேரமாகும்போது, 100 வேலைகளைக் கூட ஒதுக்கி வைக்கவும்.

– மயிலாடுதுறை சம்பந்தம்


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044 - 23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

Name : MITRA TIMES
A/C no : 50200012576292
Bank : HDFC Bank
Branch : T.Nagar
IFSC : HDFC0000206

# வழியோர வியாபாரிக்கு உதவலாமே!

ஒரு_தள்ளுவண்டியில்_காய்கறி வியாபாரம் செய்யும் ஒருவரின் வித்தியாசமான சப்தம் என்னைக் கவர்ந்தது.

"சார் என்னிடமிருந்து காய்கறிகள் வாங்கினால், சூப்பர் மார்க்கெட்டுகளில் இருந்து காய்கறிகள் வாங்குவதை விட உங்களுக்கு ஐந்து நன்மைகள் அதிகம் அந்த நன்மைகள் என்னவென்று தெரிய வேண்டுமா".

திரும்பி பார்த்தேன். ஒரு அழுக்கு கைலியும் சட்டைக்கு பதில் தோளில் ஒரு துண்டும்அணிந்த ஒரு இளைஞன். பக்கத்தில் இருந்த செயறில் ஆறேழு வயதில் ஒரு பையன். அவன்தான் கேஷியர் என்று நினைக்கிறேன்.

நான் வாங்க நினைத்த என்னுடைய லிஸ்ட்டிலுள்ள அனைத்து காய்கறிகளும் இவரிடமும் இருக்கிறது.

இன்று இவரிடமிருந்து வாங்கினாலென்ன?. (வீட்டுக்காரிக்கு தெரிய வேண்டாம்).

"அந்த ஐந்து நன்மைகள் என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா". கண்டிப்பாக..... சார் என்னிடமிருந்து வாங்கும் காய்கறிகளுக்கு நீங்கள் ஜி எஸ் டி தரவேண்டாம்.

நூறு ரூபாய்க்கு ஐந்து ரூபாய் லாபம். முதல் நன்மை.

சார் நீங்கள் வாங்கும் பொருட்களை கொண்டு போக நான் தரும் கவர் ஃப்ரீ...

சூப்பர் மார்க்கெட்டில் இந்த கவருக்கு குறைந்தது ஐந்து ரூபாய் தர வேண்டும்.

( நாம் காசு கொடுத்து வாங்கும் கவரில் அவர்களுடைய விளம்பரம்).

இது இரண்டாவது நன்மை. மூன்றாவது நன்மை என்ன என்று அறிய ஆவலுடன் அவரைப் பார்த்தேன்.



சார் சூப்பர் மார்க்கெட்டில் அவர்கள் கேட்கும் விலையை நீங்கள் கொடுக்க வேண்டும். எங்களிடம் நீங்கள் விலை பேசி வாங்கலாம். நூறு ரூபாய் பொருளை 80 ரூபாய்க்கு கேட்டாலும் தருவோம்.

ஏனென்றால் எங்கள் வயிற்றுப்பிழைப்பு இது. எங்களுக்கு வேறு வருமானம் ஒன்றும் இல்லை. 20 ரூபாய் லாபம் இது மூன்றாவது நன்மை. சரிதான் என்று தலையாட்டிவிட்டு அவரையே பார்த்தேன்.

"சார் நான்காவது இந்த காய்கறிகள் பக்கத்து கிராமங்களில் நாங்களே இயற்கையாக பூச்சிக்கொல்லி மருந்துகள் ஒன்றும் தெளிக்காமல் விவசாயம் செய்தது.

இந்த காய்கறிகளை சாப்பிடுவதால் உடலுக்கு எந்த தீங்கும் வராது சார்... அவர் சொல்வது அனைத்தும் சரியாகவே எனக்கு பட்டது.

மேலும் சூப்பர் மார்க்கெட்டுகளில் அவர்கள் கேட்கும் விலையை கொடுத்து, விஷம் சேர்த்த காய்கறிகளை கியூவில் நின்று வாங்குவதற்கு தயாராகும் நாம் இதையெல்லாம் சிந்திக்கிறோமா?.....

சிந்தனையில் நிற்கும்போதே நான் கொடுத்த லிஸ்டில் உள்ள காய்கறிகளை பேக் செய்து கொடுத்தார். அவர் கேட்ட தொகையை கொடுத்தேன். பிறகு நான் அவரிடம், "எல்லாம் சரி ஐந்தாவது நன்மை என்னவென்று சொல்லவே இல்லையே" என்றேன் ஆவலுடன்.

"இது என்னுடைய மனைவி இவளுக்கு இரண்டு கிட்னியும் செயலிழந்து விட்டது. இவளுடைய மருத்துவத்திற்காக நான் யாரிடமும் கையேந்தியதில்லை.

நீங்கள் விலை பேசாமல் கொடுத்த இந்த பணத்தின் ஒரு பகுதி இவளுடைய மருத்துவ செலவிற்கு உபயோகப்படும். இதுவும் நீங்கள் செய்யும் ஒரு சாரிட்டிதான் இதற்குரிய நன்மை இறைவனிடம் இருந்து உங்களுக்கு கிடைக்கும்.

இதுதான் நான் சொன்ன ஐந்தாவது நன்மை. புன்னகையோடு அவர் சொல்லி நிறுத்தினாலும் அவருடைய கண்கள் நிறைந்திருந்தது நானும் கண்ணீரை மறைக்க முயன்று தோற்றேன். இது போன்ற துக்கங்களும், துயரங்களும் வழியோரங்களில் வியாபாரம் செய்யும் பலருக்கும் இருக்கலாம்.

நம்மால் இவர்களுக்கெல்லாம் உதவ முடியுமா?

கோடிக்கணக்கில் மூலதனமுள்ள சூப்பர் மார்க்கெட் முதலாளிகளுக்கும், கார்ப்ரேட்டுகளுக்கும் பாக்கெட் நிறைக்க நாம் கொடுப்பதில் ஒரு பங்கை இதைப்போன்ற வழியோர வியாபாரிகளுக்கும் கொடுத்து உதவுவது அல்லவா உண்மையில் தொண்டு..!!!

– சி.கவின், பண்டுருட்டி

# எம் பதில்கள்

### *நடிகர் விஜய் புதிய கட்சித் துவங்கி இருக்கிறாரே?*

அரசியலில் யார் வேண்டுமானாலும் ஈடுபடலாம். திராவிட இயக்கம் தொடங்கப்பட்ட காலம் முதல் நடிகர்கள் அரசியல் பங்கு பெறுவது காலங்காலமாக தவிர்க்க முடியாத ஒன்றாக வந்துள்ளது. திரைத்துறையில் இருந்து 5 பேர் முதலமைச்சராக தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ளனர். முன்னணி நட்சத்திரங்களில்

ஏற்கனவே கமல்ஹாசன் தனி கட்சி தொடங்கி அரசியல் நடத்தி வருகிறார். ரஜினி அரசியலுக்கு வருவேன் என்று சொல்லியே பல ஆண்டுகள் கழித்து அரசியலுக்கு வரவில்லை என்பதை தெரிவித்துள்ளார்.




தற்போது விஜய் அரசியல் கட்சி தொடங்கி 2026 இல் தங்கள் கட்சி சட்டமன்ற தேர்தலில் போட்டியிட போவதாக தெரிவித்திருக்கிறார். இதற்காக அவர் தன்னையும் தன்னுடைய தொண்டர்களாக அவர்கள் ரசிகர் மன்றத்தினரின் தயார் செய்து கொள்வதற்காக இரண்டு ஆண்டு காலம் அவகாசம் எடுத்துக் கொள்வதாக அறிவித்திருக்கிறார் அவர் தன்னுடைய அரசியல் அறிவிப்பு குறித்த கடிதத்தில் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொல்லி இருக்கிறார். திருவள்ளுவரின் குறள் வரியை பயன்படுத்தி இருக்கிறார். பொதுமக்களுக்கு உழைக்க வேண்டும் என்று முடிவெடுத்து திரைத்துறையிலிருந்து விலகி அரசியல் ஈடுபட இருப்பதாகவும் தெரிவித்துள்ள அவரது முடிவு மக்களுக்கு பலனளிப்புள்ளதாக அமைய வேண்டும் என்று மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

### *பணம் மட்டும்தான் வாழ்க்கையா?*

ஆமாம் . இந்தக் காலத்தில் பணம் இல்லாமல் எதுவும் இயங்காது. பணத்தை கையில பிடிச்சி, கொஞ்சம் தள்ளி வெச்சி யோசிச்சு பாத்தா… அடேங்கப்பா இந்த பணத்துக்கு எவ்வளவு பெயர்கள்…

தட்சணை, வரதட்சணை, காணிக்கை, பிச்சை, கட்டணம் , ஜீவனாம்சம், நஷ்டஈடு, தர்மம் .தானம், மொய்,கடன், அன்பளிப்பு, நன்கொடை, அபராதம், வரி, நிதி, சம்பளம், கூலி ,ஓய்வூதியம், லஞ்சம், வட்டி,முதலீடு, இலாபம், குருதட்சணை, டிப்ஸ் இவ்வாறு பல பெயர்களில் கைமாறும் இந்தப்பணத்திற்கு மாற்றாக வேறொன்றும் இல்லை. இந்தப் பணம் என்ற காகிதத்தைப் பெற…

சிலர் அன்பை இழக்கின்றனர்… சிலர்



பண்பை இழக்கின்றனர்... சிலர் நட்புகளை இழக்கின்றனர்... சிலர் உறவுகளை இழக்கின்றனர்... சிலர் கற்பை இழக்கின்றனர்... சிலர் கண்ணியத்தை இழக்கின்றனர்... சிலர் மார்க்கத்தை இழக்கின்றனர்... சிலர் மனித நேயத்தை இழக்கின்றனர்... சிலர் வாலிபத்தை இழக்கின்றனர்... சிலர் வாழ்க்கையையே இழக்கின்றனர்..

### அத்வானிக்கு "பாரத ரத்னா" விருது அறிவிக்கப்பட்டுள்ளதே?

அயோத்தியில் ராமர் கோயில் எழுந்துள்ள இந்த சூழலில் அவருக்கு அந்த விருது வழங்கப்படுவது பொருத்தமானது தான்.

ஒரு காலத்தில் பாஜக மூத்த தலைவர் லால் கிருஷ்ண அத்வானியின் பெயர் நாடு முழுவதும் பிரபலமாக இருந்தது. பிரதமர் பதவிக்கு பொருத்தமானவர் அத்வானி என்றும் அனைவரும் கருதினார்கள்.

1984ஆம் ஆண்டு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலையில் இருந்து 1998இல் ஆளும் கட்சி என்ற நிலைக்கு பாரதிய ஜனதா கட்சியை உயர்த்தியதில் அத்வானியின் பங்கு முக்கியமானது.

I am very happy to share that Shri LK Advani Ji will be conferred the Bharat Ratna. I also spoke to him and congratulated him on being conferred this honour. One of the most respected statesmen of our times, his contribution to the development of India is monumental. His is a life that started from working at the grassroots to serving the nation as our Deputy Prime Minister. He distinguished himself as our Home Minister and I&B Minister as well. His Parliamentary interventions have always been exemplary, full of rich insights. என்று மோடி அவர்கள் தனது x பக்கத்தில் வாழ்த்தியிருக்கிறார்.

அத்வானி ஆர்.எஸ்.எஸ்-ஸின் தீவர கொள்கையாளர் ஆவார். 2002 முதல் 2004 வரை இந்தியாவின் துணைப் பிரதமராகப் பணியாற்றியுள்ள இவர், 1977 முதல் 1979 வரை இந்தியத் தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சராகவும், 1999-2004 ஆம் ஆண்டுகளில் இந்திய உள்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சிக்கு வித்திட்டு, இன்றுவரை அக்கட்சியின் மதிக்கத்தக்க தலைவர்களுள் ஒருவராகப் போற்றப்படும் எல். கே. அத்வானி 1989 ஆம் ஆண்டு அயோத்தி விவகாரத்தினை கையிலெடுத்த அத்வானி அவர்கள், ராமர் பிறந்த புண்ணிய பூமி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த, இந்தியா முழுவதும் ரதயாத்திரைத் தொடங்கி, பல மாநிலங்களில் மக்கள் செல்வாக்கைப் பெற்றார். நாடே கொண்டாடிய ராமர் கோயில் உருவாக அத்வானி ஒரு காரணம் என்பது அவரது பெருமைக்கு எடுத்துக்காட்டு.

# திரையா? சிறையா? 2

## இரும்புக்காது



பிறந்தது முதல் தாயின் தாலாட்டு எனத் தமிழிசை கேட்டு வளர்ந்தவன் தமிழன். உழவுப்பாட்டு, நடவுப்பாட்டு, ஏற்றப்பாட்டு, உரல் இடிக்கும் போது பாடும் வள்ளைப்பாட்டு, வண்டியோட்டும்போது வண்டிப்பாட்டு, , காட்டுவழிசெல்லும் போது வழிநடைப்பாட்டு, இறைவனுக்குக் காவடி எடுத்து மலையேறும்போது காவடிச் சிந்து, இறந்தபோது ஒப்பாரி எனப் பிறப்பு முதல் இறப்புவரை தமிழிசை கேட்டவன் இப்போது தன்னிசை துறந்து, தன்னிலை தாழ்ந்து தூங்குகிறான். அதனால்தான், பலவகைச் சிந்துகளையும் சந்தங்களையும் பாடிய பாரதி, தாலாட்டுபாட மறந்த கவிஞன் ஆனானோ?

தமிழில் பாடல்களா இல்லை? சங்க காலப் பாடல்கள் முதல் இற்றைப் பாடல்கள் வரை தமிழ்ப் பாடல்கள் எத்தனை எத்தனை ஆயிரம்!!!

எவ்வளவு! திருப்புகழ் 3000 பாடல்கள் என்றால் ஒவ்வொன்றும் ஒரு சந்தம். தாயுமானவரும், பிற்காலத்தில் அவரையொட்டிப் பாடிய மசுத்தான் சாகிபும் பாடிய கண்ணிகள் இசைமயம். வள்ளலாரும் இசை மிகு பாடல்களுடன் சீர்த்தனைகள் (கீர்த்தனைகள்) பாடியுள்ளார். தேவநேயப் பாவாணரும் ஓர் சீர்த்தனை பாடியுள்ளார். தெலுங்கிசை மூவர் கீர்த்தனைகள் பாடியதற்கு முன்பே, சீர்காழி முத்துத்தாண்டவர் (1525 – 1625), அருணாசலக் கவிராயர் (1711 – 1779), தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை (1712 – 1787) ஆகிய மூவரும் தமிழில் சீர்த்தனை (கீர்த்தனை) பாடியுள்ளனர். கோபாலகிருட்டிண பாரதியாரின் நந்தனார் கீர்த்தனை, மயிலாடுதுறை வேத நாயகர் (சர்வ சமயக் கீர்த்தனை முதலியவை புகழ்மிக்கன. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து ஓர் பாடல் உலக நாடுகள் அவை வரை பாடப்பெற்றது. பாரதியாரை உருவாக்கியவை சிந்துப் பாடல்களே! பாரதியார் மட்டுமல்லர், பாரதிதாசனும் இசைப்பாடல்கள் பாடினர். சீர்காழி மூவர் முதல் இன்றுள்ள திரைப்பாடகர்கள் வரை இனிய தமிழிசை வளர்ப்பவர்களே!

ஆனால் தமிழுக்கான இடம் ?

அக்காலத்தில் ........ தெலுங்கிசை பாடி, இறுதியாக..... "துக்கடா"எனத் தமிழ் பாடுவர்; இன்றும் வானொலி, தொ. கா., இசைமேடை நிகழ்வுகளில்அப்படித்தான்!

ஓர் முறை சீர்காழித் தமிழிசை மூவர் விழாவில் புகழ் பெற்றிருந்த அம்மையார் இசைபாடினார்; ஆனால் தொடங்கும்போது முதற்பாடல் "வாதாபி கணபதி"

நிகழ்ச்சி முடிந்தபின்,வினவியதும், நான் வணங்கும் கடவுட் பாடல் என்றார். "வீட்டில் தெலுங்கு, சமற்கிருதம் பாடிக் கும்பிட்டுவிட்டு வந்தது போதாதா?"

திருவையாற்று தியாகையர் விழா மேடையில் தண்டபாணி தேசிகர் தமிழ்ப் பாடல் பாடியதால் கழுவினார்கள். தில்லையில் தேவாரம் பாட மேலே ஏறிவந்த ஆறுமுகச்சாமியைத் தள்ளி விட்டார்கள்; கையை முறித்தார்கள். திருவரங்கத்திலே இறைவன் அழைத்ததால், சுவருக்கு வெளியே பள்ளு நாடகம் நடத்தவிட்டார்களாம். இப்போது, குசுபு, "சேரி மொழி" என்கிறார். நல்ல தூய தமிழ்ச் சொற்களைப் பாமரர்கள் ஏழைகள் தாழ்த்தப்பட்டோர் பேசுகின்றனர் என்பதால் தாழ்ந்த சாதி மொழி என்றனர்.

இவர்களுடைய சாதிப் பாகுபாடு மொழி, கலை, பாக்களின் வகைகள் என வகைப்படுத்தும் போது கூட உட்புகுந்தது. இவை உயர்சாதி எழுத்துகள், இவை உயர்சாதிப் பண், இவை உயர் சாதிப் பாவகைகள், இவை உயர் சாதி இலக்கியங்கள், இவை உயர்சாதி சொற்கள் என்றனர். சாதம் என்பது உயர்சாதிச் சொல், சோறு என்பது தாழ் சாதிச் சொல். நேத்ரம் என்பது கடவுளுக்குரியது, கண் என்பது மனிதனுக்குரியது என்று உவேசா நம்பினார். ஓர் மடத்தில் சாப்பிடும் போது "சோறு" என்று கேட்டவனை ஓங்கிச் சோற்றுக்கையாலேயே முதுகில் அறைந்தார் மடத் தம்பிரான். தமிழை நீச்ச (நீசர் / தாழ்ந்தவர்) மொழி என்றதுடன், சமணர் பயன்படுத்திய பிராகிருத மொழியையும்நீச்சமொழி என்றனர்.தமிழைத் தாழ்வாகக் கருதும் மூளைச்சலவை தமிழர்களிடம் திணிக்கப்பட்டிருந்ததால், பிறமொழிகளைத் தூக்கித் தலை மேல் வைத்துக் கொண்டனர். கோயில் / கடவுள் வழிபாடு, சடங்குகளில்சமற்கிருதத்தில், இசை தெலுங்கில், நீதிமன்றங்களில் ஆட்சி அலுவலகங்களில் ஆங்கிலம் என ஏற்றனர். தெலுங்குப் பாடல்களே மேடையில் வீற்றிருந்ததால், தமிழிசை வளரவில்லை. இசைமேடைகளில் கோயில்களில் சமற்கிருதத்துடன் தெலுங்கிசையே இன்றும் ஒலிக்கிறது.

"தமிழ்ப் பாடல்களா இல்லை ? ....

எந்த மேடையாக இருந்தாலும்.....

எதற்கு "வாதாபி கணபதி ....."

என்று திரும்பத் திரும்ப .....?

"தமிழனுக்கு இரும்புக்காது" ........ என்றார் பாரதியார்.

– பா. இறையரசன்



# நல்லவர்களைத் தேடாதீர்கள்

உழைக்காமல் பணக்காரனாக விரும்பும் யாரும் அறிவாளி அல்ல.

லாட்டரி டிக்கட்டுகளை நம்புகிறவர்கள், சினிமாவில் வருவது போல் முதல் காட்சியில் ஆட்டோ ஓட்டி விட்டு அடுத்தக் காட்சியில் பென்ஸ் கார் ஓட்டும் கதாநாயகனைப் போல ஆக விரும்புகிறவர்கள்,

அதிர்ஷ்டத்தால் முன்னுக்கு வர ஆசைப்படுகிறவர்கள், கோவில் கோவிலாகச் சுற்றி வந்தால் கடவுள்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு ஏதாவது கொட்டிக் கொடுக்கும் என்று நம்புகிறவர்கள்.

இவர்கள் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா. தயவு செய்து வெளியே வாருங்கள். உழைக்காமல் முன்னேற முடியாது.

உழைக்காமல் தற்காலிகமாக மேலே வந்தவர் ஒரு போதும் நிலைக்க முடியாது. புரிந்துக் கொள்ளுங்கள். உழைப்பு என்றதும் கல் உடைப்பது, உழுவது, கஷ்டப்பட்டு பாரம் சுமப்பது என்று பொருள் கொள்ள வேண்டாம்.

பாடுபடுவது, சிரமங்களை மகிழ்வுடன் ஏற்பது, சினிமா, சீட்டு, , சிகரெட்டு என்கிற இளவயது இன்பங்களில் தன்னைத் தொலைக்காமல் பல மணி நேரம் படிப்பது கூட உழைப்பது தான். பல மைல் பயணித்து பள்ளிக்கும் கல்லூரிக்கும் போய் வருவது கூட உழைப்புத் தான்.

சோம்பி இராத சுகம் தேடாத எல்லா முயற்சிகளும் உழைப்புத் தான். இப்படி உழைத்தவர்கள் தான் உயரமான இடங்களில் பின்னர் உட்கார்ந்தவர்கள்.

கடின உழைப்பு வெற்றியைத் தராவிட்டாலும், வெற்றிக்கான வாய்ப்பை நிச்சயம் அதிகப்படுத்தும்.

வெறுப்பாக இருக்கிறதே என்று வேறொன்றைத் தேடாதே, அது வேதனையாகத்தான் இருக்கும்.

நிம்மதி என்பது இருப்பதில் திருப்திபடுவது தானே தவிர இல்லாததிலும் இழந்ததிலும் தேடுவதல்ல.

சமுதாயத்தில் நல்லவர்களைத் தேடாதீர்கள். மாறாக நீங்களே நல்லவர்களாக இருங்கள்.

சிறந்ததைத் தேடுபவர்கள் தேடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.கிடைத்ததை சிறந்ததாக்குபவர்கள் சந்தோசமாக வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.



# நீங்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா!

ஒரு மனிதன் நலமாக இருப்பதற்கு அவன் கவலையில்லாமல் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதும் ஒரு காரணமாகும் அப்படி எல்லோராலும் இருக்க முடியாத சாத்தியம் சமூகத்தில் உள்ள சூழல் நிலவுகிறது. எப்போதும் சந்தோசமாக இருப்பவர்களுக்கு இயற்கையாகவே சில குணங்கள் இருக்கும்._

அல்லது அனுபவத்தின் மூலம் அந்த பழக்கம் வந்திருக்கும். அவர்களுடைய சந்தோசத்தின் ரகசியங்கள் என்னவென்று பார்ப்போம். நாம் யார் என்பதை எப்போதும் ஆடைகள் மூலமும் பந்தாவான வார்த்தைகள் மூலமும் வெளிப்படுத்திக் கொள்ள ஆசைப்படுவோம்._இந்த வெளிக்காட்டிக் கொள்ளும் பழக்கத்தால் நம்மை யாராவது பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு கூடுகிறது.

அந்த எதிர்பார்ப்பு தோல்வியில் முடியும் போது நம்முடைய சந்தோசத்தை இழக்கிறோம்.

ஆகையால் நீங்களும் தான் யார் என்பதையும் எப்பேர்பட்ட ஆள் என்பதையும் வெளியில் காட்டிக்கொள்வதை நிறுத்திக்கொள்ளுங்கள்.

நாம் அதிகமாக பேசும்போது தேவையான வார்த்தைகளுக்கு மேல் அதிக வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். அப்போது என்னவாகும்?_

எதிரே உள்ளவர்கள் அவற்றைக் கவனிக்க மாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு நம்மிடம் பேச விருப்பம் இல்லை என்று நாமே எண்ணிக்கொண்டு வருந்துகிறோம். அதேபோல் அந்த அதிக வார்த்தைகளில் உங்களை மீறி கரடு முரடான வார்த்தைகளைக் கூறிவிட்டு, பின் நீங்களே கஷ்டப்படுகிறீர்கள்.



எஸ்.சூர்யா

சந்தோசமாக உள்ளவர்கள் தினமும் புது புது விஷயங்களைத் தெரிந்துக் கொண்டு எதாவது தினமும் கற்றுக்கொள்கிறார்கள்._அதனால் ஏற்படும் ஒரு திருப்தியும் அறிந்துக் கொண்ட விஷயத்தின் விளைவுகளும் அவர்கள் சந்தோசமாக இருக்கக் காரணமாகிறது. ஆனால் நாம் எந்த வேலைகளும் இல்லையென்றாலும் எதையும் கற்றுக்கொள்ள முன் வருவது கிடையாது. அந்த நேரத்தில் தேவையற்ற சிந்தனைகளில் மூழ்கி எதையாவது நினைத்து வருத்தம் கொள்கிறோம்.

மகிழ்ச்சியாக இருப்பவர்கள் மற்றவர்களுக்கு முடிந்த அளவு உதவியோடு இருப்பார்கள்.

அதேபோல் யாரையும் எதிர்பார்க்காமல் அவர்களுக்கு அவர்களே உதவி செய்துக் கொள்வார்கள்.

மற்றவர்களுக்கு உதவி செய்து அவர்கள் முகத்தில் சிரிப்பை பார்ப்பது அவர்களுக்கு மன திருப்தியை ஏற்படுத்தி மகிழ்ச்சியாக்கும். உண்மையில் ஆற்றல் என்பது ஒரு தொற்று._ஆகையால் அவர்கள் சிரிக்க ஆரம்பித்து மற்றவர்கள் சிரிக்க காரணமாவார்கள்.

புன்னகையுடன் வரவேற்பதும் புன்னகையுடன் பழகுவதும் புன்னகையுடன் அனுப்பி வைப்பதும் அவர்களின் குணமாகும். அவர்கள் மனதைக் காயப்படுத்தும் விஷயங்களையும் அவர்களுக்கு தேவையில்லாத விஷயங்களையும் தவிர்த்துவிடுவார்கள்._ அவர்களைப் பற்றி யார் என்ன கூறினாலும் நல்லதை மட்டும் கேட்டுக்கொண்டு மற்றதை அங்கயே விட்டுவிடுவார்கள்.

அவர்களின் இந்த ஆறு குணங்களை நாமும் மனதில் வைத்துக்கொண்டு எப்போதும் மகிழ்ச்சியாக இருப்போம்.

# நம் உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கும் வாழைப்பூ!



**வா**ழைப்பூவில் நமக்கு எக்கச்சக்கமான நன்மைகள் கிடைக்கிறது.வாழைப்பூவில் இருக்கும் அற்புத பயன்களை தெரிந்து கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம்.

வாழைப்பூ அதிகமாக சாப்பிடுவதால் நம் உடலுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ஏனெனில் வாழைப்பூவில் அதிகமான அளவு நார்ச்சத்து நிறைந்துள்ளது. இது நீண்ட நேரத்திற்கு வயிறு நிறைவாக வைத்திருக்கும்.

மலச்சிக்கல் மற்றும் செரிமான கோளாறு போன்ற வயிறு பிரச்சனை உள்ளவர்களுக்கு வாழைப்பூ பெருமளவில் உதவுகிறது.

வாழைப்பூ அதிகமாக சாப்பிடும் போது இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்தி வைப்பது மட்டுமில்லாமல் இறப்பை புற்றுநோய் வராமல் காக்கிறது.

வாழைப்பூ தொடர்ந்து சாப்பிட்டு வருவதன் மூலம் டைப் 2 நீரிழிவு நோயில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

இப்படி வாழைப்பூவில் இருக்கும் அற்புத பயன்களை தெரிந்து கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம்.



உலக மொழிகளில்..
மொழி பெயர்க்க முடியாத
அழகியல்..
மழலை இவர்களின் புன்னகை..!!
அழகு!

# கடக ராசிக்காரர்கள் பரிகார ஸ்தலம்





# அருள்மிகு ஆதி காமாட்சி உடனுறை கற்கடேஸ்வரர் ஆலயம்

1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஆதி காமாட்சி அம்பாள் சமேத கற்கடேஸ்வரர் ஆலயம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மணவூரில் அமைந்துள்ளது. ஜயந்தன் நண்டின் வடிவத்தில் இறைவனை வழிபட்டதால், இந்த ஆலயம் கடக ராசியைச் சேர்ந்தவர்கள் அவசியம் வழிபடவேண்டிய தலம். சிவபெருமானுக்கு பாலபிஷேகம் செய்து, அந்த அபிஷேகப் பாலை அருந்துவதால் எப்படிப்பட்ட நோய்களும் நீங்கும் என்பது நம்பிக்கை. கேன்சர் எனப்படும் புற்று நோய் உள்ளவர்கள் வழிபாடு செய்தால் நோய் நீங்கும்.

சென்னை அரக்கோணம் ரயில் பாதையில் மணவூர் உள்ளது. இதில் பல கோயில்கள் உள்ளன, அவற்றில் மிகவும் பிரபலமான மற்றும் நன்கு அறியப்பட்ட கோயில் திருநந்தீஸ்வரர் கோயில் ஆகும், இங்கு சிவபெருமான் அகஸ்திய முனிவருக்கும் நந்திக்கும் திருவாலங்காடு விஜயத்திற்குப் பிறகு கல்யாண கோலத்தில் தரிசனம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. திருநந்தீ ஸ்வரர் கோவிலுக்கு மிக அருகில், சமமான பழமையான கற்கடேஸ்வரர் கோவில் உள்ளது.

இந்திரனின் மகனான ஜெயந்தன், எரிச்சலூட்டும் செயல்களுக்குப் பெயர் போனவன். இதன் காரணமாக அவர் அடைந்த சாபங்களின் நிகழ்வுகளை பல புராணங்கள் மேற்கோள் காட்டுகின்றன. ஒரு சமயம் ஜெயந்தன் வழியில் அத்திரி முனிவரைச் சந்தித்தார். அவருக்கு மரியாதை செலுத்துவதை விட அல்லது அவரை வாழ்த்துவதை விட, முனிவர் நண்டு போல் நடக்கிறார் என்று கேலி செய்தார். அவனுடைய ஆணவத்தால் கோபமடைந்த முனிவர் அவனை ஒருத்தியாகும்படி சபித்தார்.

மனவேதனை அடைந்த ஜெயந்தன் தன் சாபத்திற்கு மன்னிப்பும் பரிகாரமும் தேடினான். அத்திரி முனிவர் அவரை திருவாலங்காடு செல்லச் சொன்னார், அங்கு நடராஜப் பெருமான் தனது தெய்வீக நடனத்தை காரைக்கால் அம்மையாருக்குக் காட்டினார். அவரை வணங்கிவிட்டு, ஜெயந்தனை மணவூரை அடைந்து, திருநந்தீஸ்வரரை வணங்கித் தன் வடிவம் பெறும்படி வேண்டினார். ஜயந்த யோசனைப்ப செய்தார். மணவூருக்கு வந்து நண்டு வடிவில் திருநந்தீஸ்வரரை வழிபட்டார். அவர் தனது கோவிலுக்கு அருகில் கார்கட தீர்த்தம் என்ற குளத்தை தோண்டினார். அதன் கரையில் இறைவனை தியானித்தார்.

நாட்களும் மாதங்களும் கடந்தன. ஒரு நாள், அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, ஒரு பிரகாசம் ஏற்பட்டது, இறைவன் சுயம்பு லிங்கமாக அவர் முன் தோன்றினார். நண்டு அவனுடைய கருணையால் மூழ்கி, அவனிடம் பிரார்த்தனை செய்து, அவன் செய்ததைப் போலவே அவன் தன் உண்மையான உருவத்தை அடைந்தான்.

ஜெயந்தன் தனது இல்லத்திற்குச் செல்வதற்கு முன் குலதெய்வத்திற்கு அபிஷேகம் மற்றும் பூஜைகள் செய்தார். மணவூர் கோட்டமாக இருந்த தொண்டைமண்டல மன்னர்களால் ஒரு கோயில் எழுப்பப்பட்டது. பொய் சொல்ல பிள்ளையார் மற்றும் காமாட்சி தேவிக்கு சன்னதிகள் சேர்க்கப்பட்டன. கடக ராசி அல்லது கடக ராசியில் பிறந்தவர்கள் கர்கடேஸ்வரரை வழிபட இங்கு வந்தனர். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இறைவனுக்கு பால் அபிஷேகம் செய்தும், வெல்லம் சாற்றியும் சாந்தம் பெறுவதாகவும் நம்பப்படுகிறது.

சிறப்பு வாய்ந்த இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் 2020ல் நடைபெற்றது.

தொடர்புக்கு: 8098743152. ந.சீனிவாசன்.

# ஆசிரியர் பங்கேற்ற பிறந்த நாள் நிகழ்ச்சி!




சென்னை தொழிலதிபர் பெரம்பூர் திரு. சரவணன் – திருமதி தேவி இணையரின் பேரனும், திரு.அசோக் – திருமதி ராஜகுமாரி இணையரின் பேரனும், திரு.சரத் – திருமதி.வித்யா இணையரின் மகனுமான கனீஸ் முதல் வருட பிறந்த நாள் நிகழ்ச்சியில் மித்ரா குழும நிறுவனரும், மித்ரா டைம்ஸ் மாத இதழ் ஆசிரியருமான திரு.எம்..எஸ்..மூர்த்தி அவர்கள் பங்கு பெற்று குழந்தையை வாழ்த்தினார். உடன் மூத்த வழக்கறிஞர் திரு. பாண்டியன், ராதா எக்ஸ்போர்ட் திரு.கிருஷ்ணன் அவர்கள்.

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 February 2024

# ஆசிரியர் பங்கேற்ற நிகழ்ச்சி!





தேனியில் நடைபெற்ற திண்டுக்கல் மாவட்ட நீதிபதி திரு.கே.கருணாநிதி – திருமதி.சுகந்தி இணையரின் மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கு கொண்டு மித்ரா குழும நிறுவனரும், மித்ரா டைம்ஸ் மாத இதழ் ஆசிரியருமான திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்கள் மணமக்களை வாழ்த்தினார். உடன் ராதா எக்ஸ்போர்ட்ஸ் திரு.கிருஷ்ணன் அவர்கள்.

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY